ஸ்ரீ சாரதா தேவியார் சரித்திரம்.

பெரி.14 சிவமயம்
வெ. பெரி. பழ. மு. க.
பாகனேரி.

14 AUG 1934

ஸ்ரீ சாரதா தேவியார் சரித்திரம்.

3107

ஸ்ரீ சாரதா மாதர் மந்திரம்.
வீரேஸ்வர விலாசம், பிரேசர் டவுன், பேங்களூர்.

பேங்களூர்:
வெஸ்ட் & கொ., நேஷனல் அச்சுயந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

1933.

V. PR. PL. M. ... CHETTIAR

All rights reserved] [விலை அணு 6.

ஸ்ரீ சாரதா தேவியார்.

அட்டவணை.

பக்கம்.

முகவுரை i
ஸ்ரீசாரதாதேவி ஸ்தோத்திரம் 1
ஸ்ரீசாரதா தேவியார் திரு அவதாரம் 7
தெய்வப்பொருத்தம் 8
விவாக ஏற்பாடு 9
ஸ்ரீசாரதாதேவியார் திருமணம் 10
ஸ்ரீசந்திரமணி தேவியார் வியாகூலம் 11
ஸ்ரீராமகிருஷ்ணரைச் சந்தித்தல் 13
ஸ்ரீதோதாபுரி ஸ்வாமி உபதேசம் 14
அற்புத இல்லறவாழ்க்கை ... — ... 14
தேவியாரைப் பயிற்றுதல் 15
ஒரு சம்பவம் 16
அளவிலா பேரானந்தம் அடைந்தது 17
ஊர் வம்பு 18
ஸ்ரீசாரதாதேவி முதன்முதல் தக்ஷிணேஸ்வரம் அடைதல் 19
வழியில் அதிசயமான காட்சி... 20
ஸ்ரீஇராமகிருஷ்ணர் தரிசனம் 21
ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்... 22
ஷோரஷி பூஜை... 23
தெய்வீக வாழ்க்கை நாட்கள்... 25
சரியான விடை... 26
பெரும் சோதனை 27
ஸ்ரீசாரதாதேவியாரை லோகமாதாவாக பாவித்தல் ... 28
ஒரு உத்தம ஸ்திரி சமாதியில் அமர்ந்தது... ... 29
ஒரு ஸ்திரியைத் தேவியார் அனுகிரஹித்தல் ... 29
இலட்சுமி நாராயண மார்வாடியின் காணிக்கை ... 30
கள்ளர் காளிகோயில் 31

திருடக் கள்வத்தகப்பனார் 32
கொடூரமான வயிற்றுக்கடுப்பால் வருந்தியது ... 34
பாணிவூதி திருவிழாவுக்குப்போக மறுத்தல் ... 35
பதிசேவை 37
தாரகேஸ்வரரை வரம் கேட்டல் 38
ஸ்ரீசாரதாதேவியார் நித்திய சுமங்கலியாய் விளங்குதல் 39
ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியான பிற்பாடு 39
சகோதரி நிவேதிதா மொழிகள் 40
பிரமசாரணி சிஷ்யர்கள் 41
ஸ்ரீசாரதா மாதர் மந்திர ஸ்தாபனம் 46
முடிவுரை 48
அநுபந்தம் 49
இந்திய மாதர் முன்னேற்றம் 49
பூர்வகாலத்து பெண்மக்களின் நிலைமை 50
தற்காலத்து இந்திய மாதர்களின் நிலைமை .. 51
முன்னேற்றத்திற்கு வழிகள் 52
குருசிஷ்ய சம்வாதம் 57

பிழை திருத்தம்.

பக்கம்	வரிசை	பிழை	திருத்தம்.
1	20	சுதான் பாரத	சுதானபாரத
1	29	பாரம்	பராம்
2	11	பிருஹாமிருத	புருஹாமிருத
3	12	நஸ்தாரக்ஷ	நஸ்ஸதாரக்ஷ
5	23	கிருஹீத்வ	கிருஹீத்வா
6	8	விஷிஞ்சு	விஷிஞ்ச
9	22	ஸ்ரீத்வா	ஸ்ரித்வா
22	24	பிள்ளை இராணி	பிள்ளை. இராணி
32	15	அவருக்ரு	அவருக்கு
41	9	ற்மூறும்	முற்றும்

INTRODUCTION.

Of **SRI SARADA DEVI**—the Holy Mother of the **Ramakrishna Brotherhood**-the late **Sister Nivedita** has remarked "To me it has always appeared that she is Sri Ramakrishna's final word, as to the ideal of Indian Womanhood. But is she the last of an old order, or the beginning of a new? In her, one sees realised, that wisdom and sweetness to which the simplest of women may attain. And yet to myself the stateliness of her courtesy, and her great open mind. are almost as wonderful as her sainthood."

Indeed, in Holy Mother, we find realised the selfless single hearted devotion of **Sita**, the wonderful fidelity and tender love of **Savitri**, the burning renunciation of **Maitreyi** the profound wisdom of Brahamavadani, **Gargi**. In these women Ancient India showed to what eminence of spiritual culture Indian Womanhood couldrise and **Sri Ramakrishna** showed in **Holy Mother**, that it is still possible for modern Hindu women to do the same provided they remain faithful to their traditional discipline, and spiritual ideal of life.

As **Swami Vivekanandaji** used to tell often that the purpose of Sri Ramkrishna's marriage was to show to the world the true ideal of marital life, marriage means not for a Hindu, an opportunity and passport for self indulgence, but a stricter measure of discipline for self absorption and self dedicatîon.

And the wonderful point in it is, that **Sri Sarada Devi** even in her young age understood almost instinctively, what it means to be a real **Sahadarmini** of her Lord, and so allowed herself to be moulded freely by the master hand of the God intoxicated man. It is the sacred duty of man to ennoble, exalt, and sublimate, the life of the woman vouchsafed to his care and it is equally a sacred task of the woman to understand and enter into the very soul of her husband through love and intuition.

SELFLESS LOVE & PURITY alone can develop intuition, and open the portal of heart for Divine entrance.

Holy mother was unlettered, and practically had very little communication from the outside educated world in the early parts of life, as she very strictly observed **Purdah.**

But such was her wonderful inner light, that she could solve in her own simple homely language, the most intricate of philosophical problems or other knotty points of the theological kind. Even her advices on common walks of life and wordly duties had a stamp of keen insight and breadth of vision.

This clearly shows that **true education means the culture of the soul** and not knowledge, or filling the brain with mass of undigested informations. When one catches intuitively the vision of the true, scales fall from his eyes, and the heart of everything stands revealed to that inner gaze. This was the secret of knowledge and fullness the saintly life of Holy Mother brought to her.

So her life is a revealation of wonderful import, and the modern India, especially her womankind, who are making a great bid for western type of culture can learn a good deal from this simple saintly life of a village woman whose life had been like beautiful fragrant flower hidden in some obscure corner of a garden, but, being wafted by gentle breeze, diffuses its aroma over the land, gladdening the heart of all.

May this little brochure on our beloved Holy Mother's life be of help to the sons and daughters of this **Punya Bhumi.**

Om Shanthi ! Shanthi !! Shanthi !!!

SRI RAMAKRISHNA ASHRAMA, DELHI.

Swami Sharvananda.

முகவுரை.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண சகோதர சங்கத்தின் பரிசுத்த அன்னையாகிய ஸ்ரீசாரதா தேவியாரைக் குறித்து (ஸ்ரீ சுவாமி விவேகானந்தருடைய ஆங்கிலேய சிஷ்யையான) சகோதரி நிவேதிதா கூறிய உண்மை வாக்கியங்கள் வருமாறு:—

“இந்திய நாட்டிலேயுள்ள பெண்மக்களுக்குரிய உயரியக் கொள்கைகளுக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டும் திருஷ்டாந்தமாக ஸ்ரீசாரதா தேவியாரை ஸ்ரீராமகிருஷ்ணர் தோற்றுவித்தாரென எனக்கு எப்பொழுதும் புலப்பட்டது. ஆனால், அவ்வம்மையார் மிக புராதனகாலம் முதல் வருகின்ற மாதுசிரோன்மணிகள் பரம்பரையில் கடைசியாக உதித்தவரா, அல்லது இனி வரப்போகின்ற புதிய பரம்பரையில் முதலில் வைத்தெண்ணப்படுபவரா? எந்தப் பெண்மணியும் அடைதற்குரிய ஞானமும், இனிமையும், அவரிடத்திலே தெளிவாய்க் காணப்பட்டன. இருந்தபோதிலும் வினயமும், அகன்ற சிந்தையும் பொருந்திய அவரது வாழ்க்கையானது அவரது தெய்விக வாழ்க்கையைப் போலவே அற்புதமாகவே எனக்குக் காணப்பட்டது.”

சீதா தேவியினது சிறந்த ஒரு மனதாகிய பதிபக்தியும், சாவித்திரியினது அன்பும், அதியற்புத கற்பு விசுவாஸமும், மைத்ரேயினது சிறந்த துறவொழுக்கமும், பிரமவாதினி கார்க்கியினது நிறைந்த ஞானமும், பரிசுத்த அன்னையாரிடத்து ஒருங்கு திரண்டு காணப்பட்டன.

மேற்குறித்த பெண்மணிகளின் மூலமாகப் பழைய இந்தியா பெண்மக்களின் ஆத்மீக உயர்ச்சியை எடுத்துக் காட்டியது. பெண்மக்கள் தொன்று தொட்டு வருகின்ற பயிற்சியோடும்,

ஆத்மீக வாழ்க்கையோடும், இருப்பார்களாயின், இக்காலத்தி லுள்ள இந்தியப் பெண் மக்களும், புராதன காலத்து உயர்வை அடைதல் கூடுமென்பதைப் பரிசுத்த அன்னையார் மூலமாக ஸ்ரீராமகிருஷ்ணர் எடுத்துக் காட்டினர்.

திருமணமென்பது இந்துக்களுக்குக் கேவலம் விஷய சுகானுபவத்திற்கு வழியாகாமல் தூய நெறியிலே செம்மையாக ஒழுகி, ஆத்ம நிவேதனஞ்செய்து, ஆத்ம லாபத்தை அடைவதற்குரிய மார்க்கமாகும். இந்த உண்மையை உலகிற்கு உணர்த்தும் பொருட்டாகவே ஸ்ரீராம கிருஷ்ணர் மணம் முடித்துக் கொண்டாரென்று ஸ்ரீசுவாமி விவேகானந்தர் சொல்வதுண்டு.

மிக இளம்பிராயந்தொட்டே ஸ்ரீசாரதா தேவியார்—சஹதர்மிணியாக (மனைவிக்குப் பெயரே சஹதர்மிணி—அறநெறியில் துணைவி) இருப்பதற்கு எது செய்யவேண்டும் என்பதை உணர்ந்து தெய்வ வழிப்பட்டு நின்ற தமது தலைவராலே உருவப் படுத்தும்படி தமது வாழ்க்கையை ஒப்படைத்தார். மனிதனானவன் தனது ஆதரவுக்கு அளிக்கப்பட்ட பெண்ணினுடைய வாழ்க்கையை உயர்த்தி மேன்மை அடையச்செய்யும் பரிசுத்தமான கடமைப் பூண்டவன். அவ்வண்ணமே பெண்ணும் அன்பினாலும், உள்ளத்து உணர்வாலும் தனது நாயகனது வாழ்க்கையை உணர்ந்து அவனது உயிரோடு ஒன்றுபட்டு நிற்கும் பெருங்கடமை பூண்டவள்.

சுயநலமற்ற அன்பும், பரிசுத்தமுமே, யோகக்காட்சியை விருத்திசெய்து தெய்வம் உட்புகுமாறு இருதயத்தின் கதவுகளைத் திறந்து விடுவன. பரிசுத்த அன்னையார் எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ளவில்லை. சிறுவயதிலே வீட்டை விட்டு வெளிச்செல்லாதபடியினால் வெளியேயுள்ள கல்விகற்ற உலகத்தோடு தொடர்பில்லாதிருந்தார்.

ஆயினும் அதியற்புதமான உள்ளொளியினாலே தத்துவ ஞான சம்பந்தமாகிய, சமயசாஸ்திர சம்பந்தமாகிய அரிய விஷயங்களை மிகவும் எளிய மொழியிலே விளக்கும் வல்லமையுடையவராயிருந்தார். வாழ்க்கையின் சாதாரண விஷயங்களிலும் லௌகிக கடமைகளிலும் அவர் அளித்த புத்தி மதிகள் கூறிய நுண்ணறிவும், அகன்ற நோக்கமும் பொருந்தியிருந்தன.

புத்தகங்களைக்கற்று மூளையிலே பயனற்ற பல கருத்துக்களை பொதிந்து வைத்திருப்பது உண்மைக் கல்வியெனப்படாதென்றும், ஆத்மாவை செம்மையான வழியில் விருத்தி செய்வதே உண்மைக்கல்வியாமென்றும், இது தெளிவாகக் காட்டுகின்றது. உண்மையின் காட்சியை ஒருவன் பற்றும்பொழுது அவனுடைய கண்களிலிருந்து மாசு கழன்றுபோக எல்லாப் பொருள்களின் உண்மையும் அவனது இருதயத்துக்கு விளங்குகின்றன. பரிசுத்த அன்னையாரின் தெய்வீக வாழ்க்கையானது அறிவோடும் நிறைவோடும் கூடியிருந்ததற்குக் காரணம் இதுவேயாம்.

பரிசுத்த அன்னையாரின் வாழ்க்கை அதியற்புதமான கருத்தினை வெளிப்படுத்துகின்றது. மேலைத்தேசத்து நாகரீகத்தைப் பின்பற்றிச் செல்லுகிற இக்காலத்து இந்திய பெண்மக்கள் சிறு கிராமத்திலே வசித்துத் தோட்டத்தின் மூலையிலே மறைந்திருந்த அழகிய புஷ்பத்தைப்போல, மெல்லென்ற காற்றினாலே எவ்விடத்திலும் நறுமணத்தைப் பரப்பி, அனைவருடைய சிந்தையையும் மகிழச்செய்த அன்னையாரின் வாழ்க்கையிலிருந்து அநேக காரியங்களை அறிந்துகொள்ளலாம்.

பரிசுத்த அன்னையாரின் வாழ்க்கையினைக்கூறும் இந்தச் சிறிய நூலானது இந்தப் புண்ணியபூமியின் புதல்வருக்கும் புதல்வியருக்கும் உதவி புரிவதாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஸ்ரீராமகிருஷ்ண ஆசிரமம்
டில்லி.

சுவாமி சர்வானந்தா.

ஸ்ரீராம கிருஷ்ண விஜயம்.

உலகத்திலுள்ள எல்லா மாந்தரும், ஜாதி, மதம், வர்ணம், முதலிய பேதங்களின்றி நற்பதவியடைய நல்வழி காட்டிய பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தருடைய உபதேசங்களைப் பற்றியும், நமது தாய் நாட்டின் முன்னேற்றத்தின் பல அறிய கட்டுரைகளும் கொண்டு தமிழ் நாட்டில் தலைமை பெற்று வெளியாகும் ஒரு மாதாந்தரத் தமிழ்ப் பத்திரிகை.

வருஷ சந்தா ... ... ரூ. 3—0—0

ஸ்ரீ சாரதா தேவியார் சரித்திரம் திருவுருவப்படத்துடன் ... ரூ. 0—6—0

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரருக்கு ... 0—5—0

ஸ்ரீவிவேகானந்தரும் சிகாகோ சர்வமத மஹாசபையும் (இரண்டு படங்களுடன்) ... ரூ. 0—8—0

ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் சந்தாதாரருக்கு ... 0—7—0

மேற்படி பத்திரிகையும், புஸ்தகங்களும், பகவான் ஸ்ரீராம கிருஷ்ணர், ஸ்ரீசாரதா தேவியார் ஸ்ரீசுவாமி விவேகானந்தர், முதலிய திருவுருவப்படங்களும், வேண்டியவர்கள் அடியில் கண்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மானேஜர்

ஸ்ரீராமகிருஷ்ண மடம், மயிலாப்பூர்,

சென்னை.

ஸ்ரீ சாரதாதேவி ஸ்தோத்திரம்.

(1) ப்ரகிருதிம் பரமாபயாம் வரதாம்
நரரூபதராம் ஜனதாப ஹராம்
ஸரணாகத சேவக தோஷகரீம்
ப்ரணமாமி பராம் ஜனனீம் ஜகதாம்.

(பதவுரை) ப்ரகிருதிம்—சாக்ஷாத் ப்ரகிருதி தேவியும்; பரமாமபயாம்—மேலான அபயம் கொடுப்பவளும்; வரதாம்—வரப்ரசாதத்தை யளிப்பவளும்; நரரூபதராம்—நரரூபத்தைத் தரித்திருப்பவளும்; ஜனதாபஹராம்—ஜனங்களது தாபத்தைத் தணிப்பவளும்; ஸரணாகத சேவக தோஷகரீம்—சரணம் ப்ரார்த்தித்த ஆச்ரயத்தவர்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவளுமாகிய; ஜகதாம் ஜனனீம்—ஜகத் ஜனனியை; பரணமாமி—நமஸ்கரிக்கின்றேன்.

(பொழிப்புரை) ஸாக்ஷாத் ப்ரகிருதிதேவியும், மேலான அபயம்கொடுப்பவளும், வரப்ரசாதத்தை யளிப்பவளும், நரரூபத்தை தரித்திருப்பவளும், ஜனங்களது தாபத்தைத் தணிப்பவளும், சரணம் ப்ரார்த்தித்த ஆச்ரயத்தவர்களுக்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பவளுமாகிய ஜகத் ஜனனிக்கு நமஸ்காரம்.

(2) குணஹீன சுதான் பாரத யுதான்
கிருபயாத்ய சமுத்தர மோஹகதான்
தரணீம் பவ சாகர பாரகரீம்
ப்ரண மாமி பராம் ஜனனீம் ஜகதாம்.

(ப-ரை) குணஹீன சுதான்—குண சூன்யர்களாய் இருக்கும் மக்களை; அபராதயுதான்–அபராதங்களைக் கூடின; மோஹகதான்—மோகத்தில் கிடந்துழலும் (மக்களை;) கிருபயாத்ய—கருணையுடன் கிருபை புரிந்து; சமுத்தர—உத்தாரணம் செய்து; பவ சாகர பாரகரீம்—ஸம்ஸாரமாகிய சாகரத்திற்கப்பால் கடத்திக் கரை சேர்ப்பிப்பதாகிய; தரணீம்—ஓர் ஓடம் போன்ற; பாரம்—மேலான; ஜகதாம் ஜனனீம்—ஜகத் ஜனனியை; ப்ரணமாமி—நமஸ்கரிக்கிறேன்.

(போ—ரை) குணசூன்யர்களாய் அநேக அபராதங்கள்செய்து மோகத்தில் கிடந்துழலும் மக்களைக் கருணையுடன் கிருபை புரிந்து, உத்தாரணம் செய்து ஸம்ஸாரமாகிய ஸாகரத்திற்கப்பால் கடத்திக் கரை சேர்ப்பிப்பதாகிய ஓர் ஓடம்போன்ற அன்னைக்கு நமஸ்காரம்.

(3) விஷயம் குசுமம் பரிஹ்ருத்திய ஸதா
சரணும் புரு ஹாமிருத சான்திசுதாம்
பிப ப்ருங்க மனோ பவ ரோக ஹராம்
ப்ரண மாமி பராம் ஜனனீம் ஜகதாம்.

(ப—ரை) விஷயம் குசுமம்—விஷயம் என்னும் புஷ்பத்தை; பரிஹ்ருத்திய—உபேக்ஷித்து; சரணும் பிருஹாமிருத சான்திசுதாம்—(தாயின் திருவடி) என்னும் அம்புஜத்தின் சாந்தியாகிய அமிருதத்தை; பிருங்க—எ பிருங்கமே; சதா—சதா; பிப—அருந்துக; பவரோகஹராம்—ஸம்ஸார ரோகத்தை நசிக்கச் செய்யும்; பராம்—மேலான; ஜகதாம் ஜனனீம்—ஜகத் ஜனனியை; ப்ரணமாமி—நமஸ்கரிக்கிறேன்.

(போ—ரை) விஷயமெனுங் குஸுமத்தை (புஷ்பத்தை) உபேக்ஷித்து, சரணம் (தாயின் திருவடி) எனும் அம்புஜத்தின் சாந்தியாகிய அமிருதத்தை, மனமாகிய எ பிருங்கமே! சதா அருந்துக! ஸம்ஸார ரோகத்தை நசிக்கச்செய்யும் ஜகத் ஜனனிக்கு நமஸ்காரம்.

(4) கிருபாம் குரு மஹாதேவி
சுதேஷு ப்ரணதேஷு ச
சரணாஸ்ரய தானேன
கிருபா மயி நமோஸ்துதே.

(ப-ரை) மஹாதேவி—ஓ மஹாதேவி; ப்ரணதேஷு சுதேஷு— உன்னை நமஸ்கரிக்கிற மக்களுக்கு; சரணஸ்ரயதானேன —உன் சரணாரவிந்தத்தை ஆச்ரயிருக்கும்படியான பக்தியைக் கிருபாம் குரு—அருள்வாயாக; கிருபாமயி—கிருபா மூர்த்தியா இருக்கும் தேவி; தே - உனக்கு; நமோஸ்து—நமஸ்காரம்.

(போ-ரை) ஓ மஹாதேவி! உன்னை நமஸ்கரிக்கிற மக்களுக்கு, உனது சரணார விந்தத்தை ஆச்ரயிருக்கும்படியான பக்தியை அருள்வாயாக! கிருபாமூர்த்தியா இருக்கும் தேவி! உனக்கு நமஸ்காரம்.

(5) லஜ்ஜா படாவ்ருதே நித்யம்
சாரதே ஞான தாயிகே!
பாபேப் யோ நஸ்தாரக்ஷ
கிருபாமயி நமோஸ்துதே.

(ப-ரை) நித்யம் லஜ்ஜாபடாவ்ருதே——லஜ்ஜாபடத்தால் (கோஷா ஸ்திரீகளின் முக மூடியால்) எப்பொழுதும் மறைத்துக் கொண்டிருப்பவளும்; ஞானதாயிகே—ஞானத்தைக் கொடுப்பவளுமாகிய; சாரதே—சாரதாதேவியே; பாபேப்யோ—பாபங்களினின்று; நஃ—எங்களை; சதா—எப்பொழுதும்; ரக்ஷ—ரக்ஷிப்பாயாக; கிருபாமயி—அன்பு வடிவான தேவி; நமோஸ்துதே—உமக்கு நமஸ்காரம்.

(போ-ரை) எப்பொழுதும் லஜ்ஜா படத்தால் (கோஷா ஸ்திரீகளின் முக மூடியால்) மறைத்துக் கொண்டிருப்பவளும், ஞானத்தைக் கொடுப்பவளுமாகிய சாரதாதேவி! பாபங்களினின்று எங்களை ரக்ஷிப்பாயாக! அன்பு வடிவாகியதேவி! உனக்கு நமஸ்காரம்.

(6) ராம கிருஷ்ண கத ப்ராணும்
தன்னும ஸ்ரவணப் பிரியாம்
தத் பாவ ரஞ்ஜிதா காராம்
ப்ரணமாமி முஹுர் முஹு:

(ப-ரை) ராமகிருஷ்ண கதப்ராணும்—தன் பிராணன் முழுவதும் ஸ்ரீராம கிருஷ்ணரிடத்திலேயே லயித்திருக்கச் செய்பவளும்; தன்னும ஸ்ரவணப்பிரியாம்—அவரது நாமோச்சாரணம் கேட்பதில் அதிகப் பிரியமுள்ளவளும்; தத்பாவ ரஞ்சிதாகாராம்—அதுவர பாவனையால் சந்தோஷித்த உடல் உடையவளாகிய தேவியை; முஹுர் முஹு:—மீண்டும் மீண்டும்; ப்ரணமாமி—நமஸ்கரிக்கிறேன்.

(போ-ரை) தன் பிராணன் முழுதும் ஸ்ரீராமகிருஷ்ணரிடத்திலேயே லயித்திருக்கச் செய்பவளும், அவரது நாமோச்சாரணம் கேட்பதில் அதிகப்பிரிய முள்ளவளும், அவரது பாவனையால் சந்தோஷித்த உடல் உடையவளாகிய தேவிக்கு மீண்டும் மீண்டும் நமஸ்காரம்.

(7) பவித்ரம் சரிதம் யஸ்யா:
பவித்ரம் ஜீவனம் ததா
பவித்ர தாஸ்வரூபிண்யை
தஸ்யை தேவ்யை நமோ நம:

(ப-ரை) யஸ்யா—யாருடைய; சரிதம்—சரித்திரம்; பவித்ரம்—பவித்திரமாயிருக்கிறதோ; ஜீவனம் ததா—அப்படியே யாருடைய வாழ்நாள்; பவித்ரம்—பரிசுத்தமாயிருக்கிறதோ; பவித்ரதாஸ்வரூபிண்யை—யார் பரிசுத்தஸ்வரூபமாகவே இருக்கிருளோ; தஸ்யை தேவ்யை—அந்த தேவிக்கு; நமோ நம:—மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம்.

(போ-ரை) யாருடைய சரித்திரம் பவித்திர (பரிசுத்த)மாயிருக்கிறதோ, யாருடைய வாழ்நாள் பரிசுத்தமாயிருக்கிறதோ, யார் பரிசுத்த ஸ்வரூபமாகவே இருக்கிருளோ, அந்த தேவிக்கு மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம்.

(8) தேவீம் ப்ரஸன்னும் ப்ரணதார்த்தி ஹன்திரீம்
யோகீந்திரபூஜ்யாம் யுகதர்ம பாத்திரீம்
தாம் சாரதாம் பக்தி விஞ்ஞான தாத்ரீம்
தயாஸ்வரூபாம் ப்ரணமாமி நித்யம்.

(ப—ரை) ப்ரணதார்த்தி ஹன்திரீம்—நமஸ்கரிப்பவர்களது துக்கத்தை நாசம் செய்பவளும்; பக்தி விஞ்ஞானதாத்ரீம்—பக்தியையும் விஞ்ஞான (ஆத்ம ஞான)த்தையும் கொடுப்பவளும்; தயாஸ்வரூபம்—தயாஸ்வரூபணியாயிருப்பவளும்; ப்ரஸன்னும்—சந்தோஷமுடையவளுமாகிய; தாம்—அந்த; சாரதாம்—சாரதாதேவியை நித்யம்—நித்யமும்; ப்ரணமாமி—நமஸ்கரிக்கின்றேன்.

(பொ—ரை) நமஸ்கரிப்பவர்களது துக்கத்தை நாசம் செய்பவளும், யோகீந்திரர்களால் பூஜிக்கப்படுபவளும், யுக தர்மங்களுக்கு ஆதாரமாயிருப்பவளும், பக்தியையும் விஞ்ஞான (ஆத்ம ஞான)த்தையும் கொடுப்பவளும், தயாஸ்வரூபிணியாயிருப்பவளும், சந்தோஷமுடையவளுமாகிய ஸ்ரீ சாரதாதேவியை நித்யமும் நமஸ்கரிக்கிறேன்.

(9) ஸ்னேஹேன பத்னஸி மனோஸ்மதீய
தோஷான சேஷான சகுணீகரோஷி
அஹேதுனு னேதயஸே சதோஷான்
ஸ்வாங்கே க்ருஹீத்வா யதிதம் விசித்ரம்.

(ப—ரை) அஸ்மதீயம்—எங்களது; மன:—முழுமனத்தையும்; ஸ்னேஹேன—அன்பெனும் பாசத்தால்; பத்னஸி—கட்டுகிறாய்; அஸேஷான் தோஷான்—எல்லாத் தோஷங்களையும், சகுணீகரோஷி—குணமாகச்செய்கிறாய்; அஹேதுனு—காரணம் யாதுமின்றி சதோஷான்—தோஷங்களோடு கூடிய; ந:—எங்களை; ஸ்வாங்கே க்ருஹீத்வ—உன் மடியிலிருத்தி; தயஸே—தயை காண்பிக்கிறாய்; யதிதம் விசித்ரம்—தேவி இதுவும்விசித்ரமே.

(பொ—ரை) எங்களது முழு மனத்தையும் அன்பெனும் பாசத்தால் கட்டுபவளும், எங்களது தோஷங்களையெல்லாம் குணமாகச் செய்பவளுமாகிய தேவி, தோஷங்களோடுக் கூடின எங்களைக் காரணம் யாதுமின்றி மடியிலிருத்தி தயைக் காண்பிக்கிறாய்! தேவி இதுவும் விசித்ரமே!

(10) ப்ரஸீத மாதர் வினயேன யாசே
நித்யம்பவ ஸ்னே ஹவதீ சுதேஷு

ப்ரேமைக பிந்தும் சிரதக்த சித்தே
விஷிஞ்ச சித்தம் குரு ந: சுஸாந்தம்.

(ப–ரை) மாத: அன்னையே; ப்ரஸீத—கிருபை செய்வாயாக; சுதேஷு—குழந்தைகளிடம்; நித்யம்—என்றும் ஸ்னேஹவதீ பவ—அன்புள்ளவளாய் இரு (என்று); வினயேன—வினயமுடன்; யாசே—கேட்டுக்கொள்ளுகிறேன்; சிரதக்த சித்தே—வெகுகாலமாகத் தகிக்கப்பட்டிருக்கும் எங்களது மனதில்; ப்ரேமைக பிந்தும்—ப்ரேமையில் ஒரு துளியை; விஷிஞ்சு பொழிந்து; ந:—எங்களுடைய; சித்தம்—மனதை; சுஸாந்தம்—சாந்தியுள்ளதாக சித்தம்—மனதை; குரு—செய்.

(பொ–ரை) அன்னையே! கிருபை செய்வாயாக! குழந்தைகளிடம் என்றும் நீ அன்புள்ளவளாயிருக்கவேண்டுமென்று வினயமுடன் கேட்டுக்கொள்ளுகிறேன். வெகுகாலமாகத் தாபத்தால் தகிக்கப்பட்டிருக்கும் எங்களது மனதில் ப்ரேமையில் ஓர் துளி பொழிந்து சாந்தியுள்ளவர்களாகச் செய்வாயாக.

(11) ஜனனீம் சாரதாம் தேவீம் ராமகிருஷ்ணஜகத்
பாதபத்மாம் தயோ: ஸ்ரித்வா ப்ரணமாமி [குரும்
[முஹுர் முஹு:

(ப–ரை) ஜனனீம்—ஜகத் ஜனனீயாகிய; சாரதாம்—சாரதா தேவியினுடையவும்; ஜகத்குரு—ஜகத் குருவாகிய; ராமகிருஷ்ணம்—ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடையவும்; தயோ:—அவ்விருவருடைய; பாதபதமே—பாத பத்மங்களை; ஸ்ரீத்வா—ஆசிரயித்து நான்; முஹுர் முஹு:—மறுபடியும் மறுபடியும் ப்ரணமாமி—நமஸ்கரிக்கிறேன்.

(பொ–ரை) ஜகத் ஜனனீயாகிய சாரதா தேவியினுடையவும் ஜகத்குருவாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண தேவருடையவும் பாதபத்மங்களை ஆசிரயித்து நான் மறுபடியும் மறுபடியும் நமஸ்கரிக்கிறேன்.

ஹரி ஓம் தத் சத்.

ஸ்ரீசாரதா தேவியார் சரித்திரம்.

ஸ்ரீசாரதா தேவியார் திரு அவதாரம்.

ஆர்யாவர்த்தப் புண்ணிய பூமி யென்று சொல்லும் இப்பாரத கண்டத்திலே, வடக்கேயுள்ள வங்காள நாட்டிலே, பாங்கூரா ஜில்லா, ஜயராம்பட்டி—* என்னும் கிராமத்திலே, சுமார் 80-வருஷத்துக்கு முன் அந்தணர் குலத்திலே, ஸ்ரீராமசந்திர முகோபாத்யாயரென்னும் மகானுபாவரொருவரிருந்தார். இவர் ஒழுக்கம், பக்தி, நேர்மை என்னும் உயர் குணங்களால் சிறந்து, வேத விதிகளை இயன்றவாறு தவராமல் பக்தியோடு இயற்றி வந்தனர். ஆதலால் அவர் அனைவரின் மதிப்பையும் பெற்று விளங்கினர். அவர் மனைவி சுசீலை ஸ்ரீமதி சியாமாதேவி என்னும் உத்தமி தெய்வபக்தி பூண்டு இல்லறம் நடாத்திவரும் நாளில் தம் மரபு விளங்கவேண்டித் தமக்கு சந்ததியுண்டாக அருள்புரியும்படி ஈசுவரனை பிரார்த்திக்க, அவர் திருவருளால் கலியுகாதி 4955—ஆனந்த-ஸூ மார்கழி-மீ கிருஷ்ண சப்தமி குருவாரம் (டிசம்பர்-மீ 22-ம்தேதி 1853-வருஷத்தில்) ஒரு பெண் மகவு உண்டாயிற்று. அக்குழந்தைக்கு ஸ்ரீசாரதாதேவி யெனத் திருநாமம் இட்டார். இந்த ஸீமந்த புத்திரியை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்த்து அவளது உண்மை, அன்பு, பொறுமை, அடக்கம், இரக்கம் முதலிய நற்குணங்களை கண்ட பெற்றோர் அளவிலா ஆனந்தங்கொண்டார்.

---

* விஷ்ணுபுரி யென்கிற ரயில்ஸ்டேஷனிலிருந்து இருபது மைல் தூரமுண்டு. அது இப்பொழுது ஒரு திவ்ய க்ஷேத்திரமாகக் கருதப்படுகிறது. தேவி அங்கு அவதரித்து பல நாள் வாசஞ் செய்தனராதலின் அங்கு தேவியாருக்கு ஒரு ஆலயமும் ஸ்ரீசாரதா மாதர் மந்திரமும் (பெண்களுக்கு மடம் ஒன்றும்) நிருமிக்கப்பட்டிருக்கிறது.

தெய்வப் பொருத்தம்.

தெய்வத்தன்மை வாய்ந்த இந்தக் கன்னிகை, ஸ்ரீராமகிருஷ்ணருக்கு உத்தம பத்தினியாக தெய்வச்செயலால் அமர்ந்திருப்பதைப்பற்றிப் பின்னால் கூறும் சம்பவத்தால் தெரிந்து கொள்ளலாம். ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ்வர ஆலயத்துக்கு அர்ச்சகராக அமையுமுன் கல்கத்தாவிலிருந்த தமது தமையனார் ஸ்ரீஇராமகுமாரருடைய அனுமதிமேல் அவர் கமார்புகாருக்குப் போய் சில நாள் தங்கும்படி நேரிட்டது. அப்பொழுது ஒரு நாள் மூன்று மைலுக்கு அப்பாலுள்ள ஷியூர் (Sehore) கிராமத்தில் தமது மருமகனாகிய ஹிருதயராம் முக்கர்ஜி யென்பவரைச் சந்தித்தார். ஒரு நாள் ஒருசங்கீத வித்வான் அவ்வூருக்கு வந்து ஹரிகதா காலக்ஷேபம் செய்தார். அவரது பாட்டைக் கேட்க கிராமத்தாரெல்லோரும் அங்கு வந்து சேர்ந்தார்கள். அக்கும்பலில் ஸ்ரீ ராமகிருஷ்ணரும் ஹிருதயராமரும் ஒரு பக்கத்தில் இருந்தார்கள். இன்னொரு பக்கத்தில் மூன்று வயதுள்ள ஒரு குழந்தையுடன் ஒரு மாது நின்றுக்கொண்டிருந்தனர். சங்கீதக் கச்சேரி முடிந்ததும், ஜனங்கள் விநோதமாய் ஒருவருக்கொருவர் அகமகிழ்ந்து பலவாறு பேசிக்கொண்டிருக்கையில் அவர்களில் ஒருவர் வேடிக்கையாக அவ்விளங்குழந்தையை நோக்கி, அம்மா! “இங்கு இருப்பவர்களில் நீ யாரை விவாகம் செய்து கொள்ள இஷ்டப்படுகிறாய்?”—என்று, கேட்க, விவாகம் என்பது இன்னது என்று ஒன்றும் தெரியாத அச்சிறு குழந்தை ஸ்ரீ இராமகிருஷ்ணரைப்பார்த்துச் சுட்டு விரலால் பன் முறைச்சுட்டிக் காட்டினது. இந்தச் சம்பவத்தை வெறும் விளையாட்டாக எண்ணி அனைவரும் மறந்தனரேனும், பின்னொருகால் அவ்வண்ணமே மெய்யாகவே நிகழ்ந்தது. இருவருடைய திருமணத்தை நோக்கும்போது இது தெய்வ சங்கல்பமே என்று கூறலாம்.

விவாக ஏற்பாடு.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ்வர ஆலயத்தில் பூஜை முதலிய நித்ய கர்மங்களைச் சரியாய்க் கவனியாமல் ஒரு பைத்தியக்காரனைப்போல் நடந்து கொள்ளுகிறார் என்று அவர் தாயார் சந்திரமணி தேவியார் கேள்விப்பட்டு மெத்த வியாகூலம் அடைந்து அவரை கமார்புகார் கிராமத்துக்கு வரும்படி அடிக்கடி கடிதம் எழுதினாள். ஸ்ரீ இராம கிருஷ்ணரும் தாய் சொல்லைத் தலைமேற் கொண்டு 1858 முடிவில் அங்கே சென்றார். அவர் கமார்புகாரில் சில மாதங்கள் தங்கினதால் அவருக்கு தேகம் சௌக்கியமாயிருந்தும் அவர் உலக வெறுப்புடன் இருப்பதைக்கண்டு தாயாரும், தமையனும் உலக வாழ்க்கையில் அவருக்கு விருப்பூட்ட பலவித யோசனைகள் செய்தார்கள். இவருக்கு வயது 23-ஆய்விட்டது. சம்சார உலக விவகாரத்தில் மனதைச்செலுத்திச் சரியான வழியில் இருப்பாரென்றெண்ணி ஒரு கன்னிகையைத்தேட ஆரம்பித்தார்கள்.

சுற்றுப்பக்கத்திலிருக்கும் கிராமத்துக்கெல்லாம் போய்த் தேடிப்பார்த்தார்கள். சமுதாய வழக்கப்பிரகாரம் வேண்டிய சீதனம் கொடுத்தாலொழிய கன்னிகை அகப்படுவது கஷ்டமாயிருந்தது. இராமேஸ்வரர் கடன்பட்டுக் கொடுக்க சாத்தியப்படவில்லை. சந்திரமணி தேவியாரும் இராமேஸ்வரரும் அவதைர்யப்பட்டுக் கொண்டிருந்தார்கள். திருமண முயற்சிகளைப் பற்றிக் கடைசி வரைக்கும் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு அவர்கள் தெரிவிக்கவில்லை. ஆனால் ஸ்ரீராம கிருஷ்ணர் இதை எப்படியோ உணர்ந்து அதை மறுத்துத்தடை ஒன்றும் செய்யாமல் களிப்பாயிருந்தார். இதைத்தெய்வ சங்கல்பமென்று கருதினாரோ அல்லது அறியாப்பிள்ளை விளையாட்டாக எண்ணினாரோ, எது என்று சொல்ல முடியாது.

ஸ்ரீராம கிருஷ்ணருடைய முன்னுரைகள்:—ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய தாய் தமையன் ஆகிய இருவரும் தாங்கள்கன்னிகை விஷயமாய்ச்செய்த முயற்சிகளெல்லாம் வீணாய்ப்போகவே மனச் சோர்வு அடைந்திருந்தார்கள். காரணத்தை விசாரித்து ஸ்ரீராம கிருஷ்ணர் ஒருவித பரவச நிலையிலிருந்து "அங்குமிங்கும்போய்த் தேடுவது வீணே. பாங்குரா ஜில்லாவில், ஜெயராம்பட்டிக்கிராமத்திற்கு (காமார்புகாருக்கு வடமேற்காய் 3–மைல் தூரம்) சென்றால் தேவியின் அம்சமாக உண்டாய் எனக்காக நியமித்து வைக்கப்பட்டிருக்கும் சாத்வீக குணம் பொருந்திய கன்னிகை ஸ்ரீராம சந்திர முகோபாத்தியாயர் வீட்டில் வாழக்காண்பீர்" என்றார்.

இவருடைய வார்த்தைகளை மெய் மொழியென மெத்த கவனியாதிருந்த போதிலும் ஸ்ரீராம கிருஷ்ணருடைய அத்தைப் பிள்ளையாகிய ஹிருதய ராமருடைய தம்பியாரை அங்கே அனுப்பினார்கள். திரும்பி வந்தவர் ஸ்ரீராம சந்திர முகோ பாத்தியாயருக்கு ஐந்து வயதுள்ள ஒரு கன்னிகையும், நான்கு பிள்ளைகளும் இருப்பதாகவும், அந்தப்பெண் சற்றேறக்குறைய ஈடாயிருப்பாளென்றும் சொன்னார். பிறிதொரு பொருத்தமுள்ள கன்னிகை கிடைக்காததினால் சந்திரமணி தேவியாரும் இராமேஸ்வரரும் மனித முயற்சியின்றி தானாக நேர்ந்த திறனை நினைந்து ஸ்ரீராம சந்திர முகோபாத்தியாயருடன் கலந்து பேசியபோது அவரும் அந்தப்பெண்ணை ஸ்ரீராம கிருஷ்ணருக்குக் கொடுக்கச் சம்மதித்தார்.

ஸ்ரீசாரதாதேவித் திருமணம்.

திருமணம் நிகழ்தற்குரிய யாவையும் சின்னாட்குள்ளே செய்து முடிக்க ஒரு நன்னாளில் நல்ல சுபமுகூர்த்தத்தில் (வங்காளி வருஷம் 1266, வைகாசி மாதத்தில்) 1859–ம் ௵ ஸ்ரீராம கிருஷ்ணருக்கும்—ஸ்ரீசாரதா தேவியாருக்கும் விவாகம் நடந்தேறியது. "கன்னியா சுல்க" மாக ரூபாய் முந்நூறு கொடுக்கப்பட்டது. ஸ்ரீராம கிருஷ்ணருடைய இரண்டாவது சகோதரி

சர்வமங்கள தேவியினுடைய குமாரத்தி, தான் அவர்மேல் வைத்திருந்த அன்பினல் மேள வாத்தியம் கொண்டு மெத்த ஆரவாரத்துடன் செய்ய எண்ணி யிருந்தாள். ஆனல் அது நிறைவேறவில்லை. வாத்திய மொன்றும் வைக்கவில்லை யென்று எல்லோரும் விசன முற்றிருப்பதை ஸ்ரீராமகிருஷ்ணர் கண்டு, தன் இரண்டு தொடைகளில் தன் கைகளால் ஒரு விதமான டபகு—டபகு என்னும் சப்தம் செய்து தன் முதுகின் கீழே இரண்டு கைகளினல் மிகவும் அழகான மத்தள சப்தம் செய்தார். அன்றையதினம் எல்லோருக்கும் இருந்த ஆனந்தத்துக்கு அளவேயில்லை. ஸ்ரீ இரகு வீருடைய கிருபா கடாக்ஷத்தால் விவாகம் நடந்து தன் பைத்தியக்காரப்பிள்ளை திருமணச் சடங்குகளைச் சகிப்புடன் செய்து கொண்டானென்றும் இந்த விவாகம் ஸ்ரீ இராம கிருஷ்ணருக்கு மெத்த நன்மையை விளைவிக்குமென்றும் ஸ்ரீசந்திரமணிதேவி யெண்ணி மெத்த ஆறுதலடைந்தனள்.

ஸ்ரீ சந்திரமணி தேவியார் வியாகூலம்.

விவாகம் முடிந்த பிற்பாடு சந்திரமணியார் சந்தோஷத்தை ஒரு அற்ப நிகழ்ச்சியால் பழுதாக்கியது. கதாதரர் (ஸ்ரீராம கிருஷ்ணர்) குடும்பம் எழ்மையாயிருந்தபடியால் அருகிலிருந்த லாஹா பிரபுவின் குடும்பத்தில் சில விலையுயர்ந்த நகைகளை விவாக காலத்தில் இரவலாகப் பெற்றுப் புது மருமகளுக்கு மணக்கோலம் செய்வித்தனர்கள். விவாகம் முடிந்ததும் இரவல் நகைகளைக் கழற்றிச் சொந்தக்காரருக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டி வந்தபோது ஸ்ரீ சந்திரமணி தேவியார் சிறுமி அணிந்திருந்த நகைகளை வாங்க மனமில்லாதவளாய்த் துக்கித்தாள். தமது தாய்த் துயரத்தை நீக்க ஸ்ரீராம கிருஷ்ணர் சில ஆறுதல் மொழிகள் கூறித்தாமே அவைகளைக் கழற்றிக் கொடுப்பதாகச் சொன்னர்.

மனைவி நித்திரை செய்யும்போது அவர் அவளுக்குத் தெரியாமல் நகைகளைச் சாதுரியமாய்க் கழற்றித் தன் தாயிடம் அளிக்க, அவரும் லாஹா குடும்பத்தாருக்கு அவைகளைக் கொடுத்தனுப்பினர். அந்தப்பெண் தூங்கியெழுந்து தன் நகைகளைக் காணாது ஒவென்றலறி வருத்தம் அடையும் போது மாமியார் துக்கம் நிறைந்த மனதினளாய்த் தன் மருமகளைத்தனது கைகளாலெடுத்தணைத்துக் கண்ணீர்ததும்ப "எனதருமைசெல்வியே! கவலைப்படாதே. கதாதரர் பிற்காலத்தில் இவைகளைவிட மதிப்பிலும்அழகிலும், சிறந்த ஆபரணங்கள் அளிப்பார்," என்று ஆறுதல்மொழி கூறினள். பிற்காலத்தில் தாயின் இவ்வாக்குறுதியை கதாதரர் முற்றும் வேறு பொருளில் நிறைவேற்றி வைத்தார். அன்றையதினம் பெண்ணைப் பார்க்க வந்த பெண்ணின் சிற்றப்பன் வெறுப்புண்டு அன்றைய தினமே சிறுமியைத் தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். இவற்றால் சந்திரமணிதேவி வருத்தமடைவதைக் கண்ட ஸ்ரீ இராம கிருஷ்ணர் பரிகாசமாய் "தாயே! பெண்ணைக்கொண்டு போனதினால் என்ன குடிகேடு வரப்போகிறது? கழுத்தில் கட்டின தாலி தாலிதானே! தானாகவே வந்து சேருவாள்" எனக் கதாதரர் தாயைத் தேற்றினர்.

விவாகம் ஆன பிற்பாடு சந்திரமணி தேவியார் ஸ்ரீராமகிருஷ்ணருக்கு நோய் பின்னும் மீளாதிருக்குமாறு அது முற்றும் தீரும் வரையில் அவரை கமார்புகாரிலேயே 1½ வருஷகாலம் வைத்துக்கொண்டிருந்தாள். இது மத்தியில் ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு முறைத்தமது மாமனார் வீட்டில் சிலநாள் தங்கிப் பெண்ணுக்கு 7—வது வயதானபடியால் தம் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு வந்தார். அன்னையையும் அண்ணனையும் வணங்கி விடைபெற்றுப் பின்னர் ஸ்ரீராம கிருஷ்ணர் தக்ஷிணேஸ்வரம் சென்று மறுபடியும் தமது அர்ச்சகத் தொழிலில் அமர்ந்தார். ஸ்ரீசாரதா தேவியார் கடைசி முறை ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்க்கும்போது அவளுக்கு வயது ஏழே யாதலால் அச்சமயம் நிகழ்ந்ததொன்றும் செவ்வையாய் தம்மனதிற் பதியவில்லை.

அதன் பின் ஸ்ரீசாரதா தேவியார் கமார்புகாருக்கு இரு முறை சென்றனரேனும் ஸ்ரீஇராம கிருஷ்ணர் அந்நாளில் தக்ஷிணேஸ்வரத்தில் வசித்து வந்தனர். ஸ்ரீசாரதா தேவியார் தமது தகப்பனார் வீட்டில் தங்கி வாழுங்காலத்தில் ஸ்ரீராம கிருஷ்ணர் ஜெயராம்பட்டிக்கு ஒரு முறை வந்திருந்தார். அக்காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளுள் அச்சிறுமியாது மனதில் நன்ருய் பதியப்பெற்ற சம்பவம் ஒன்றுண்டு. ஹிருதயாராமர் ஸ்ரீசாரதா தேவியாரைத் தேடிக்கொண்டு அவரது சீரடிகளில் தாமரை மலர்களையிட்டு தொழுதது ஒன்றே அவர் ஞாபகத்தில் இருந்தது.

ஸ்ரீராம கிருஷ்ணரைச் சந்தித்தல்.

ஸ்ரீராம கிருஷ்ணர் நிர்விகல்ப சமாதியின் அனுபூதி பெற்ற பின் ஆறு மாதகாலம் ஆற்ளுெ வயிற்றுக் கடுப்பாலும் 'வலியாலும் பீடிக்கப்பட்டு, அவரது தேக சௌக்கியம் கெட்டிருந்தமையால் அவர் கிராம வாசம் செய்யவேண்டியது என்று வைத்தியர்கள் சொன்னார்கள். அதன்படி ஸ்ரீராமகிருஷ்ணர் தமது திருநாடாகிய கமார்புகாருக்கு மே மாதம் 1867 எழுந்தருளினர். இதுபரியந்தம் தம் தந்தையுடன் வாழ்ந்திருந்த சாரதாதேவியை ஜெயராம்பட்டிக்கு அழைத்து வரப்பட்டார். ஸ்ரீ இராம கிருஷ்ணர் அதை அறிவாராயினும் தமது கருத்தை வெளியிடவில்லை. விவாகம் முடிந்த பிறகு தன்னுடைய ஏழுவயதுச் சிறுமியாயிருந்த ஸ்ரீசாரதா தேவியார் ஒருமுறை மட்டும் தன் புருஷனைக் கண்ணுல் பார்த்திருந்தாள். அப்பொழுது தம் நாதரின் பெருமையை அறிந்துகொள்ள இயலவில்லை. தற்பொழுது ஸ்ரீராம கிருஷ்ணரைத் தரிசிக்கும்போது அம்மையாருக்கு வயது 13வருஷம் 7மாதம் ஆகி அவர் அறிவு முதிர்ந்திருந்தார்.

தெய்வத்தன்மையும், தூய குணங்களும் விளங்கப்பெற்று சதா புன்சிரிப்புடன் தமது முகமண்டலத்திலிருந்து கருணை மொழி பொழிந்தனர். சரியாய்ப் பேசுமிடத்து, இதுதான் அவர் தம் கணவனை முதன் முதல் உணரும் பாக்கியம் பெற்ற

சமயம். வயதிற் சிறியவளாயினும் ஞானத்தில் பெரியவளாய் தம் நாயகனைச் சந்தித்தவுடனே தம்மால் இயன்ற அளவு அன்போ டும் வணக்கத்தோடும் அவருக்குப் பணிவிடை செய்ய விரும்பித் தமது உடல் உளம் ஆவி யாவற்றையும் அவர் பாதார விந்தங்க ளில் சமர்ப்பித்து அவருக்குத் தம் மனைவியும் சிஷ்யருமாய் வாய்ந்த சிறப்பைப்பற்றி மகிழ்ந்து வந்தார். இத்தெய்வ புருஷ னும் இவளை ஆட்கொள்ளத் திருவுளம்பற்றிப் பரமார்த்திகத்தி லும்,லௌகிக வாழ்வு முறையிலும் ஹிதோபதேசங்கள் பல செய் யத்தொடங்கினர்.

ஸ்ரீதோதாபுரி ஸ்வாமி உபதேசம்.

ஸ்ரீராம கிருஷ்ணர், இல்லறம் வகித்திருந்ததை அறிந்த அவரது குரு தோத்தாபுரியார அடியில் கூறிய சொற்களை தாம் நினைக்கலாயினர். "நீ எந்த ஆசிரமத்திலிருந்தாலென்ன? விவேகத்தாலும், வைராக்கியத்தாலும் ஞானாக்னியை வளர்த்துக் கொண்டிருக்கும் புருஷன் தன் மனையாளுடன் கூட சதா வாழ் பவனாயினும் பிரம ஞானத்திலேயே நிலைத்து நிற்கிறான். மாதர் முன்னிலையிலும் மனவுறுதி பெற்றிருப்பவனே, உண்மையில் பிரம்மத்தை அறிந்தவன். புருஷரையும், பெண்களையும் சமமா கப்பார்க்கவும், புருஷர்களிடமும், பெண்களிடமும் பிரமம் பிரதி பிம்பித்திருப்பதைக் காணவும், எவன் சக்தியுடையவனோ அவனே உண்மைஞானி. ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமை காண்பவனொருவன் சாதனம் நன்கு பயின்றவனாயிருப்பினும் அவன் ஞானம் பெற்றவனல்லன்" என்பதேயாம்.

அற்புத இல்லற வாழ்க்கை.

தன் குரு தோதாபுரியார் சொன்ன உபதேச மொழிகள் ஸ்ரீராம கிருஷ்ணரது ஞாபகத்துக்கு வந்தன. இத்தனை நாளா கத் தாம் பாடுபட்டுத் தேடிய ஆத்ம ஞானச்செல்வத்தை அவர் இப்பொழுது பரிசோதிக்கத் தொடங்கினர். ஸ்ரீராமகிருஷ்ணர் விவேக விளக்கம் பெற்ற பின்னரே கலியாணம் நடைபெற்றது.

மனைவியையும் அவராகவே தேர்ந்தெடுத்துக்கொண்டார். எனினும் சாமானிய இல்லறத்தார் போன்று தமது மனைவியாரை இல்லற வாழ்க்கையில் நடத்தவில்லை. மனைவியை சிற்றின்ப நுகர்ச்சிக்குரிய கருவியாக மதித்தொழுகவில்லை. ஆனால் அவர் மனைவிக்கு அஞ்சவுமில்லை. அவளை வெருட்டி ஓட்டவுமில்லை. தம்மனைவியை ஆருயிர்த் தோழியாகக்கொண்டிருந்தார். ஸ்ரீசாரதாமணியாரிடத்தும் அவ்வருங்குணம் விளங்கியது. தம் கணவருடைய போதனைகளை ஏற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான பக்குவம், அவரது மனோநிலை அடைந்திருந்தது. தற்காலத்தில் சாதாரண கிரஹஸ்தர்கள் நடக்கும் நடத்தையைப் பார்த்தால் இந்த உன்னத லட்சியத்தைப் பார்த்து யாவரும் பிரமிக்க வேண்டும். பவித்திர மாதாவும் சுயநலமில்லா அன்புகாட்டின ஸ்ரீராமகிருஷ்ணரைத் தன் ஆயுள் பரியந்தம் அவரை இஷ்ட தேவதையாக பூஜைசெய்து அவருடைய உபதேசங்களைப் பின்பற்றி நடந்து கொண்டாள். ஸ்ரீராமகிருஷ்ணர் தாம் சன்னியாசியாகி, பந்தரகிதரான பின்னுங்கூடத் தம்மை மணம்புரிந்த தேவியாரைத் தம்மருகிலேயே வைத்துக்கொள்ளச் சம்மதித்து அவ்விருவரும் வாழ்ந்த புனிதவாழ்வை உலகினருக்கு ஒரு படிப்பினையை எடுத்துக்காட்டும் பொருட்டேயாம்.

தேவியாரைப் பயிற்றுதல்.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசாரதா தேவியாருக்கு கல்வி புகட்ட ஆரம்பித்தார் (புத்தகக்கல்வியன்று). தேவியார் க்ஷேமத்துக் கானவைகளை யெல்லாம் தடையறச்செய்து அவளையும் தனக்குத் துணையாக வைத்துக்கொண்டு ஆத்மஞானத்தை விருத்திசெய்ய முழுமனதோடு செய்யத் தொடங்கினார். தனது கடமையெனக் கொண்ட ஒன்றை அரை குறையாக அவர்செய்வதில்லை. அலக்ஷியம் செய்வதுமில்லை. அதிதிகளை வரவேற்பதற்கும், குடும்பத்தொழில்களைச்சரியாக இயற்றுவதிலும், ஸ்ரீராம கிருஷ்ணர் சிறிதும் அசிரத்தையின்றிச் செய்து முடிக்கும் சுபாவமுள்ளவரானதால் தமது மனைவியைத் தம் பிரதம சிஷ்யையாய் பாவித்து தம் திருவுளக்குறிப்பை அவள் உணர்ந்து தக்கபடி நடக்குமாறு அவளுக்கு உபதேச மொழிகள் பல கூறி வந்தனர்.

சனாதன தர்மத்தின் நிலையை உணர்த்தி கடவுளை நம்பி இருத்தலே வாழ்வின் முக்கிய நோக்கமென்றுரைத்து, அதற்காக மனோ தத்துவ சாஸ்திரத்தைக் கற்பித்து, மனதை ஒரு நிலைப்படுத்தும் முறையிலும் உற்றார் உறவினருடன் இளமை முதுமைக்குத் தக்கபடி நடந்துகொள்ள வேண்டிய மாதிரியையும், பொருள் விஷயத்தில் மனம் பெறவேண்டிய சீரையும் எடுத்துக்காட்டி, லோக சங்கிரஹார்த்தமாய் இடம் பொருள் ஏவலுக்கு ஏற்றவாறு வீட்டுக்காரியங்களை நடத்த வேண்டிய கிரமத்தையும் எடுத்துக் கூறினார். அவர் சாமானிய விஷயங்களிலும் போதனையளிக்காதிருக்கவில்லை.

"வண்டியிலோ படகிலோ ஏறும்போது நீ எல்லோருக்கும் முந்தி ஏறிக்கொள். இறங்கும்போது ஏதாவது சாமான் வண்டியிலாவது படகிலாவது கைதவறிக் கிடக்கிறதோ என்று பார்த்துக்கொண்டு கடைசியில் இறங்கவேண்டும்" என்று சொல்வார். அடியில் வருமாறு ஸ்ரீசாரதா தேவியார் கூறுவதுண்டு. "அவர் லௌகிக விஷயங்களையும், வைதீக விஷயங்களையும் எனக்குப் போதனைசெய்வார். விளக்கில் திரியை எவ்வாறுத் தூண்டுவது, அதிதிகளை எவ்வாறு உபசரிப்பது முதலிய அற்ப விஷயங்களையும் கூட அவர் எனக்குக் கற்பியாதிருக்கவில்லை. கடவுள் துதி பாடவும் தியானம் சமாதி முறைகளையும், தர்மோபதேசங்களையும் எனக்குக் கற்பித்தார்."

ஒரு சம்பவம்.

தம் உபதேசப்படித் தமது சிஷ்யர்கள் சரியாய் நடக்கிறார்களா என்று அவர் எப்பொழுதும் கவனித்து அவர்கள் தவறிழைக்க நேரிட்டால், உடனே தாம் அவர்களைத் திருத்துவது போல், ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்ரீசாரதா தேவியாரையும் நடத்திவந்தார். தக்ஷிணேஸ்வரத்தில் தம்பதிகளிருவரும் தெய்வீக வாழ்க்கை நடத்தும் காலத்தில் ஒரு நாள் ஸ்ரீசாரதா தேவியார் சிறு குழந்தையைப்போல் சிறிது பரப்பரப்புடன் தன் கணவன்

மூன் காய்களும், கனி வர்க்கங்களும் நிறைந்த ஒரு கூடையை தூக்கிக்கொண்டு சென்றார். அதைக்கண்ட ஸ்ரீராம கிருஷ்ணர் "என் இவ்வளவு ஆடம்பரம்?" என, அவ்வம்மையார்த் துக்கம் பொறுக்கமாட்டாது கண்களில் நீர் சொரிய அழுதுகொண்டே அப்புறம் சென்றாள். அவள் அவ்வாறு வருந்தப் பொறாதவ ராய், ஸ்ரீராம கிருஷ்ணர் ஒரு சிஷ்யனைக் கூப்பிட்டு "ஐயோ! அந்தத்தேவியின் கண்களிலிருந்து கண்ணீர் பூமியில் விழுந் தால், என் தெய்வபக்தியும், தியானமும், ஞானமும், வைராக்கிய மும் மற்றும் எல்லாம் காற்றாய் பறந்தோடி விடுமே" என்று கதறி அவ்வம்மையாரைச் சமாதானப்படுத்தி அழைத்து வரும் படி ஒரு சிஷ்யனை அனுப்பினார்.

அளவிலா பேரானந்தம் அடைந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் கமார்புகாரில் தங்கி ஸ்ரீசாரதாதேவி யாரை பயிற்றுவிக்கும்போது, அம்மையாருக்கு அவர் சங்கத்தில் அளவிலா பேரானந்தத்தைத் தந்தது. இதைப்பற்றிப் பவித் திர மாதாவே "அவர் என் மீது கருணை வைத்தது முதல் பேரின்பம் இடையறாது என் ஹிருதயத்தில் அமிருதம் நிறை ந்து குடிகொண்டிருப்பதை நான் சதா உணர்ந்தேன். அந்த நிலையை எனக்கு வாக்கால் வர்ணிக்கவும் இப்பொழுது மறக்க வும் முடியவில்லை". என்று சொல்லியிருக்கிறார். கமார்புகா ரில் சில மாதங்கள் தங்கிய பின் ஸ்ரீராமகிருஷ்ணர் தக்ஷிணேஸ் வரத்துக்குச் சென்றனர். பவித்திரமாதாவும் தம்மினும் பாக்ய சாலி இவ்வுலகத்தில் இல்லையென்றெண்ணி தம் தகப்பனார் வீட்டுக்குச் சென்றனர். இந்த அருட்பேறு பெற்றதன் பயனாக அவரது சுபாவமும் அறவே மாறிவந்தது. முன்னினும் சிறந்த சாந்தகுணமும், எதனையும் யோசனையுடன் செய்தலும், சுயநலங் கருதாமை, முதலிய உயர்குணங்கள் மிளிரலாயின. எல்லாப்

பிராணிகளின் பேரிலும் பேரன்பு பாராட்டினவளாயும் இருந்தார். பற்றுக்கள் அனைத்தும் ஒழித்து பரமாத்மாவிடத்தில் மனது ஊன்றியதால் உடற்பற்று வரவரக் குறைந்தது. பிறர் தமக்கு என்ன துன்பத்தைத்தருவினும் தாம் காருண்யத்தையே பாராட்டுவார்.

ஜெயராம்பட்டியில் வாழுந்தோறும் தமது தகப்பனுருக்கும் உறவினர்க்கும் சேவை புரிந்துகொண்டு விருப்பு, வெறுப்பற்ற மனோ நிலையில் தமது உடல் ஜயராம்பட்டியிலிருந்து, உயிர் தக்ஷிணேஸ்வரத்தில் தமது குருநாதர் பாத மலரடியிலேயே நின்றது. அநேக முறை அவரைக்கண்டு திருத்தொண்டு புரிய வேண்டுமென அவா இருந்தபோதிலும், அக்கணத்தே அத்துணை பேரன்பு பாராட்டிய அவர் தம்மை ஒரு பொழுதும் கைவிட மாட்டாரென்று திட நம்பிக்கைவைத்து, தக்கசமயத்தில் அழைத்து அருள்வாரென்று அதனை அடக்கி வருவார்.

ஊர் வம்பு.

இங்ஙனம் ஸ்ரீசாரதா தேவியார் நாலு வருஷகாலம் கழித்தார். இப்பொழுது பதினெட்டு வயதுநிரம்பியது. அம்மையார், உலகச்சுகங்களுக்கு மிஞ்சிய அளவிலாப் பேரானந்தத்தை அனுபவித்திருந்தபோதிலும், தமது குருநாதரை, சிலர் அறிவிழந்த பைத்தியக்காரர் என்று சொல்லும் வீண் கதைகளைக் கேள்வியுற்று மனக்கிலேசம் அடைவதுண்டு. பகவந் நாமத்தை யுச்சரித்துக்கொண்டு தம் தேக சுகங்களைக் கவனியாமல் காலம் கழித்து வந்தனர். சிலர் அம்மையாரை இரக்கத்தோடு நோக்கி பரிதபித்தனர். சிலர் பேயாண்டியினுடைய பெண்சாதியென்று எளனம் செய்வார்கள். இக்கொடுமைகள் பலவற்றையும் பொறுமையுடன் சகித்தாராயினும், அவர் நெஞ்சம் புண்ணுகிக் கவற்சி பெரிதாகி, அவரைப்பற்றிக் கூறப்படுவதெல்லாம் உண்மையாயிருக்குமா? கமார்புகாரில் கண்ட புருடர் பின்னர் இயல்புமாறித்

திரிந்தனரோ? அவ்வாறு வாஸ்தவத்தில் இருக்குமேயானால், இனி க்ஷணப்பொழுதும் அவரைவிட்டுப்பிரிந்து வாழேன். என்னால் இயன்றவாறு அவருக்குத்தொண்டு புரிதலேமுறை, என்று நெடுநேரம் தமக்குள்ளேயே நினைத்தவராய்த்தாமே தக்ஷிணேஸ்வரத்துக்குச்சென்று அவரை நேரில் கண்டு தீர்மானிக்கவேண்டும் என்றிருந்தார். அதற்குரிய நல்ல சமயமும் நேர்ந்தது.

ஸ்ரீசாரதாதேவி முதன் முதல் தக்ஷிணேஸ்வரம் அடைதல்.

வருஷந்தோறும் பங்குனி மாதம் பௌர்ணமி தினத்தில் ஸ்ரீசைதன்யர் ஜயந்தியன்று சுற்றுப்பக்கத்திலுள்ள கிராம வாசிகள் வெகு தூரத்திலிருந்து கங்காஸ்நானத்தினிமித்தம் கல்கத்தாவுக்குச்செல்வது வழக்கம். ஸ்ரீசாரதாதேவியாருடைய தூர உறவினர் சிலர் இதற்காகக் கல்கத்தாவுக்கு போகத் தீர்மானித்தார். அதனை அறிந்த அம்மையார் தம்மையும் அவர்களுடன் அழைத்துச் செல்லுமாறு வேண்ட, அவ்வுறவினர் அதற்கு அவரது தந்தையின் உத்திரவு கேட்டலே முறைமை என்று கூறினர். அங்ஙனம் தந்தையாருக்கு அறிவித்தலும், அவர் தம் மகளுடைய உட்கருத்தை யுணர்ந்து தாமே தமது மகளை தக்ஷிணேஸ்வரத்துக்கு அழைத்துச்செல்ல எத்தனித்தார். ஜெயராம்பட்டியிலிருந்து கல்கத்தாவுக்கு புகைவண்டி யில்லாததினாலும், பல்லக்கேறிப்போக பொருளின்மையாலும், கால்நடையாகவே 80 மைல்வழியும் நடந்துசெல்லவேண்டியதாயிற்று. 1872-ளுத்தில் குறித்தநாளில் இருவரும் பிரயாணப்பட்டு கால் நடையாய்ச் சென்றார்கள். இரண்டு மூன்றுநாள் அவ்வளவு கஷ்டம் தோன்றவில்லை. நான்காம் நாள் களைத்த ஸ்ரீசாரதாதேவியாருக்கு எப்பொழுதும் நெடுந்தூரம் சென்று பழக்கமில்லாததினால் அவருக்குக் கடுமையான சுரம் காணலாயிற்று. ஆகவே அவர்கள் ஒரு சத்திரத்தில் தங்க வேண்டியிருந்தது.

வழியில் அதிசயமான காட்சி.

ஸ்ரீசாரதா தேவியார் எதிர்பாராத இக்கஷ்டம் நேர்ந்ததைப் பற்றி விசனித்திருந்தரேனும், தாம் கண்ட திவ்ய கனவினால் ஆறுதலடைந்தார். அதைப்பற்றி தேவியாரே அடியில் வருமாறு உரைத்தருளினார். "நான் ஜுரத்தோடு பிரக்ஞை தப்பிக் கிடந்தபோது இளம் பெண் ஒருத்தி என் பக்கத்தில் வந்து உட்காரக்கண்டேன். அவள் திருமேனி நீல வர்ணமாயிருந்த போதிலும் அவளுடைய பேரழகும் அதிப்பிரியமான திருவாக்கும் என்றும் மறக்கத்தக்கனவன்று. அவளது குளிர்ந்த திருக்கரங்கள் என் உடலைத் தடவலும் நான் பாதைபட்டுக்கொண்டிருந்த எரிச்சல், நோய் எல்லாம் நீங்கின. நான் அந்தப் பெண்ணைப்பார்த்து அம்மா! நீ யார்? எங்கிருந்து வருகிறாய்? என்று வினவினேன்.

அதற்கு அவள் "தக்ஷிணேஸ்வரத்திலிருந்து வருகிறேன்" என்று மறுமொழி கூறவே, நான் அதிசயித்து தக்ஷிணேஸ்வரத்திலிருந்தா வருகிறாய்? நானும் அவ்விடத்துக்குத்தான் போகவேண்டும். அவரைக்கண்டு அவருக்குத்தொண்டு புரியமெத்த ஆவலாயிருக்கிறேன். ஆனால் இந்த ஜுரம் நோய் எதனையும் தலைக்கீழாக்கிற்றே என்றுரைக்க, அந்தப்பெண் "அஞ்சேல், உன்பிணி நீங்கியதும் நீ தக்ஷிணேஸ்வரத்துக்குச்சென்று அவரைக்காண்பாய். உனக்காகவன்றோ நான் அவ்விடம் வைத்தேன்" —என்று அவள் கூற, நான் அவளை நோக்கி, "என் மீதில் இவ்வளவு அன்பு பாராட்டுகிறபடியால் நீர் யார்?" என்று மறுபடியும் கேட்டேன். அதற்கு அவள், "நான் உனக்கு உடன் பிறந்தாளாதல் வேண்டும்." என்று பதிலுரைத்தாள். அதற்கு நான் "ஆ! ஆ! ஆனது பற்றியே இவ்விடம் வந்தாய் என்று கூறித் திரும்பவும் நான் நித்திரைப் போனேன்".

மறுநாள் ஸ்ரீராமசந்திரர் தமது மகளுக்கு நோய்நீங்கியதைக் கண்டு, மெதுவாய் நடந்துசெல்லுதலே நன்றெனக்கருதி, இருவரும் பிரயாணம் செய்யத் தொடங்கினார்கள். சிறிதுதூரம் சென்றபின் தற்செயலாய் எதிரே ஒரு பல்லக்கு வருவதைக் கண்டு அதனை அமர்த்தினார். அன்றைய தினமும்சுரம் வந்தது. ஆனால் அவ்வளவு மும்மரமாயில்லை. அதனை அம்மையார் தமது தந்தையாரிடம் கூறவில்லை. அவர்கள் தக்ஷிணேஸ்வரம் சேர்ந்த போது இரவு 9-மணியாயிற்று.

ஸ்ரீ இராம கிருஷ்ணர் தரிசனம்.

ஸ்ரீசாரதா தேவியாரைக் கண்டவுடன் ஸ்ரீ இராம கிருஷ்ணர் அம்மையாரை நோக்கி "உலகிலுள்ள ஸ்திரீகளெல்லாரும் தேவியின் அம்சங்களாய்த் தமக்குத் தாய்மாரே யாவரென்றும், ஆகையால் நீயும் எனக்கு மாதாவேயாகிறாய், உன்னை மனைவியாகக்கொண்ட இராம கிருஷ்ணன் இறந்துபோய் அநேக வருஷங்கள் ஆய்விட்டன. உன்னை மாதாவாகக் கொள்ளும் ராம கிருஷ்ணனே இங்கு இப்பொழுது இருக்கிறான்." என்று சொல்ல, அவ்வுத்தமியான பதிவிரதா சிரோன்மணியார், தம் பர்த்தாவின் திருவவதாரத்தின் கருத்தை நிறைவேற்றுவதற்கியைந்தவாறு உணர்ந்து தம்மை அவருடையவாழ்க்கைத் துணைவியாய் எற்றுக்கொள்ளும்படி வேண்டி, அவர் அனுஷ்டானங்களுக்கு வேண்டிய சௌகரியங்களை யொட்டித்தாம் அவருக்கு சிசுரூஷை செய்ய விரும்புவதாகக் கூறி, அவருடைய அனுமதியை வேண்டினார். ஸ்ரீராமகிருஷ்ணரும் அவ்வாறே சம்மதித்தார்.

பிற்பாடு ஸ்ரீசாரதா தேவியார் நோயுற்று வந்திருப்பதைப் பார்த்து அவர் மனக்கவலைக்கொண்டு அவர் வேறு இடத்தில் படுத்திருந்தால் குளிர் தட்டுமென்று அஞ்சித்தமது அறைக்குள்ளே வேறொரு படுக்கையை அவர்க்கு அமைத்து, அடிக்கடி "ஆ இத்துணைக்காலம் கழித்து தாமதப்பட்டு வந்தாயே!

உனக்கு வேண்டியதெல்லாம் அன்புடன் கொடுக்கவல்ல என்னுடைய மதுரா நாதனும் * இல்லாமல் போனானே" என்று மன வருத்தத்தோடு கூறினார். வியாதிக்குத்தக்க சிகிச்சை செய்து, மூன்று நான்கு நாட்களில் அம்மையார் சௌக்கியமாய் விட்டதைக்கண்டு, அதன் பின்னர், தனியாய் வாசம் செய்து கொண்டிருந்த தம் தாயார் சந்திரமணி தேவியாருடன் வாசம் செய்ய சொன்னார். பிறகு மாமியாரும் மருமகளும் ஒருங்கு வாழ்ந்திருந்தார்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர் உபதேசம்.

ஸ்ரீசாரதா தேவியார் தக்ஷிணேஸ்வரத்தில் சில நாள் வாழ்தலும், தமது கொழுநரைப்பற்றிய சந்தேகங்களெல்லாம் நீங்கப் பெற்று நாலு வருஷத்துக்குமுன் போலவே அவர் தம்மீது காட்டிய அளவிறந்த அன்பையும், ஆதரவையும், சிறிதும் மாறா அவரதுதெய்வீக இயல்பையும், கண்டு மகிழ்ச்சியடைந்தனர். அறியாமையினாலே ஊரார் அவரைப்பற்றிப் பலவிதமாய்ப் பேசினார்கள் என்று உணர்ந்தார். தமது கணவருக்கும், மாமியாருக்கும் வேண்டிய பணிவிடைகளெல்லாம் குறைவறச் செய்து அதிதிகளையும் முறைப்படி உபசரித்து வந்தார். குமாரத்தியின் மகிழ்ச்சியைக்கண்ட ஸ்ரீராமசந்திர முகோபாத்தியாயரும் விடைபெற்றுத் தன் கிராமத்துக்குச் சென்றார். "எல்லாம் ஜகன் மாதாவின் திருவுளப்படி ஆகுக" என்பது ஸ்ரீராம கிருஷ்ணருடைய மனோ நிலையாதலால், ஸ்ரீசாரதா தேவியார்த்தா

---

* **மதுரநாதர்** என்பவர் தக்ஷிணேஸ்வர ஆலயத்தைக் கட்டுவித்த இராணி இராஜாமணியினுடைய மருமகப்பிள்ளை இராணியாருடைய ஆஸ்திகளையும், தக்ஷிணேஸ்வர ஆலயத்தையும் அவர் பாதுகாத்து வந்ததும் தவிர, தமது வாழ்நாள் முழுதும் ஸ்ரீராம கிருஷ்ணருக்கு மெத்த பக்தியுடன் திருத்தொண்டு செய்து வந்தார்.

மாகவே இவரை வந்தடைந்ததும் ஜகன் மாதாவின் திருவருள் திறமே என்றெண்ணி அவர் தம்தர்மபத்தினிக்கு நான்கு வருஷ காலங்களுக்கு முன் கமார்புகாரில் செய்யத்தொடங்கிய உப தேசங்களை இங்கு இப்போது அவர் பூர்த்தி பண்ணிவைத்தார்.

அவர் இத்தடவை முக்கியமான உபதேசம் ஒன்று ஸ்ரீசாரதா தேவிக்குச் செய்தருளினர். அது என்னவென்றால் "உலகில், தோன்றும் மக்கள் அனைவருக்கும் சந்திரன் அவர்களது அன்புக்குரிய மாமனாவதுபோல் (நம் தேசத்தில் சந்திரனை சந்த மாமா என்று அழைப்பது வழக்கம்), கடவுள் உலகத்திலுள்ள ஜீவராசிகளுக்கெல்லாம் அவர்களது அன்புக்குரிய தந்தையாக இருக்கிறார். ஆதலால் அவரை விரும்பி வணங்க ஒவ்வொருவருக்கும் சம்மானஉரிமையுண்டு. யார்ஒருவர் அவரை விரும்பி அன்போடு அழைப்பாரோ, அவர் அவர்கட்கு அருள் புரிகிறார். நீயும் அவரை அன்போடு நாடினால் அவரைக் காண்பாய்" என்பதேயாம். சம்சார வாழ்க்கையின் அறிவு முதல், பிரம்மவித்தை ஈறாக எல்லா வித்தைகளையும் ஸ்ரீராமகிருஷ்ணர் அவருக்குப் போதித்தார்.

ஷோரஸி பூஜை.

குறிப்பு–(ஒரு கன்னிப்பெண்ணைத் தேவியாகப்பாவித்து அவளை முன் வைத்து பூஜை செய்வதே ஷோரஸிபூஜை எனப்படுவது).

ஸ்ரீராமகிருஷ்ணர் தந்திரிகச்சாதனங்கள் யாவும் முடிவு பெற்றபின், ஸ்ரீசாரதாதேவியார் தக்ஷிணேஸ்வரத்துக்கு வந்து இரண்டு மாதமானதும், அவர் மனதில் ஒரு விசித்திரமான எண்ணம் உதித்தது. அதாவது ஸ்ரீசாரதா தேவியைத் தேவியாகப் பாவனைசெய்து சாஸ்திரப்படி சடங்குகளுடன் ஸ்ரீராம

கிருஷ்ணர் பூஜை செய்ததே. 1872—வருஷம் (பிரஜோத்பத்தி வருஷம் வைகாசி-மீ அமாவாசையன்று) ஸ்ரீகாளிகாதேவியைப் பூஜைசெய்யும் விசேஷதினமாதலால், அப்புண்ணிய தினத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் அதற்குவேண்டிய சாமக்கிரியைகளை எல்லாம் தாம் வசித்திருந்த அறையில் சேகரித்து வைத்திருந்தார்.

வழக்கம்போல் ஜெகன் மாதாவின் கோயிலில் பூஜை செய்யாமல், தமது அறையிலேயே பூஜை செய்ய எண்ணி பவித்திர மாதாவாகிய ஸ்ரீசாரதா தேவியாரை இரவு 9 மணிக்கு வரச்சொல்லி, ஸ்ரீராம கிருஷ்ணர், அம்மையாரை ஜகன்மாதாவின் வடிவெனப்பாராட்டித் தாம் அர்ச்சகர் ஸ்தானத்தை வகித்துக் கொண்டு, முதற்கண் செய்ய வேண்டிய சடங்குகளை முறையே செய்தபின் பவித்திர மாதாவை தமது வலது பக்கத்தில் ஸ்ரீகாளிகா தேவியாருக்குப் பிரதிஷ்டை செய்திருக்கும் ஸ்தானத்தில் உட்காரும்படி நியமித்தார், ஸ்ரீசாரதா தேவியாரும் அச்சடங்குகளை கவனித்துக்கொண்டு தமது உணர்வு ஒருவாறு அகமுகப்பட்டிருக்கும்போது அடையாளம் காட்டிய அவர் ஸ்தானத்தில் போய் உட்கார்ந்தார்.

விஷ்ணுதேவாலயத்து அர்ச்சகர் தீனநாத் என்பவர்மாத்திரம் தம் வேலையை முடித்தபிறகு அந்தச் சடங்குகளுக்கு உதவிபுரிந்துக்கொண்டு அச்சமயம் அங்கிருந்த ஸ்ரீகாளிகாதேவி ஸ்தானத்தில் பவித்திரமாதாவை வைத்து, ஸ்ரீராமகிருஷ்ணர் அம்மையாரையே தேவியம்மையாக நினைத்து முறைப்படியே தூப, தீப, நைவேத்தியங்கள் சமர்ப்பித்துத் தேவிக்குத் தம் திருக்கரங்களால் அமுதுஊட்டினர். பூஜை நடைபெறுங்கால் பவித்திர மாதா, சமாதியில் ஆழ்ந்தாராக, ஸ்ரீராமகிருஷ்ணரும் மந்திரங்களை ஜபித்துக்கொண்டே பூர்ணசமாதியில் அமிழ்ந்துவிட்டார். அர்ச்சக ஸ்தானத்தை வகித்த ஸ்ரீராமகிருஷ்ணரும், அம்மையாரும் முற்றும் உணர்விழந்து அனைத்தையுங்கடந்த அதீத நிலை

யில் ஏகமாகி நிற்பாராயினர். இவ்வண்ணம் அர்த்தராத்திரியில் கொஞ்சம் பிரக்ஞைவந்து ஸ்ரீராமகிருஷ்ணர் ஒரு மந்திரத்தை ஜபித்துத் தம்மையும் தமது வாழ்நாளெல்லாம் செய்த சாதன பலன்கள் யாவற்றையும் தமது ஜபமாலையுடன் பவித்திரமாதா வின் திருவடிகளில் ஒப்புவித்து, அவர் சாஷ்டாங்கமாகப் பணிந்து, "சர்வமங்கள மாங்கல்யே சிவே சர்வார்த்த சாதகே சரண்யே திரியம்பகே தேவி நாராயணி நமஸ்துதே"—என்று துதித்து நின்றனர். இவ்வாறு தந்திர சாஸ்திரங்களில் சொல் லும் ஷோடசி பூஜை—யென்னும் புனித சடங்கைச் செய்து ஸ்ரீராமகிருஷ்ணர் தம் சாதனைகளை முடிவு செய்தார்.

தெய்வீக வாழ்க்கை நாட்கள்.

ஸ்ரீசாரதா தேவியார் தக்ஷிணேஸ்வரத்திலே தம் கணவ ரோடு வாழ்ந்திருந்த காலத்தில் தாம் அனுபவித்த ஆனந்த வாழ்வைப் பின் வருமாறு தம் சிஷ்யைகளுக்குக் கூறியுள்ளார். "நாங்கள் அக்காலத்தில் நடத்திய தெய்வீக வாழ்க்கையைத் தக்க வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. பரவசநிலையிலிருந்து கொண்டு அறிதற்கரிய விஷயங்களை சில வேளை அவர் பேசிக் கொண்டிருப்பார். சில வேளை சிரிப்பார். சில வேளை கண்ணீர் விட்டழுவார். மறுபடியும் அசைவற்று யோக சமாதியில் ஆழ்ந்து விடுவார். இரவெல்லாம் இவ்விதமாகவே கழியும். அவரது அற்புதமான தெய்வத்தோற்றத்தைக்கண்டு நான் பய ந்து நடுங்கியதுமன்றி இரவு எப்படி கழியுமோவென்று மெத்த கவலையோடு விழித்துக் கொண்டிருப்பேன். அப்பொழுதுதான் சமாதியின்னதென்று அறிந்தேன். ஒரு நாள் இரவு அவர் வெகுநேரம் சமாதி கலையாமல் இருந்ததைக்கண்டு நான் மெத்த பயந்து கண்ணீர் விட்டழுது ஹிருதயராமரை உதவிக் கழைத்தேன்.

அவர் வந்து சற்று நேரம் வரைக்கும் அவர் செவியில் பகவன்னுமத்தை உச்சரிக்கவும், அவருக்கு உலகப் பிரக்ஞை வந்து கண் விழித்தார். பிற்பாடு நான் துன்பப்படுவதைப் பார்த்து பலவித பரவச நிலைக்குத் தகுந்தவாறு தகுந்த பகவன்னுமத்தை உச்சரிக்கவும், வேறு நிலைமையில் இருக்கும்போது அதற்குத் தகுந்த மந்திரங்களை உச்சரிக்கவும் எனக்குக் கற்பித்தருளினர். பிற்பாடு எனக்கு அவ்வளவு பயம் தோன்றவில்லை. ஏனென்றால் அவர் சொல்லிய கிரமத்தை அநுசரித்ததினால் அவருக்குப் பிரக்ஞை வரும். இவ்வாறு மாதக்கணக்காக காலங்கழியலாயிற்று. பின்னர் ஒரு நாள் எத்தருணத்தில் தமக்குச் சமாதி வாய்த்து அதனிமித்தம் நான் இரவெல்லாம் கண் விழித்திருக்க வேண்டுமென்பதைத் தாம் ஆலோசித்து என்னைத் தம் தாயாருடன் படுக்கக்கட்டளையிட்டருளினர்." சிறிது காலம் தக்ஷிணேஸ்வர கோயிலுக்கு வடபாரிசத்திலுள்ள மேளம் முதலிய வாத்தியங்கள் முழங்கும் கட்டடத்தின் கீழறையில் அம்மையார் தனியாய் வாசம் செய்து வந்தனர். அவ்வறையிலிருந்து ஒரு துவாரத்தின் வழியாய்த்தான் வெளியே இருக்கும்படியானதைப் பார்க்கக்கூடும். ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்க இரவும், பகலுமாய் அம்மையார் காத்துக்கொண்டிருப்பார். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ணர் அவ்வழியே போகும்போது தமது முகத்தை வஸ்திரத்தால் "மூடிக்கொண்டு செல்வது வழக்கம். இவ்விதமாக, அவரைத்தரிசிக்கமுடியாமல் அநேக நாட்கள் கழிந்தன.

சரியான விடை.

ஒரு நாள் தக்ஷிணேஸ்வரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணர் காளி கோயிலுக்குச்சென்று பேரானந்தத்தில் மூழ்கினவராய் சிவந்த முகத்தோடும் தளர் நடையோடும் நடந்து வந்து கொண்டிருந்தார். ஸ்ரீசாரதா தேவியார் தற்செயலாய் எதிர்பட்டதும், குருதேவர் அவரை நோக்கி, "நல்லது, நான் கள் குடித்திருக்கிறேனோ?" என்று கேட்க, பவித்திரமாதா "சற்றுமில்லை."

என்று பதிலுரைக்க, பின்னும் குருதேவர் "அவ்வாறு ஆயின், நான் என் இவ்விதமாய் நடந்து கொள்ளுகிறேன்?" என்று வினவ, அதற்கு பவித்திரமாதா அமைதியோடு "லோகமாதாவின் திவ்யானந்தத்தை அநுபவிக்கிறீர்" என்று சொல்ல, ஸ்ரீராமகிருஷ்ணர் மெத்த மகிழ்ச்சியடைந்து "நன்றாய்ச் சொன்னாய்!" என்று புகழ்ந்தார்.

பெரும் சோதனை.

ஒரு நாள் இருவரும் ஒரே படுக்கையில் படுத்திருக்கும் போது, ஸ்ரீராமகிருஷ்ணர் விழித்தெழுந்து தன்மனதை நோக்கி "மனமே! உலகினர் மெத்த அருமையாய்ப் பாராட்டும் இதே ஸ்திரீரூபம் உன்முன்கிடக்கிறது. ஆனால் எவனொருவன் அதில் இச்சை கொள்ளுகிறானோ, அவன் அந்த உடற் கூற்றில் கட்டுண்டு கடவுளைக் காணமாட்டான். ஓ மனமே! இந்தச் சிற்றின்பம் வேண்டுமோ? அல்லது பேரின்பம் வேண்டுமோ! உள்ளதைச் சொல்லிவிடு"—என்றார். இப்படிச் சொல்லும்போது அவருடைய பரிசுத்தமான மனது அன்றிரவு முழுதும் ஆழ்ந்த சமாதியிலிருந்தது. மறுநாள் காலமே நெடுநேரம் அவர்காதில் பகவன்னாமத்தை உச்சரித்த பின்னரே மிக வருந்தியும் உலகப் பிரக்ஞை வந்தது. இது தான் தமது மனம் அவருக்குத் தந்த மறுமொழி. அநேக நாட்களும், மாதங்களும் இவ்விதமாகக் கழிந்தன. ஆனால் ஒரு நாளாகிலும் இத்திவ்ய தம்பதிகளுக்குச் சிற்றின்ப உணர்ச்சி கிஞ்சித்தும் வந்ததேயில்லை. இவ்விருவரும் அகண்டானந்தத்தை நாடினவர்கள்.

ஸ்ரீராமகிருஷ்ணர், ஒரு அன்பரைப்பார்த்து உறுதியான மொழிகளால் "எனக்கு விவாகம் ஆன பிற்பாடு என் மனதிலிருந்து சிற்றின்ப அவாமுதலிய விகாரஉணர்ச்சியை அடியோடு ஒழித்துவிட ஜகன் மாதாவை மெத்த வேண்டிக்கொண்டேன். அவள் கிருபாகடாக்ஷத்தை எனக்குத் தந்தாளென்பதை நான் இந்நாட்களில் அவளோடு சகவாசம் செய்ததினால் தெரிய வந்

தது. அவள் திரிகரணமும் அவ்வாறு சுத்தமாயிருந்திராவிடின், என் சாதனைகளுக்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்தாலுமிருக்கும். விவாகமானது முதல் இது ஒரு கவலையாயிருந்தது. அவள் மனதில் உடல் இச்சை உதிக்காமலிருக்க சதா ஜகன் மாதாவை நான் வேண்டினேன். என் வேண்டுதலும் நிறைவேறிற்று." (பிரஹ தாரணயக உபநிஷத்தில் பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. "கடவுள் நாயகன் ஸ்வரூபமாக இருப்பதால் மனைவி தன் நாயகனை நேசிக்கிறாள். அக்கடவுளே நாயகி ஸ்வரூபமாக இருப்பதால் நாயகன் நாயகியை நேசிக்கிறான்)" ஸ்ரீராமகிருஷ்ணருடைய இல்வாழ்க்கையானது இவ்வரிய உண்மையைத்தான் அடிப்படையாகக்கொண்டு அமைந்திருக்கிறது.

ஸ்ரீசாரதாதேவியாரை லோகமாதாவாக பாவித்தல்.

ஸ்ரீராம கிருஷ்ணருக்கும், ஸ்ரீசாரதா தேவியாருக்கும் இருந்து வந்த சம்பந்தம் ஆத்மார்த்த மானதே ஒழிய அணுவளவும் உடலோடு ஒட்டியதன்று. ஒரே படுக்கையில் இத்தம்பதிகள் நித்திரை செய்வார்கள். ஸ்ரீராமகிருஷ்ணருக்கு உடலைப்பற்றிப் பிரக்ஞையே கிடையாது. இரவெல்லாம் சமாதியிலாழ்ந்திருப்பார். ஒரு நாள் தன் கணவர் திருவடிகளை அம்மையார் வருடிக் கொண்டிருக்கும்போது அவரை நோக்கி, "நாதா! என்னை எவ்வாறு கருதுகிறீர்கள்?" என்று வினவ, உடனே அவர் தம்மைச் சுட்டிக்காட்டி "இந்த தேவாலயத்தில் திருக்கோயில் கொண்டருளியிருக்கும் ஜகன்மாதாவே ஓர் உருக்கொண்டு இந்தத் தேகத்தை ஈன்றாள். அவளேதான் மற்றொரு உருவெடுத்து இப்பொழுது இங்கு காலைத்தடவி பணிவிடை செய்கிறாள். உண்மையாய் உன்னை ஆனந்தமாயினுடைய ஸ்வரூபமாகக் காண்கிறேன்" என்று விடையளித்தார்.

ஒரு உத்தம ஸ்திரீ சமாதியில் அமர்ந்தது.

ஸ்ரீராமகிருஷ்ணர் ஸ்திரீகளைக்கேவலம் பார்வை மாத்திரத்திஞலேயே அவர்களின் சுபாவங்களைக்கண்டு கொள்வார். சில ஸ்திரீகள் தேவகணத்தைச்சேர்ந்தவர்களென்றும், சிலர் அஸுர கணத்தைச் சேர்ந்தவர்களென்றும், பிரித்துத் தேவகணத்தைச் சேர்ந்தவர்கள் தெய்வபக்தி பொருந்தி பதிவிரதா சிரோன்மணிகளாய் தம் கணவர்களின் இம்மை, மறுமைச் சுகங்களுக்கு ஆதாரமாயிருப்பார்கள் என்றும், அஸுர கணத்தைச் சேர்ந்தவர்கள் தம் கணவர்களை இம்மைச் சுகங்களிலேயே யழுந்தியிருக்கச்செய்து நித்யானந்தப் பதவியை இழக்கச்செய்வார்கள் என்றும் கூறுவார்

ஒரு நாள் தம்மைத் தரிசனம் செய்யத் தக்ஷணேஸ்வரத்துக்கு வந்த உத்தமகுலத்தில் பிறந்த ஒரு மாதைக்கண்டு, அவர் அவளது திருவடிகளில் புஷ்பங்களைச் சாத்தித் தூப தீபங்களால் அவளை ஆராதித்து "தாயே" என்று கூற, அவள் அக்கணமே சமாதியில் அமர்ந்து இரண்டுகரங்களையும் மேலேதூக்கி ஸ்ரீராமகிருஷ்ணரை ஆசீர்வதிக்கும் வண்ணமாய்நின்ருள். வெகு நாழிகையாய் அந்த உத்தமி சமாதியிலிருப்பதைக்கண்டு, அவளது புருஷனுக்கு இச்செய்தி தெரிந்தால் தம்மை நிந்திப்பாரென்று அஞ்சி, ஸ்ரீகாளிகா தேவியைப் பிரார்த்திக்க, அவள் உடனே வெளிப் பிரக்ஞையடைந்து,மெத்த ஆனந்தத்துடன் வண்டியேறி வீடுபோய்ச் சேர்ந்தாள்.

ஒரு ஸ்திரீயைத் தேவியார் அனுகிரஹித்தல்.

ஒரு நாள் ஒருஸ்திரீ ஸ்ரீராமகிருஷ்ணதேவரிடம் வந்துதன் பந்துக்களில் ஒருவர் துன்மார்க்கப் பிரவர்த்தகராயிருப்பதாய்ச் சொல்லி அவரை நல் வழிக்குத்திருப்ப அவர் கையால் ஏதாவது மருந்து கொடுத்தருள் வேண்டுமென்று அவரைப் பிரார்த்தித்தாள். அதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் தனக்கொன்றும் தெரியா

தென்றும் எதிர்குடிசையில் சித்தி பெற்ற ஸ்திரீ ஒருத்தி இருப்பதாயும் அவளுக்கு எல்லா மந்திரங்களும் தந்திரங்களும் தெரியுமென்று கூறியனுப்பினார். இந்த ஸ்திரீ ஸ்ரீசாரதா தேவியாரிடம் சென்று பிரார்த்திக்கவும், அவர் தம் பர்த்தாவின் சொற்களின் இருதயக் குறிப்பை யுணர்ந்து, அவளது பக்தியை விருத்தி செய்யும்பொருட்டுத் தம் பர்த்தாவின் மகிமைகளை அவளுக்குக்கூறி அவர் எல்லாம் தெரிந்தவரெனத் திரும்பவும் அவரிடமே அனுப்ப, அவர் மறுபடியும் தேவியாரிடம் அனுப்ப, இவ்வாறு பலமுறை யலைந்த பின்னர் அந்த ஸ்திரீ கடைசியாகத் தேவியார் தன்னை பரிசோதிப்பதாயெண்ணி அவரது பாதங்களில் வீழ்ந்து கெஞ்சிக்கொண்டாள். தேவியாரும் கருணை கூர்ந்து சில வில்வம், துளசி தளங்களையும் தாமரை மலரையும் யளித்து அது துக்க நிவிருத்தியைச் செய்யுமென அருள் புரிந்தார்.

இலட்சுமி நாராயண மார்வாடியின் காணிக்கை.

இலட்சுமி நாராயணர் என்னும் ஒரு மார்வாடி தனவந்த பக்தன் ஸ்ரீராமகிருஷ்ணர் படுக்கையில் கறைப்பட்டிருந்த ஒரு துப்பட்டியைப் பார்த்து, அவர் சௌகரியங்களுக்காக வெகுமானமாய் அவர் பேரில் 10,000–ரூபாய் உபநிதியாய் வைத்து, அவருடைய திருவுளம் பற்றும்படி வேண்டினன். இவ்வார்த்தைகள், ஸ்ரீராமகிருஷ்ணர் காதில் நாராசம் புகுந்ததுபோல் தைத்தது. இந்த ஆலோசனைக்கு ஒவ்வாமல் இந்த விஷயத்தைத் தவிர்க்கும்படி இறைஞ்சிக்கேட்டுக் கொண்டார். என்ன வருந்திக்கேட்டும் பிரயோசனப்படாததால், ஸ்ரீசாரதாதேவியின் மனப்போக்கு எப்படியிருக்கிறதென்று அறிய ஹிருதயராமரை அனுப்பிக் கேட்க, அதற்கு அம்மையார் "அது எப்படிமுடியும்? நான் வாங்குவதும், அவர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) வாங்குவதும்

ஒன்றுதான். நான் வாங்கினாலும் கூட, அவருடைய திருத் தொண்டுக்காகத்தான் செலவு செய்யவேண்டும். அவருடைய தியாகத்துக்குத்தான் ஜனங்கள் அவரைப் போற்றுகிறார்கள். ஆகையால் அதனை ஏற்றுக்கொள்ள எனக்கு இஷ்டமில்லை" என்றனள்.

நல்ல எண்ணத்தோடு வந்த அந்த மனிதன் இன்னும் மெத்த வேண்டிக்கொள்ள, ஸ்ரீராமகிருஷ்ணர் மெத்த வேதனை பட்டுக்கொண்டு, ஆஸ்தி சேகரித்து வைக்கவேண்டுமென்ற எண்ணம் சகிக்காமல் "ஓ தாயே! உன்னைவிட்டு விலகியிருக்க வேண்ட, இப்பேர்ப்பட்ட மனிதரை ஏன் இங்கே கொண்டுவருகிறாய்!" என்று உறக்கஅழ, மார்வாடி மறுபடியும் இதைப்பற்றிப் பேசவில்லை. இச்சம்பவத்தைப்பற்றி ஸ்ரீராம கிருஷ்ணர் பிற்காலத்தில் "மதுரநாதர், இலட்சுமி நாராயணன், முதலியவர்கள் வெகுமானமாய்வைக்க எத்தனித்த கொடைகள் என் மண்டையோடை வாளால் அரிப்பதுபோல் உணர்ந்தேன்" என்றார்.

கள்ளர் காளி கோயில்.

ஸ்ரீசாரதாதேவியார் தக்ஷிணேஸ்வரத்தில் ஸ்ரீராமகிருஷ்ணரோடு ஒரு வருஷம் 8-மாதம் வரையில் தங்கி கமார்புகாருக்கு கார்த்திகை மாதம் 1873—வருஷம் திரும்பிச் சென்றார். இங்கே சில காலம் கழித்து சித்திரை மாதம் 1874—வருஷம் இரண்டாம் முறை தக்ஷிணேஸ்வரம் வர நேரிட்டது. அக்காலத்தில் அடிக்கடிப் பிரயாணம் செய்யும்போதெல்லாம் பணமில்லாததினால் எப்பொழுதும் கால் நடையாகவே செல்வது வழக்கம்.

ஜெயராம்பட்டிக்கும் தக்ஷிணேஸ்வரத்துக்கும் மத்தியிலுள்ள **ஆரம்பாக்கம்** என்னும் வயல்களின் நடுவில் காளியின் சிலையிருப்பதை இப்பொழுதும் பார்க்கலாம். அந்தக் காளிக்குக் **கள்ளர்காளி** என்றுபெயர். கொள்ளைக்காரர் திருடப் புறப்படும் போது அந்தக் காளிக்கு பூஜைசெய்துதான் புறப்படுவார்கள்.

அந்தப் பக்கங்களில் பெருங்கூட்டமாக அல்லாமல் பிரயாணிகள் யாத்திரை செய்வதில்லை. ஒரு நாள் ஸ்ரீசாரதா தேவியார் அடுத்து வந்த சூர்யகிரஹண நாளன்று கங்கா ஸ்நானம் செய்யப் பந்துக்களில் சிலரோடு கூடி கால் நடையாகப் புறப்பட்டார். விரைந்து வழிநடக்கும் திறமையில்லாததால் அவர் தங்கி தங்கி செல்வதினுல் பின்பட்டுத்தமது தோழியர்களைத் தாரகேசுவர க்ஷேத்திரத்தில் காத்திருக்கவேண்டி, அவ்விடத்துத் தாமும் அவரைக் கூடுவதாக உரைத்தார். ஸ்ரீசாரதா தேவியும் மற்ருெரு விருத்தையும் தவிர ஏனையோரெல்லாம் விரைவாகப் புறப்பட்டு விட்டார்கள்.

திருட கள்வத் தகப்பனுர்.

ஸ்ரீசாரதா தேவியார் அவர்களைத் தொடர்ந்து செல்ல முயன்று பார்த்தும் முடியவில்லை. மாலைப்பொழுதாய் இருட்டி விட்டது. அம்மையார் வயல் காட்டின் நடுவில் போய்க்கொண்டிருக்கும்போது அவருக்குத் திகில் உண்டாயிற்று. அந்த வேளையில் நீண்டதொரு தடியைப் பிடித்தவனும் கரிய நிறமுள்ளவனுமான ஒரு மனிதன் விரைவாய் ஓடிவந்து அம்மையார் எதிரே நின்ருன். அவன் பின்னுல் வேறு யாரோ ஒருவரும் வந்து கொண்டிருந்ததையும் தேவியார் கண்டனர். தப்ப வழியில்லாமல் நடுக்கம் கொண்டு மரம்போல் நின்றுவிட்டார். வந்தவன் முரட்டுத்தனமாய் "நீ யார்? இந்த அகால வேளையில் எங்கே போகிருய்?" என்று கேட்டான். அதற்குத் தேவியார் "கிழக்கே போகிரும்"—என்று பதில் கூற, அந்த மனிதன் வேருெரு வழியைச் சுட்டிக் காண்பித்து, இவ்வழியாக நீ போக வேண்டும் என்ருன். தேவியார் அதனைக்கேட்டு சற்றே தயங்கி நிற்க, அதனை உற்றுநோக்கிய அம்மனிதன் "பயப்படாதே! என்னுடைய மனைவி பின்னுல் வருகிருள்" என்று சொன்னுன்.

ஸ்ரீசாரதா தேவியார் தந்தையே! என்று அழைத்து தன்னுடைய கஷ்டத்தைச் சுருக்கமாய் முறையிட்டார். அப்பொழுது அவனது மனைவியும் வந்து சேர்ந்தாள். அம்மையார் அவனது மனைவியைத் தாய் என்று கருதி அவளது கரத்தைப் பிடித்துக்கொண்டு, "தாயே! நான் தான் உன்னுடைய மகள் சாரதா. நான்மெத்த அபாயகர நிலையில் இருந்தேன். நல்லவேளையாய் நீஙகளும் அப்பாவும் இங்கு வந்து சேர்ந்தீர்கள். நீங்கள் வராவிட்டால் என் கதி என்னவாயி இருக்குமோ, தெரியாது" —என்று 'முறையிட்டார். முன் பின் அறியாத தேவியார் தங்களிடம் இவ்வளவு நம்பிக்கை வைத்து பேசிய மொழிகளைக் கேட்டுக் கள்ளா ஜாதியரான பலத்த தம்பதிகள் இருவரும் தங்களுடைய இருதயம் நெகிழ்ந்து உருகப் பெற்றோர்களாதலின், அவர்கள் அன்பு கூர்ந்து பக்கத்திலுள்ள ஒரு கிராமத்துக்கு அழைத்துச்சென்று அவர்களுக்கு உணவு அளித்து இரவு முழுதும் காத்து வந்தார்கள். மறுநாட் காலையில் தாரகேஸ்வரத்துக்கு உடன் கூட்டிச்சென்றனர். ஸ்ரீசாரதா தேவியார் வினைய தோழியாரை அங்கு கண்டு நடந்த வரலாறுகளை எல்லாம் கூறினர். யாவரும் பரம சந்தோஷமடைந்தார். பிற்பாடு அனைவரும் கூடி தாரகநாத ஈஸ்வரரை மனமாரப்பூஜித்து மீண்டும் தக்ஷிணேஸ்வரத்துக்குப் பிரயாணமானார்கள்.

பிரியுமுன் ஸ்ரீசாரதாதேவியார் வழியிற்கிடைத்த தந்தையையும் தாயையும் பிரிய மனம் பொறுது மிகவருந்தினர். அந்தத் தம்பதிகளும் மெத்த மனம் கரைந்து கண்ணீர் விட்டுப் பிரிய மனமில்லாதவர்களாயிருக்கும்போது, தேவியார் தம்மைக்காண ஒரு நாள் தக்ஷிணேஸ்வரத்துக்கு வரும்படி வாக்குறுதி யளித்த பிறகு அவர்கள் பிரிந்து சென்றனர். கள்வர் தம்பதிகள் இருவரும் சிறிது தூரம் ஸ்ரீசாரதா தேவியாருடன் சென்று, அக்கள்வர் தாய் வழியில் பயிர் செய்திருந்த பச்சை பட்டாணிகள் சிலவற்றை பறித்துத் தேவியார் புடவையில் கட்டி, அன்றிரவு சாப்பிடும் பொறியுடன் அவைகளை உண்ணும்படி வேண்டினள்.

வாக்களித்தபடியே திருக்குலத்தார் இருவரும் தக்ஷிணேஸ்வரத்துக்கு பலதடவை சென்று தேவியாரையும் ஸ்ரீராமகிருஷ்ணரையும் பார்த்து வந்தனர். ஸ்ரீராமகிருஷ்ணரும் அத்தம்பதிகளுடைய மருமகப்பிள்ளையைப்போல் ஒழுகி அவர்களை நன்கு பாராட்டினர். ஸ்ரீசாரதா தேவியார் அம்மனிதனை தன் திருடக்கள்வத் தகப்பனூர் என்று கூறுவதுண்டு.

கோரமான வயிற்றுக்கடுப்பால் வருந்தியது.

ஸ்ரீசாரதா தேவியார் தக்ஷிணேஸ்வர நந்தவனத்தில் ஓர் அறையில் தம்முடைய மாமியாருடன் வசித்து வந்தனர். அவ்வறை இருவர் வாழ்வதற்குப் போதாது. இதைக்கண்ட சம்புசரணமல்லிக், விஸ்வநாத உபாத்தியாயா, என்னும் பக்தர்கள் இருவருஞ்சேர்ந்து காளிகோயில்நிலத்தில் சிறுகுடிசை ஒன்றைக் கட்டுவித்தனர். அவருக்கு உதவிபுரிய ஒரு வேலைக்காரியையும் கொடுத்தனர். இவ்விடத்தில் அம்மையார் அமைதியாயிருந்து தினந்தோறும் குருதேவருக்கு அமுதுசெய்துகோயிலில் அமைந்திருக்கும் அறைக்கு எடுத்துச்செல்வது வழக்கம். ஸ்ரீராமகிருஷ்ணர்பகல் காலத்தில் அம்மையார் குடிசைக்கு எழுந்தருளி சிறிது நேரம் பொழுது போக்கியபின் தமது இருப்பிடம் வருவார். இராப்பொழுது அக்குடிசையில் தங்கமாட்டார். ஒரே ஒருமுறைமட்டும் மெத்த மழையாயிருந்தபடியால் அக்குடிசையில் இராத்தங்கவேண்டியிருந்தது. இவ்வாறு ஒரு வருஷம் கழிந்தது. தேவியார் தமது உடலை சரியாய்க் கவனியாதலால் அவருக்கு வயிற்றுக்கடுப்புண்டாயிற்று.

அவருக்குத் தக்க சிகிச்சையைச் செய்யச்சம்புசரணமல்லிக் மெத்தப் பிரயாசை யெடுத்துக்கொண்டார். அம்மையார் ஒருவாறு பிணி தீரப்பெற்றுத் தெளிவடைந்ததும், 1875-ம் வருஷம் புரட்டாசி மாதத்தில் தம் தகப்பனூர் இடமாகிய ஜெயராம்பட்டிக்குப் போய்ச்சேர்ந்தார். போய்ச் சில நாளைக்கெல்லாம் அம்மையாருக்கு மறுபடியும் நோய் அதிகரித்தது. பிழைப்ப

தரிதாய் விட்டது. தகப்பனார் காலமாய் விட்டதால் வியாதிக்குத தகுந்த வைத்தியம் செய்ய சிறிது சிரமமாகவேயிருந்தது. ஸ்ரீராம கிருஷ்ணர் இச்செய்தியைக்கேட்டு மனம் வருந்தி ஹிருதயராமரை நோக்கி, "நல்லது ஹிருதயா! அவள் அவதரித்து மானிடவாழ்க்கைப் பயனைப்பெறாது போவதா!" என்று சொன்னாராம். ஸ்ரீசாரதா தேவியார் மெத்தக்கஷ்டப்பட்டு நோய் தீர வேறு வழி காணாமல் அக்கிராமத்திலிருக்கும் சிம்மவாஹினியென்னும் காளிகோயிலுக்கு பிறரறியாமல் சென்று சொஸ்தமாகாவிட்டால் தாம் அங்கேயே பிராணத்தியாகம் செய்துக்கொள்ளவேண்டுமென்று அன்ன ஆகாரமில்லாமல் அங்கேயே தங்கினார். தங்கிய சில நேரத்துக்கெல்லாம் ஒருவித மருந்தை உட்கொண்டதால் சில நாளைக்கெல்லாம் சுகமாய் விட்டார். இந்தச சம்பவத்தால் அந்தக் காளிகோயிலுக்கு மெத்த மகிமை வந்தது.

பாணிஹாதி திருவிழாவுக்குப்போக மறுத்தல்.

கங்கைக்கரையில் பாணிஹாதி என்னு மூரில் நடக்கும் விஷ்ணு ஆலயத்திருவிழாப் பார்ப்பதற்காக ஸ்ரீராம கிருஷ்ணர் வருஷந்தோறும் போவது வழக்கம். ஒரு முறை பெண்மக்கள் அடியார்கள் சிலரும் போவதாக ஏற்பாடாயிருந்தது. உற்சவத்திற்குப்போக அவருடன் ஸ்ரீசாரதா தேவியாரும் அக்கூட்டத்தாரோடு வரப்பிரியப்பட்டால் அழைத்துக்கொண்டு வாருங்கள்— என்று ஒரு சிஷ்யையையனுப்ப, தேவியார் அவ்வார்த்தைகளில் அடங்கிய குறிப்புப்பொருளை உணர்ந்து "அவரோடு கூடப் பெரும் ஜனக்கூட்டம் போகும். திருவிழா நடக்கும் இடத்திலும் கணக்கற்ற கூட்டம் கூடும். இவ்வளவு பெருங்கூட்டத்தில் போய்த் திருவிழாவைப் பார்க்கத்தகாதாகையினால் நான் வரவில்லை." என்று மறுமொழியளித்தார்.

பின் ஒரு சமயம் ஸ்நான யாத்திரை என்னும் திருவிழா நடைபெற்றபோது ஸ்ரீராம கிருஷ்ணருடன் சென்று திரும்பிய மாதர்கள் சிலர் அன்றிரவு ஸ்ரீசாரதா தேவியாருடன் தங்க வேண்டியதாயிற்று. இரவில் உணவு உண்ணும்போது, ஸ்ரீராம கிருஷ்ணர் அம்மாதர்களில் ஒருவரை நோக்கி, அவள் வரா திருந்தது நல்லதாயிற்று. ஏனெனில் கூட்டத்திலுள்ளவர்கள் எல்லோரும் நான் அடுத்தடுத்து பாவசமாதியில் போவதை பார்ப்பார்கள். அப்பொழுது, அவளும் கூட வந்திருந்தால், "பார்! ஹம்ஸனும் ஹம்ஸியும் வந்திருக்கும் அழகை" என்று ஜனங்கள் பரிஹாசம் செய்திருப்பார்கள். ஆகையால் அவள் வாராதது நல்லதுதான். மிகுந்த புத்திசாலித்தனமாய் என் கருத்தையுணர்ந்து நடந்து கொண்டாள், என்று கூறினார்.

பாணிஹாதி திருவிழாவுக்குப்போக மறுத்த காரணத்தையும் ஸ்ரீசாரதா தேவியார் பின்னொரு சமயம் சொல்லியுள்ளார். "அவர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) மறுமொழி அளித்த தன்மையை நோக்குங்கால் அது அவர் மனப்பூர்வமாக அளித்த விடை அல்லவென்று தெளிவாய்ப் புலப்பட்டது. நான் போகவேண்டுமென அவர் உள்ளபடியே விரும்பியிருந்தால், 'அவளுக்குப் பிரியமிருந்தால் அழைத்து வாருங்கள்' என்று சொல்லியிருக்க வேண்டியதில்லை. போகவேண்டுமோ, வேண்டாமா என்று முடிவு செய்யும் பொறுப்பை என் மீது சுமத்தியதால் நான் போவது அவருக்கு விருப்பமில்லை என்று அறிந்து கொண்டேன். ஆகையால் நான்போக மறுத்தேன்"—என்று அவ்வம்மையார் கூறினார். பின்னொரு சமயம் இன்னமொரு சம்பவத்தைப்பற்றி ஸ்ரீசாரதாதேவியாரே அடியில்வருமாறு கூறியிருக்கின்றனர். "என்னுடன் தங்கியிருந்த சில மாதர்களும், நானும் ஒரு தெருக்கூட்டத்தைப்பார்க்க விரும்பினோம். ஆனால் தாகூர் (ஸ்ரீராமகிருஷ்ணர்) எங்களைப்போக விடவில்லை. எங்களைத் திருப்திசெய்ய அவரே தாம் பார்த்திருந்த ஒரு நாடகத்தை நடத்தி அப்பாட்டுக்களைப் பாடிக் காண்பித்தார். இதைப் பார்த்தவுடன் தெரு நாடகத்தைப் பார்க்க விரும்பியதை முற்றும் மறந்தோம்"

பதி சேவை.

1885-ம் ஹு பாணிஹூதி உற்சவத்துக்குப்போன பிற்பாடு ஸ்ரீராமகிருஷ்ணருக்குத் தொண்டை வியாதி ஏற்பட்டு அதற்குச் சிகிச்சை செய்துகொள்ள அவர் ஷியாம்புகூரில் மூன்று மாதம் தங்கியிருந்தபோது, ஸ்ரீசாரதா தேவியார் பட்ட கஷ்டத்தைச் சொல்லமுடியாது. மேன் மாடத்திற்குச் செல்லும் வாயில் ஒரு சிறிய அறையில் தங்கி குருதேவர்க்குரிய உணவு சமைத்தற்குரியதாயிற்று.

அவ்விடத்தே உணவு சமைத்தபின்னர், பெரியகோபாலர் அல்லது லாட்டு என்னும் பக்தர்கள் மூலமாக அதனை அறிவித்து, தாமே அவ்வுணவினைக் குருதேவருக்கு எடுத்துச் செல்வார். அல்லது இசைவு வாய்க்காதபோது இளைஞராய அடியார்கள் மூலமாக அனுப்புவார்.

ஸ்ரீராமகிருஷ்ணரைப் பார்க்க தினந்தோறும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் வந்தபடியே யிருப்பார்கள். அவர்களுக்கு தேவியார் சமைத்துப் போட்டது மன்றி தம் பர்த்தாவுக்கு வேண்டிய சிஸ்ருஷைகளையும் தவறாமல் கவனித்து வந்தனர். அவருடைய நோய் முற்றுவதாக சந்தேகம் தோன்றினவுடனே அம்மையார் அவரை விட்டகலாது இரவு பகலாய் விழித்திருந்து பணிவிடைகள் செய்துவந்தனர். எனினும் ஒருவராவது அம்மையாரைப் பார்த்ததே கிடையாது. திரை மறைவிலிருந்தே யாவற்றையும் குறைவற நடத்தி வந்தனர்.

அவ்விடத்தில் ஸ்நானம் செய்யும் அறை ஒன்றே யிருந்தபடியால், அம்மையார் இரவு மூன்று மணிக்கே படுக்கையை விட்டெழுந்து ஸ்நானம் செய்து மற்றவர்கள் எழு முன்னமேயே சமயலறையிற் பிரவேசித்துத் தன் வீட்டு வேலைகளைக் கவனித்துக் கொள்வார். அவர் படுக்கும்போது சுமார் இரவு 11-மணிக்கு மேலாய்விடும்.

ஒரு நாளிரவு அவர் கங்கைப்படித்துறையில் ஸ்நானம் செய்ய இறங்கியபோது ஒரு முதலைவாயில் அகப்பட இருந்தார். தெய்வானுகூலமாய், அவரது காலடிச்சத்தம் கேட்டு முதலை தண்ணீருக்குள் பாய்ந்து ஓடிவிட்டது. அதன் பிறகு அவர் விளக்கின்றி கங்கைக்குச் செல்வதில்லை. ஸ்ரீராமகிருஷ்ணர் ஷியாம்புகூரிலிருந்து காசிப்பூர்தோட்டத்துக்குச்சென்றபோது சௌகர்யங்கள் நன்ருயிருந்தன.

தாரகேஸ்வரரை வரம் கேட்டல்.

ஸ்ரீராமகிருஷ்ணரது வியாதி எவ்விதத்திலும் தீராமையைக் கண்ட ஸ்ரீசாரதா தேவியார், தேவோபாசனை செய்ய ஆலோசனை செய்து தாரகேஸ்வரத்துக்குப் போய்த் தமது கணவரது நோய் தீருமாறு சிவபிரானைப் பிரார்த்தித்தனர்.

கோயில் முன் சாஷ்டாங்கமாக விழுந்து ஈசன் அருள் புரியுமளவும் உண்ணு நோம்பு உறுதியோடு கொண்டனர். இரண்டாம் நாள் இரவில் மள—மள—வென்று ஒரு சத்தம் உண்டானதைக் கேட்டுத் திடுக்கிட்டனர்.

உடனே வைராக்கியம் மேலிட்டு "உலக வாழ்க்கையினைப் பற்றிய உறவு முறைகள் என்ன? இவைகளெல்லாம் வெறுங் கனவு அன்ருே" என்று எண்ணி அதன்பின் அவர் எழுந்து சிறிது தீர்த்தத்தை உட்கொண்டு தமது களைப்பை யாற்றிக் காசிப் பூருக்குத் (ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதி காலத்தில் வீற்றிருந்த இடம்) திரும்பிச்சென்றனர். குரு தேவர் அம்மையாரைக் கண்டதும், 'நல்லது உம்முடைய நோன்பு எவ்வாறு முடிந்தது?' என்று கேட்கத் தேவியார், நிகழ்ந்ததைச் சொல்ல, அவரும் முடிவு காலத்தை எதிர் பார்த்திருந்தவர்போல் தோன்றிஞர்.

ஸ்ரீசாரதா தேவியார் நித்திய சுமங்கலியாய் விளங்குதல்.

வங்காளி வருஷம் 1293 ஆவணி மாதம் 13-ந் தேதி (ஆகஸ்டு மாதம் 1886 வருஷம்)—இரவு 1--2-மணிக்கு ஸ்ரீராம கிருஷ்ணர் நிர்விகல்ப மஹாசமாதியில் ஆழ்ந்து மானிட உருவை நீத்து பரப்பிரமத்தில் ஒன்ருய்க் கலந்தார். அப்பொழுது ஸ்ரீசாரதா தேவியாருக்கு வயது 33. இவர் சமாதியடைந்ததும் ஸ்ரீதேவியார் விதவைக்குரிய வெள்ளாடை யணிந்து கொள்ள வில்லை. ஏனென்ருல் பரமஹம்சர் மகா சமாதி யடைந்தவுடன் தானணிந்திருந்த மங்கல நாணையும் ஆபரணங்களையும் கழற்ற நினைத்ததும், பரமஹம்சர் ஸ்ரீசாரதா தேவியாருக்குமுன் பிரத் யக்ஷமாய்த் தோன்றி, "அவ்வாறு செய்யற்க, நான் முன் இருந்த வாறே இருக்கிறேன். என்னிடம் ஒரு மாறுதலுமில்லை. எதற்காகத் துக்கிக்கின்ருய்? என் அமங்கலக்கோலம் கொள்கி ருய்?" என்று கூறினுர்.

ஸ்ரீசாரதா தேவியார் அவரது திருவுளக் குறிப்புக்கிசைய, வழக்கமாய் விதவைகள் கொள்ளும் வேஷத்தைக் கொள்ளாமல், ஆடை முதலியவைகளைக் களையாமல், தாம் இறந்து போகுமள வும் சுமங்கிலி உடையையே தரித்திருந்தனர். ஆத்மா நித்திய வஸ்து யென்னும் உணர்ச்சி நம் பெண்மணிகளுக்கு மனதில் தோன்றுமாயின் இந்திய நாடு, பொன்னுலகமாக விளங்கும். ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியடைந்த பின்னர், ஸ்ரீசாரதா தேவி யார் 34 வருஷம் வாழ்ந்திருந்தனர்.

ஸ்ரீராமகிருஷ்ணர் சமாதியான பிற்பாடு.

ஸ்ரீராமகிருஷ்ணர் மகா சமாதியடைந்த பிற்பாடு ஸ்ரீசாரதா தேவியார் தம் துயரத்தைத் தடுக்க முயன்று பிருந்தாவனத்துக் காவது, கல்கத்தாவுக்காவது, அல்லது தம் சொந்த ஊருக்கா வது சென்று அகோர சாதனை செய்ய ஆலோசிக்கலானுா.

ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு வாழ்க்கைத் துணையாய் அமைந்திருந்ததின் பலன், முன்னமே பகவத் சங்கல்பத்தால் நியமிக்கப்பட்ட ஒரு கருத்து நிறைவேறிற்று. முதலாவது கிரஹஸ்தர்களுக்குப் புனித வாழ்வின் லட்சியார்த்தத்தை அவரவர் தங்கள் தங்கள் சக்தியானுசாரம் அனுஷ்டிக்கும்படி, உதாரணங்களுடன் எடுத்துக்காட்டியதுமன்றி, தம்முடைய திவ்ய புருஷருக்கு உபசாரணைகள் செய்தனர். இரண்டாவது ஆயிரக்கணக்கான அநேக அடியார்களுக்கு, முக்கியமாய் ஸ்திரீகளுக்குத் தமது குருதேவரது பிரசாதத்தைத் தாமே அளிக்க அவர் பல்லாண்டுகள் உலகில் வாழ்ந்துவந்தது திருவருளின் திருவுள சம்மதமாக விளங்கியது.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் உடல் தாங்கி நின்றகாலத்தில் சிசுருஷை செய்து வந்தவாறே, அதற்குப் பின்னும அம்மையார் எல்லாக் காரியங்களையும் அவருடைய பிரீதியர்த்தமாகவே செய்து வந்தனர். அவரைப் பிரத்தியக்ஷ தெய்வமாக எண்ணித் தாம் உண்பதும், உடுப்பதும், உறங்குவதும், பிறரைச் சேவிப்பதும், ஈசுவரனை ஆராதிப்பதும், அவருக்காகவே என்று கருதிக் காலம் கழிக்கலாயினர்.

முன்போலவே தினமும் துயிலெழுந்து நீராடி, அத்யந்த பக்தி சிரத்தையுடன் அமுது செய்து அவருக்கு நைவேத்தியம் செய்வதையே தமது முதற்கடமையாகக்கொண்டு வந்தார். தமது பர்த்தாவை ஜகன்மாதாவின் திருவவதாரமாக உணர்ந்து, அவர் தேகவியோகமானபொழுதும "அம்மா! என்னை எங்கவிட்டு எங்கொளித்தாய்?" என்று பிரலாபித்தார். ஸ்ரீ ராமகிருஷ்ணரும் தேவியாரை லோகமாதாவின் அம்சமாகவே கருதியிருந்தார். இவ்விருவருக்கும் இசைந்த பொருத்தம் அற்புதமானது.

சகோதரி நிவேதிதா மொழிகள்.

ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தரின் ஆங்கிலேய சிஷ்யையான சகோதரி ஸ்ரீ நிவேதிதா என்பவர், ஸ்ரீசாரதா தேவியாரைக் கண்டு அதிசயித்து அடியில் வருமாறு கூறுகின்றார்.

"மழைக்கும், வெயிலுக்கும் அசையாத மலையைப்போல் அவர் (ஸ்ரீ சாரதா தேவியார்) துக்கத்திலும், சுகத்திலும் சலிக்காத மனமுடையவர். பதியே தெய்வம் என்றும், அவரிட்ட பணியைச் செய்வதே தம் வாழ்க்கைப் பயன் என்றும், கொண்டுள்ள தீவிரமான நம்பிக்கை உள்ளவர். பர்த்தாவைப்பற்றி பேசும்போது குருதேவ் என்றே கூறுவர். தேவியாரை முன் அறியாத ஒருவர் அவருடைய சம்பாஷணையினின்று ஸ்ரீராமகிருஷ்ண தேவருக்கும் அவருக்குமுள்ள சம்பந்தத்தை அறிய இயலாது. தான் அம்மகானுடைய மனைவி என்பதை ற்முறும் மறந்து தான் அவருடைய சிஷ்யை என்றும் ஊழியக்காரி என்றுமே கருதினர்".

பிர்மசாரணி சிஷ்யர்கள்.

ஸ்ரீசாரதா தேவியாரைக் காணும் பொருட்டு அநேக பக்தசிகாமணிகள் தமது பதவியையும், பொது வாழ்க்கையில் விதித்துள்ள வரம்பினையும் பொருட்படுத்தாது, வெகு தூரம் நடந்து செல்வார். ஞான வாழ்க்கை வாழ எண்ணி, பெண் பாலர் சிலர் பல இடங்களிலிருந்து வந்து அவருக்கு அத்யந்த சிஷ்யராய் அமர்ந்தார்கள். அவர்களில் அடியில் கூறிய பெண் மக்கள் தங்கள் ஆயுள் பரியந்தம் பிரமசாரணி விரதத்தைப்பூண்டு அம்மையாருடன் நெருங்கித் திருத்தொண்டு புரிந்து வந்தார்கள்.

(1) ஸ்ரீசுதிரா போஸ்—

இந்தச்சகோதரியானவள் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தைச் சேர்ந்த சந்நியாசியும், இமோத்கிரி பர்வதத்தில்ஸ்தாபித்திருக்கும் மாயாவதி ஆஸ்ரமத்துக்கு தலைவராயுமிருந்த ஸ்ரீபிரக்கியானந்த சுவாமிகளுடைய சகோதரி. தவிர, இம்மாது, தற்காலத்தில் ஜகத் பிரக்கியாதியடைந்து சாஸ்திர விற்பன்னராய் விளங்கும் சர். ஜகதீஸ் சந்திரபோஸ் குடும்பத்தைச்சேர்ந்தவர். ஒருமுறை

இவருடைய குடும்பத்தாரோடு வடஇந்தியா முழுதும் பிரயாணம் செய்யும்போது இச்சகோதரி கல்கத்தாவில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீசாரதா மாதர் மந்திரத்துப் பெண்களை பல இடங்களில் வித்தியா விஷயமாய் ஸ்தாபித்திருக்கும் பாடசாலைகளின் பயிற்சியை அறிவதற்கு அழைத்துக்கொண்டு போயினர்.

இம்மாது சிரோமணி ஸ்ரீ சுவாமி விவேகாநந்தருடைய ஆங்கிலேய சிஷ்யையான சகோதரிநிவிதேதாவாலும், அமெரிக்க சிஷ்யையான சகோதரி கிறிஸ்தின் முதலியவர்களுடைய ஆதீனதில் தேச ஊழியத்திற்காகப் பயிற்சி செய்யப்பட்டு அன்னை ஸ்ரீசாரதா தேவியாரால் தீக்ஷை பெற்றவள். மேலும் கல்கத்தாவில் ஸ்ரீ சாரதா மாதர் மந்திரத்தை ஸ்தாபிப்பதற்கு முக்கிய காரணமாயிருந்தார்.

(2) ஸ்ரீ சரலாதேவி—

இந்த மாது சிரோன்மணி அன்னை ஸ்ரீசாரதாதேவியாருக்கு அவரது கடைசி பரியந்தம் மெத்த சிஷ்ருஷை செய்து வந்தவரும், துலாப்மா, ஜோகின்மா முதலிய அடியார்களுக்குத் திருத்தொண்டு செய்தவருமாவர். இந்த புனிதவதியும் சகோதரி நிவிதேதா, சகோதரி கிறிஸ்தின் முதலியவர்களுடைய தேச ஊழியப் பயிற்சியில் இருந்தார், தற்காலம் காசிமா க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள ஸ்ரீராமகிருஷ்ண சேவாஸ்ரமத்தில் பெண்பாலருக்குத் திருத் தொண்டு புரிந்து வருகின்றனர்.

(3) ஸ்ரீ ப்ரோபுல்லா தேவி—

இந்தமாது சிரோன்மணியும் சகோதரி நிவிதேதா சகோதரி கிறிஸ்தின் முதலியவர்களுடைய தேச ஊழியத்தில் பயின்று அன்னை ஸ்ரீசாரதாதேவியாருடைய அநுக்கிரகம் பெற்றவர். தற்காலம் ஆசாம்தேசத்தில் கோமில்லா என்னும் பட்டணத்தில் ஒரு தேசிய பாடசாலையை நடத்திவருகின்றனர்.

(4) ஸ்ரீமீரா தேவி. (5) ஸ்ரீசபலா தேவி. (6) ஸ்ரீமாலதி தேவி. (7) ஸ்ரீபாணி. (வாணி-சரஸ்வதி)	இவர்கள் கிழக்கு வங்காளத்திலிருந்து வந்து அன்னை ஸ்ரீசாரதாதேவியாருடைய அநுக்கிரகம் பெற்று தற்காலம் கல்கத்தாவில் ஸ்தாபித்திருக்கும், ஸ்ரீசாரதா மாதர் மந்திரத்திற்தும், சகோதரிநிவிதேதா தேசியபாடசாலைக்கும், தேச ஊழியம் புரிந்து வருகின்றார்கள்.

(8) ஸ்ரீதசும் குமாரி.

இம்மாது சிரோன்மணிக்கு விவாகமான சில நாளைக் கெல்லாம் அவருடைய கணவன் சந்நியாசம் பூண்டு இமோத்கிரி ஆஸ்ரமத்தில் சேர்ந்தார். இவரும் அன்னை ஸ்ரீசாரதா தேவியாருடைய அநுக்கிரகம் பெற்று புனித வாழ்வு வாழ்ந்து கொண்டு வருகின்றனள்.

(9) ஸ்ரீ ஜுகுல் கிஷோரி தேவி.

இந்த மாது சிரோன்மணியானவர், குலின் பிராமண வழக்கப்படி மெத்த பால்ய வயதிலேயே விவாகம் செய்யப் பெற்றார். அவருடைய கணவன் சந்நியாசம் பூண்டு ஸ்ரீபரமேஸ்வரானந்தா என்ற நாமத்துடன் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தில் தொண்டு புரிந்து வருகின்றார். பிறகு ஸ்ரீசாரதாதேவியார் இக்கன்னிகையைத் தம்முடைய ஆதரவில்வைத்துக்கொண்டு ஞான வாழ்க்கையில் பயில்வித்தார். சென்னையில் ஸ்ரீசாரதாமாதர் மந்திரம் ஸ்தாபிக்கப்படும்போது அதற்காக இம்மாது அநேக உதவி புரிந்துவந்தார். இம்மடம் பெங்களூருக்கு மாற்றபட்டபோதும், இச்சகோதரி சுமார் 5வருஷகாலம் அங்கே தங்கிமடத்தை பாது காத்துவந்தனர். தற்காலம் அன்னை ஸ்ரீசாரதாதேவியார் பிறந்த இடமாகிய ஜெயராம்பட்டியில்ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்ரீசாரதா மாதர் மடத்தில் திருத்தொண்டு புரிந்து வருகின்றார்.

(10) ஸ்ரீ நுமா தேவி.

இந்த மாது சிரோன்மணி இமோத்கிரி, பிராந்தியத்தில் கைலாச பர்வதத்திற்கு அடுத்த குக்கிராமத்திலிருக்கிற பூடியா தேசத்து ஸ்திரீ. இவர் ஸ்ரீ சாரதா தேவியாருடைய ஞான நிலையைக் கேள்விப்பட்டு கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்து, அன்னையாருடைய அனுக்கிரகம் பெற்றவர். தற்காலத்தில் தன்னுடைய சொந்த தேசத்தில் ஒரு ஆஸ்ரமம் ஏற்படுத்திக்கொண்டு புனித வாழ்வு வாழ்ந்துக்கொண்டிருக்கின்றனர்.

(11 & 12) சகோதரி சுனந்தா தேவி—சகோதரி சுவிரதா தேவி.

(இவர்களுக்குப் பூர்வ ஆஸ்ரமத்துப் பெயர்கள் முறையே கனகவல்லித் தாயார், வேதவல்லி தாயார். தென் இந்தியாவிலிருந்து போய் அன்னை ஸ்ரீ சாரதாதேவியாரிடம் குருகுலவாஸம் செய்த பெண் பாலர்கள் இவ்விருவருமே. மடத்தார் இரண்டாவது சகோதரியை சீவா என்ற பழக்கமான பெயரால் அழைப்பதுண்டு.)

ஸ்ரீ சாரதா தேவியார் 1911 வருஷம் மார்ச்சு மாதம் இராமேஸ்வர யாத்திரை செய்து தமது நாட்டுக்குத் திரும்பும்போது பெங்களூரில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீ ராமகிருஷ்ண ஆஸ்ரமத்தில் சில நாள் தங்க நேரிட்டது. அக்காலத்தில் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரது திருத்தொண்டு செய்துகொண்டிருந்த மேற்கூறிய சகோதரிகளது தாய் தந்தையர் இருவரும் ஸ்ரீ சாரதாதேவியாரைத் தரிசித்துத் தங்களுடைய புதல்விகள் இருவரையும் பகவானது திருப்பணிக்காக ஏற்றுக்கொள்ளுமாறு அம்மையாரைப் பரிந்து வேண்டினர். அதற்கவர், அவரது பால்ய தசை கழிந்தவுடன் தம்மிருப்பிடத்திற்கு அழைத்துக்கொள்வதாக வாக்களித்துக் கல்கத்தாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

இது மத்தியில் அச்சகோதரிகளது தந்தையார் அவ்விருவருக்கும் சம்ஸ்கிருத, ஆங்கிலேய கல்வி முறைப்படிப் பயிற்றுவிக்கும் நாளில், அவர்களது தாயார் ஸ்ரீ கற்பகவல்லித் தாயார் என்பவள் புண்ணிய க்ஷேத்திரத் தீர்த்த யாத்திரை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டு சில தொண்டர்களுடன் பெங்களூரிலிருந்து புறப்பட்டு அநேக திவ்ய க்ஷேத்திரங்களைத் தரிசித்து முடிவில், காசீமா க்ஷேத்திரத்தையடைந்து ஸ்ரீராம கிருஷ்ண சேவாஸ்ரமத்தில் தங்கினள். தங்கிய சில நாளைக்கெல்லாம் அகஸ்மாத்தாய் அவள் ஸ்ரீகுருமஹாராஜுக்கு ஆராத்திரிகம் செய்யும் வேளையில் ஸ்ரீவிஸ்வேஸ்வரருடைய திருப்பாதத்தை அடைந்தனள்.

அக்காலத்தில் பகவான் ஸ்ரீராமகிருஷ்ண திவ்ய சங்கத்தைச் சேர்ந்த சந்நியாசிகள் அனைவரும் பெங்களூருக்கு வரும்போதெல்லாம் அவர்களுடைய தந்தையிடம் வந்து சத்காலக்ஷேபம் செய்துக்கொண்டு வருவது வழக்கம். தவிர ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தருடைய மேனாட்டு சிஷ்யைகளான மிஸ் மெக்லௌட் (Miss McLeod) சகோதரி அவபாமிய (Sister Avabamia), சகோதரி தேவமாதா (Sister Devamatha) முதலியவர்கள் அச்சகோதரிகளுக்கு பரதகண்டத்தை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு வேண்டிய ஸ்ரீசுவாமிகளின் கருத்துக்களைத் தெரிவித்து வந்தார்கள். இதனால் இச்சிறுமிகளுக்குக் கல்கத்தாவிலிருந்த ஸ்ரீசாரதா தேவியாரைத் தரிசிக்கவேண்டுமென்கிற எண்ணம் முதிர்ந்தது. அதற்குத்தகுந்தபடி அவர்களது தந்தையும் தமது சிறுமிகளிருவருக்கும் தேசியமுறையில் கல்வி அளிக்க வேண்டுமென்று எண்ணிக் கல்கத்தாவில் ஸ்ரீராம கிருஷ்ண சங்கத்துக்காரியதரிசியாகிய ஸ்ரீசுவாமி சாரதானந்தருக்கும், சகோதரி நிவேதிதாவுக்கும், தம்முடைய கருத்தைத் தெரிவித்து, அவ்விருவருக்கும் மடத்தில் தங்கும்படி, வேண்டிய ஏற்பாடுகள் செய்தனர்.

இவ்விருவரும் கல்கத்தாவுக்குச் சென்று தூய அம்மையாரிடம் 4-வருஷகாலம் குருகுல வாசம்செய்து அம்மையாருடைய அனுக்கிரஹத்தைப் பெற்றூர்கள். அம்மையாருக்கும் இச் சகோதரிகளுக்கும் நடைபெற்ற அநேக சம்பாஷணைகளைப்பற்றி மாயேர்கதா வென்னும் வங்காளி கிரந்தத்தில் காணலாம். அம்மையாரும் இவர்களை ஞான வாழ்க்கைத் துறைகளில் பயிற்றுவித்த பின் ரௌத்திரி—வருஷம் குருதேவருடைய திருப்பாதத்தை அடைந்தனர். இவ்விருவரும் அம்மையார் சமாதியான பிரபாடு ஒரு வருஷகாலம் அத்திருமடத்திலேயே தங்கி பின்னர், சென்னை பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்கள். அத்தருணத்தில் ஸ்ரீராமகிருஷ்ண திருச்சங்கத்துக்கு முதன்முதல் தலைமை வகித்திருந்த ஸ்ரீமத் சுவாமி பிர்மானந்தரும் (Srimat Swami Brahmananda) சென்னைக்கு விஜயம் செய்திருந்தார்.

ஸ்ரீசாரதா மாதர் மந்திர ஸ்தாபனம்.

இந்தியாவின் பூர்ண லக்ஷியார் தங்களான துறவும் தொண்டுமே அடிப்படையாக அமைத்து உழைத்தாலன்றி, நம தாய் திருநாடு உயர்வடையாதென்று ஸ்ரீமத் சுவாமி விவேகானந்தர், ஆண் மக்களுக்கு ஏற்பாடு செய்தவாறே பெண் மக்களுக்கும் ஒரு மடாலயம் ஏற்பாடு செய்யவேண்டும் என்ற கருத்தை நிறைவேற, அத்தலைவரும் தற்காலத்தில் அத்திருசங்கத்துக்கு தலைமை வகித்திருக்கும், ஸ்ரீசுவாமி சிவானந்தரும், (Srimat Swami Shivananda), சென்னையில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீராம கிருஷ்ண மடத்துக்கு அக்காலத்தில் தலைவராயிருந்தவரும் இப்பொழுது டெல்லி மாநகரில் ஸ்தாபித்திருக்கும் ஸ்ரீராம கிருஷ்ணமடத்துக்குத் தலைவராயிருக்கும் ஸ்ரீசுவாமிசர்வானந்தரும், (Srimat Swami Sharvananda), இன்னும் ஸ்ரீராமகிருஷ்ண திருச்சங்கத்தைச சேர்ந்த அநேக சாதுக்களும், அத்திருசங்கத்தைச்சேர்ந்த சாத்விகளாயிருக்கும், சகோதரி ஸ்ரீசுனந்தாதேவி (Sister Sunanda Devi), சகோதரி ஸ்ரீசுவிரதாதேவி (Sister

Suvrata Devi), சகோதரி ஸ்ரீகிஷோரி ஜுகெல்தேவி (Sister Kishori Jugal Devi), சகோதரி ஸ்ரீ யோகீஸ்வரி* (Sister Yogeeswari) சகோதரி ஸ்ரீ யோகமாயா (Sister Yogamaya) சகோதரி ஸ்ரீ புவனேஸ்வரி* (Sister Bhuvaneswari), சகோதரி ஸ்ரீ விஸ்வேஸ்வரி (Sister Visweswari), முதலிய சாத்விகளும் ஒருங்குசேர்ந்து கலியுகாதி 5023 துன்மதி-ஹூ ஐப்பிசி-மூ 28-தேதி திரயோதசி (Nov. 13, 1921)யன்று ஸ்ரீ சாரதா மாதர் மந்திரம் (பெண் மக்களுக்காக மடம்) ஒன்றை ஸ்தாபித்தார்கள்.

இந்த மாதர் மந்திர மடத்தையும், சென்னையில் ஸ்ரீமத் சுவாமி இராமகிருஷ்ணனந்தரால் ஸ்தாபித்த, ஸ்ரீ இராமகிருஷ்ண தேசிய பெண் பாடசாலையையும், இச்சாத்விகள், 4-வருஷகாலம் சென்னையிலேயே நடத்தி வந்தார்கள். பிறகு அம்மடத்தை ஸ்திரமாய்ப் பெங்களூருக்கு மாற்றப்பட்டது.

ஆயுள் பரியந்தம் பிரம்மசர்ய விரதத்தைப்பூண்டு, புனித வாழ்வு வாழ்ந்து, தேச ஊழியம் செய்வதற்காக பல சாத்விகளும் பிரம்மசாரணிகளும், ஒருங்குசேர்ந்து இம்மடத்தை நடத்துகிறார்கள். இந்திய பெண்மக்களுக்கு கூடியவரையில் தேசீய வழிகளில் தேசீய முறைகளில், கல்வியளித்து, பூர்வகாலத்து ஸ்திரீகள் அடைந்த ஆத்மார்த்த ஞானமும், தற்காலத்து மேனாட்டாரின் பௌதிக சாஸ்திர படிப்பினையுமளிக்க இம்மடத்துக்கு சம்மந்தமாய் ஸ்ரீராமகிருஷ்ண விவேகானந்த வித்யாலயா என்னும் ஒரு தேசிய பெண்பாடசாலையையும் நடத்திக்கொண்டு வருகின்றனர். பெண் மக்களுக்காக பல இடங்களிலும் இனி ஏற்படவேண்டிய பெண் மடங்களைப்பற்றி ஸ்ரீசுவாமிகள் கூறியிருப்பதை குருசிஷ்ய சம்வாதத்தில் கண்டறியலாம்.

---

* இவ்விருவரும் தற்காலத்தில் கிழக்கு வங்காளத்தில், அமெரிக்கா கண்டத்து வேதாந்த சபையின் கிளையாக டாக்கா நகரில் ஸ்தாபித்திருக்கும் ஆனந்தாஸ்ரமத்தில் திருப்பணி செய்து வருகின்றனர்.

முடிவுரை.

ஸ்ரீசாரதாதேவியார் ஸ்திரீ தர்மத்தின் அவதாரமேயென்று துணிவாய்ச் சொல்லலாம். பழைய பரம்பரையில் கடைசியாகத் தோன்றியவரோ, அல்லது புதுகிளர்ச்சியாய்த் தோன்றியிருக்கும் பரம்பரையின் தொடக்கமாயிருக்குமோ என்று சொல்ல இயலாது. அவர் புத்திவன்மைக்கும், அன்பின் மாட்சிமைக்கும் தெய்வத்தன்மைக்கும் தேவியார் ஓர் அத்தாட்சியாய் விளங்கினர். அவா பிறரிடம் காட்டும் விசுவாசமும், மரியாதையும் வியக்கத்தக்கன. பிறரை ஒரு சொல்லாலுங் குறிப்பாலும் நல்வழிச்செலுத்தும் திறன் வாய்ந்தவர். எந்த விஷயத்தைக் குறித்துக்கேட்டாலும் ஐயந்திரி பற விளக்கும் திறனுடையவர். அவர் சிறுகுழந்தையைப் போன்றவர். அவா முன்னிலையில் அமைதியும் அன்புமே நிறைந்திருக்கும்.

அவர் சந்நிதானத்தில் ஒருவர் தரிசித்த மாத்திரத்தில் உடலின் பாதிகளும், மனவேதனைகளும் தாமாக வொருங்கே ஒழிந்து உள்ளம அளவற்ற தெளிவையும தேறுதலையும் அடையும். அலைகின்ற ஆன்மாக்களின் அமளியும், ஆரவாரமும் அவரது சாந்த சமுத்திரத்தில் அற ஒய்ந்திருக்கும். அவர் வழக்கமாய் ஸ்ரீமத்ராமாயணத்தை பாராயணம் செய்வார். ஸ்ரீராமகிருஷ்ண தேவரருளால் ஆத்மானுபவத்திலும் முதிர்ந்திருந்தமைப்பற்றி அவரது ஒவ்வொரு செய்கையும் பரமஹம்ஸரது உபதேசங்களின் உட்கருத்தை விளக்குவதாயிருந்தது

ஸ்திரீ தர்மத்துக்கொப்ப, பர்த்தா தேகவியோகமான பிற்பாடு ஸ்ரீமத் யோகாநந்த ஸ்வாமிகளையே தன் தந்தையென பாவித்து அவர் ஸம்ரக்ஷணையிலும், அவரும் காலமான பிற்பாடு ஸ்ரீமத் சாரதானந்த ஸ்வாமிகளின் ஸம்ரக்ஷணையிலும் இருந்தார். இத்தகையர் உலகிற் தோன்றுவது உலக மக்களுக்கு வழிகாட்டவும் அவர்களுக்கு நம்பிக்கையும ஊக்கமும் ஊட்டுவதற்கேயாம்.

ஸ்ரீசாரதா தேவியார் உலகுக்கெல்லாம் ஒரு தாய். ஸ்ரீராமகிருஷ்ணரும் தேவியாரை ஜகன் மாதாவின் அவதாரமாகக்கண்டார். தேவியாரின் திருவவதாரத்தின் கருத்து முடிவுபெற்று, அவர் ரௌத்திரி—வருஷம் ஆனி—மீ, 4—தேதி, 67—வதுவயதில் குருதேவருடைய திருப்பாதத்தைச சேர்ந்தனா.

ஹரி ஓம் தத் சத்.

அநுபந்தம்.

இந்திய மாதர் முன்னேற்றம்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் புருஷர்களடையக்கூடிய உயர் நிலையாதென்பதைத் தமது திவ்ய வாழ்க்கையினால் நிதரிசனமாக காட்டியதைப்போலவே, அன்னை ஸ்ரீசாரதா தேவியார் ஸ்திரீகள் அடையக்கூடிய உயர்நிலை யாதென்பதைக் காட்டினார். உலகமுழுதும் திக்விஜயம் செய்து, கடவுள் நெறிபற்றி உய்யும் மார்க்கத்தையும், வேதாந்தத்தின் பெருமையையும் ஸ்ரீசுவாமி விவேகானந்தர் எடுத்து உரைத்திருப்பதுபோல், அவர் தேச பக்தியிலும் தலை சிறந்து விளங்கி, தமது தாய் திருநாட்டின் தற்கால நிலையை எண்ணி, எண்ணி கண்ணீர் சொரிந்து, அதன் முன்னேற்றத்துக்கான வழிகளை சிறப்பாகச் சொல்லியருளி யிருக்கிறார்.

பெண் மக்கள் கொள்ளவேண்டிய இலக்ஷியங்களை அன்னை யாரிடம் பிரத்தியக்ஷமாகக் கண்ட ஸ்ரீசுவாமிகள், ஒவ்வொருவருடைய சொந்த முக்திக்கும், உலகத்தின் நன்மைக்கும், ஆண் மக்களுக்கு ஏற்பாடு அமைத்தவாறே, பெண்மக்களுக்கும் அவர் ஏற்பாடு செய்தருளினார். தீர்க்கதரிசனம் வாய்ந்த அவர் பெண் மக்கள் விஷயமாய் அடியில் கூறியிருக்கும் கருத்துகளை சிர மேற்கொண்டு நடந்தால், மீண்டும் பாரதநாடு புத்திளமைபெற்று, முன்னெப்போதையும் விட மகோன்னத நிலையை அடையுமென்பதில் சந்தேகமில்லை. நாம் அனைவரும் நமது வாழ்க்கையில் ஸ்ரீசுவாமிகளுடைய உபதேசங்களை இயன்றவரை அனுஷ்டானத்தில் கொணர முயல்வோமானால், வருங்காலத்தில் அதி ஆச்சரியமான மகிமை வாய்ந்த இந்தியா தோன்றி, இதற்கு முன் எப்போதுமிருந்ததைவிட வீரமும், தியாகமும் நிறைந்த புனிதவதிகள் உண்டாய் அவர்கள் உலகத்துக்கே இலக்கியங்களாய் விளங்குவார்கள், என்பதை உறுதியாகக் கூறலாம்.

பூர்வகாலத்துப் பெண் மக்களின் நிலைமை.

பூர்வீக வேதரிஷிகள் காலத்திலும், இந்து மதத்திலும் இந்து ஜன சமூகநிலையிலும், பெண்மக்களையும், ஆண்மக்களையும் சரிசமான நிலையில் வைத்திருந்தனர். பண்டை நாளில் ஆரண்யங்களில் நடைபெற்ற நமது சர்வ கலாசாலைகளில்—குருகுலங்களில், சிறுவர்களைப்போல், சிறுமிகளுக்கும் கல்விகேள்விகளில் சிறப்பெய்தி, பூர்ண சமத்வம் அளிக்கப்பட்டிருந்தனர். ஆஸ்திக புத்தியும், தெய்வபக்தியும், வைதிகப்பற்றும்கொண்டு ஒவ்வொரு இந்துப்பெண்ணும், நம் நாட்டின் காப்பாளர்களான மகரிஷிகளின் புதல்விகளென வாழ்ந்து வந்தார்கள்.

மனுவானவர் பெண் மக்களைப்பற்றி, "பெண் மக்கள் எங்கு கண்ணியமாகப் பூஜிக்கப்படுகின்றனரோ, அங்கு தேவர்கள் எல்லாம் மகிழ்ச்சியடைகிறார்கள். ஆண் மக்களைப்போல், பெண் மக்களையும் காப்பாற்றி அவர்களுக்கு நல்ல கல்வியை கற்பித்து, அவர்கள் பிரமசரிய விரதத்தை அனுஷ்டித்து வரச்செய்ய வேண்டும்," என்று கூறியிருக்கிறார். இல்லற தர்மந்தான் பெண்களுக்கு ஏற்பட்டதொன்றுமில்லை. விவாகமின்றிப் புனித வாழ் வெய்திவரும் பிரமசாரணிகளும், இந்து சமயத்தில் உண்டு என அத்தாட்சிகள் பல உள.

பரிபூரண சித்தியடைந்த வேதரிஷிகளில் மிகச்சிறந்தவர்களாகிய மைத்திரேயி, கார்க்கி, போன்ற புண்ணியவதிகள், ஞான மார்க்கத்திலும், பயிற்சி பெற்றிருந்தனர். இது நிற்க ஆண்மக்கள், எவ்வெத்துறைகளில், சிறந்து விளங்கிவந்தனரோ, அவ்வத் துறைகளிலெல்லாம், பெண் மக்களும், மிகச்சிறப்புடன் விளங்கியிருந்தனர். இவ்விரண்டு திறத்தாருக்கும் சம உரிமை அளித்து, வித்தியாசம் பாராட்டவில்லை. அதனால் அவர்கள் பாரதத்தாயின் சிறந்த புதல்விகளாகத் தோன்றி, தேசீய இலட்சியத்தை பாது காத்து வந்தார்கள்.

தற்காலத்து இந்திய மாதர்களின் நிலைமை.

நமது தாய் நாடு இவ்வளவு க்ஷீணதசையை யடைந்ததற்குக் காரணம் ஆதிசக்தி உருவமாயிருக்குங் குலதீபங்களான நமது பெண்மக்களை நாம் கௌரவப்படுத்தாமல் இழிவாக நடத்துவது தான். ஜெகதீஸ்வரியினுடைய பிரதிபிம்பமாய் விளங்கும், நம் பெண்மக்களை வெறும்பாரம் சுமக்கும் மிருக யந்திரமாகப்பாவிக் கிறோம். பலநாளாக நமது பெண்மக்களைத் துணையற்ற நிலைமை யிலும், பிறர் உதவிக்கு எதிர்பார்த்து வாழும் தன்மையிலும் தாழ்த்தி பயிற்றுவித்திருக்கிறோம். இதனால் ஏதாவது கிஞ் சித்து ஆபத்து அல்லது அபாயம் நேரிடும் காலத்தில், அவர்கள் கண்ணீர் விட்டு கலங்குந் திறனுடையவராய், அதிலிருந்து தப்ப மனோ தைரியமில்லாதவர்களாய் இருக்கிறார்கள்.

தவிர நாடெங்கும், நம் பெண்மக்களுக்கு நவீன நாகரீக முறைகளில் அளிக்கும்கல்வி பெரிதும் குறைப்பாடுடையது. அது இந்திய பெண் மக்களின் சுபாவிகமான அபிருசியையும், பரம்பரையாய் வந்த கற்பு, தயை, அன்பு முதலிய சம்ஸ்காரங் களையும் கருதி அமைந்ததன்று. இக்கல்வி இல்லறதர்ம வாழ்க் கையிலேனும், சமூக வாழ்க்கையிலேனும், தெய்வீகக் கிளர்ச்சி செய்யக்கூடிய சக்தியை அவர்களுக்குக் கொடுப்பதில்லை. தற் காலத்தில் போதிக்கும் கல்வியானது தேசாபிமானத்தையும், மதாபிமானத்தையும், குன்றச்செய்து வருகிறது.

அமெரிக்காவில் ஆண் மக்கள் தங்கள் பெண் மக்களை மிக வும் நன்றாக நடத்துகிறார்கள். இந்து பெண்களில் பெரும் பான்மையோரால் நினைக்கவு முடியாத அளவு, ஒவ்வோர் அமெ ரிக்காப் பெண்மணியும் கல்வி பயின்றிருக்கிறாள். எனவே அவர்கள் செல்வத்திலும், கல்வியிலும், சிறந்து ஊக்கமுடைய சுதந்தர வாழ்வு வாழ்கிறார்கள். ஆனால் நாம் துன்பத்தில் ஆழ் ந்து நடைப்பிணங்கள்போல், அடிமை வாழ்வு வாழ்வதேன்? இதற்கு விடைசொல்ல வேண்டுவதில்லை.

முன்னேற்றத்திற்கு வழிகள்.

1. கற்பொழுக்கம்.

பெண்களைப்பொறுத்த வரையில் மிக முக்கியமான பிரச்னைகள் பல உண்டு என்பதில் சந்தேகமில்லை. ஆனால் கல்வி—யென்னும் மந்திரத்தினால் தீர்த்து வைக்கமுடியாதது அவற்றில் எதுவுமில்லை. பெண்கள் கல்வி விஷயத்தில், பெண்களை உயர்ந்த கருத்துக்களை அடையக்கூடிய நிலைமைக்குக் கொண்டு வந்துவிட்டால், தங்களுக்கு வேண்டிய சீர்திருத்தங்களைத் தாங்களே செய்துக் கொள்வார்கள்.

பெண் கல்வி முறையில் சில திருத்தங்களை ஆரம்பிப்பதாயின், நம் தேசத்துப் பெண் மக்களுக்குப் பிறப்புரிமையாகவுள்ளதும், அவர்களால் எளிதில் உணர்ந்து கொள்ளப்படுவதுமாகிய கற்பொழுக்கத்தை முதலிலே ஸ்திரப்படுத்தி எல்லாவற்றினும் கற்பே சிறந்த வலியுடையது என அவர்களுக்கு எடுத்துக்காட்டி அதை அவர்கள் பெற்றுப் பாதுகாப்பதற்கேற்ற துணைப்புரிய வேண்டும். கற்பு என்பது இந்து மாதரின் பரம்பரைச் செல்வம்.

அநாதிகாலமாகத் தங்களுடைய இரத்தத்தில் ஊறிப்போயிருக்கும் பதிவிரதா தர்ம பலத்தினால் ஊக்கமடைந்து தாங்கள் இல்வாழ்க்கையிலிருப்பினும், அல்லது வாழ்நாளெல்லாம் கன்னிகைகளாகவே இருந்துவிடினும் ஜீவியத்தின் ஒவ்வொரு நிலையிலும் நிறைந்த தைரியம் படைத்தவர்களாய் அவர்கள் கற்பு நிலையினின்றும் ஓரளவேனும் வழுவுவதினும் உயிரையே விட்டுவிடவும் அஞ்சாத மனத்திண்மை பெறுவார்கள். தங்கள் மனதில் கொண்ட உன்னத நோக்கத்துக்காக உயிரைத்தானும் கொடுப்பதற்கு அவர்கள் சித்தமாயிருப்பது குறைந்த தைரியமா! இந்தியாவின் பெண்கள் சீதையின், அடிச்சுவடுகளைப் பின்பற்றியே முன்னேறவேண்டும். வேறு வழி இடையாது.

2. கல்வி முறை.

ஞானக்கண் தோன்றுவதற்கு கல்வியோர் சிறந்த வழி யாகு மாதலாலும், வறுமையில் தாழ்ந்து கிடக்கும் நம்மவரை உயர் நிலைக்கொண்டு வரக்கூடியது கல்வியாதலாலும், கலா சாலைகள் பல தோன்றுவது நாட்டிற்கு நன்மை பயப்பனவாகும். அவர்களுக்கு பண்டைக் காலத்தில் இருந்த குரு குலங்களைப் போன்ற, கல்விச்சாலைகள் தேவை. அவற்றில் அவர்களுக்கு தங்களுக்கும் பிறருக்கும், பயன்படக் கூடியமேனாட்டுப் பௌதீக சாஸ்திரத்திலும், அறநெறியிலும், பாரமார்த்திக வாழ்க்கையி லும், பயிற்சி அளித்தல்வேண்டும்.

சீதை, சாவித்திரி, தமயந்தி, லீலாவதி, காரை, மீராபாய், முதலிய உலோகோத்தரமானவர்களின் சரித்திரம், புராணங் கள் எப்போதும் 'அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கச் செய்தல் அவசியம். தவிர, உயர்கலைகள், சமையல், தையல், வீட்டுவேலை, சுகாதாரம், குடும்ப நிர்வாக முறைகள், முதலி யவைகளை எல்லாம் நவீன பௌதீக சாஸ்திரத்தின் துணைக் கொண்டு கற்பித்து உரிய காலத்தில் அவர்களை அன்னைமார் களுக்கு இலக்கியங்களாய் விளங்கும் வண்ணம் பயிற்சி செய் வித்தல் வேண்டும்.

உண்மையான கல்வி கற்பித்தல் எண்ணிறைந்த விஷயங் களை ஒருவர் மனத்தினுள் புகுத்துவதன்று. ஒருவருடைய புத் தியை விசாலிக்கச்செய்து அவருக்குக் குணத்தையும், சீலத் தையும், அளித்து, அவரது ஆன்மசக்தியை விகசிக்கச் செய்வ தேயாம். கல்வி—யென்னும் பதத்திற்கு தோண்டுதல் யெனப் படும். அதாவது அகத்தேயுள்ள அறிவு வெளிப்பட்டு விளங் குதல். நம்மிடத்துள்ள தீயவை சிதைந்துதேயும் வண்ணமும், மாயும் வரையும் அகத்தேயுள்ள நல்லவைகளைப் பேணி வளர்த் தல். சகலஞானமும், மனிதனுக்குள் இருக்கிறதென்று வேதாந் தம் சொல்லுகிறது. அதை எழுப்புதலே தேவை. அதுவே

ஆசிரியன் வேலை. சிறுவர்கள் தங்கள் சொந்த அறிவை உபயோகப்படுத்தவும், தங்கள் கால், கை, கண், செவி, இவற்றை முறையாகப் பயன்படுத்தி தெரிந்துக்கொள்ளுமளவில் ஆசிரியன் உதவிசெய்தால்போதும். மற்ற எல்லாம் தாமே எளிதாகிவிடும்.

சிறியதொரு ஆலம் விதையினுள்ளே பெரியதொரு ஆலமரம் அடங்கியிருப்பதுபோல், மனிதனது மனமானது அணுவுக்கணுவாயிருந்தும், அளவினாலும், ஆற்றலினாலும், வேகத்தினாலும்,பிறவலிமைகளினாலும், ஒப்பற்றதாக, விளங்குகின்றது. ஜென்மமெடுத்ததின் பயனை அறிந்து, அப்பயனை அடைவதற்குத் தக்க முயற்சிசெய்து, "நாம் அதையே நமது இலக்காகக் கொண்டு உயிர்வாழும்படி,"நம்மை ஊக்கிவிடும்பயிற்சி எதுவோ, அதையே உண்மைக் கல்வி" எனலாம்.

பிரமசரியம், சிரத்தை, தன்னம்பிக்கை முதலிய சமய அடிப்படைகளின்மீது கல்வி அளிக்கவேண்டும். மனிதருக்குள் அமைந்திருக்கும் தெய்வத்தன்மையை வெளிப்படுத்துவதே கல்வியாகும். இத்தெய்வத்தன்மை வெளிப்படுத்துவதற்கு உதவி இல்லாதவை எல்லாமவர்கட்கு உதவி அற்றவை என்றே கொள்ளல்வேண்டும். தெய்வத்தன்மை என்பது யாது? அருள் அன்பு, அடக்கம், அகமுகநாட்டம், ஊக்கம், உணர்ச்சி, ஆகிய சாத்வீககுணங்கள் நிறைந்த தன்மையாகும்.

நமது தேசத்தின் பழக்க வழக்கங்களைக் கூடியவரையில் தேசீய வழிகளில், தேசீய முறைகளிலேயே கல்வி, அளித்தல் வேண்டும். நமது பழைய நாகரீகத்தைக் குறித்து வெட்கப்பட வேண்டாம். தற்போது முழுத்தீமைகளாகக் காணப்படும் வழக்கங்களைக்கூட முற்காலத்தில் ஜீவசக்தியளிப்பனவாயிருக்கின்றன. நாம் கனவிலும், நனவிலும், கருத்திலும், பேச்சிலும் செய்கையிலும், இதை எப்பொழுதும, நிறைவேற்றிப் பார்க்கவேண்டும். அதுவரையில் நமக்கு விமோசனமே இல்லை. பெண் பள்ளிக்கூடங்களில் கல்வி கற்பிக்கும் கடமை படிப்புள்ள கைம்பெண்களுக்கும், பிரம சாரணிகளுக்குமே எவ்வாற்றானும் உரியதாகும். இந்த நாட்டில் பெண் பள்ளிக்கூடங்களில் ஆண் மக்களின் தொடர்பை விலக்குதல் நலம்.

3. வீரத்தாய்கள் தேவை.

பல நூற்றுண்டுகளாகப் பலவகைச் சந்தர்ப்பங்களினுல் நமது பெண்களுக்குப் பாதுகாப்பு அவசியமாயிருந்து வந்திருக்கிறது. நமது பழக்க வழக்கங்களுக்கு உண்மைக் காரணம் இதுவேயன்றி, ஸ்திரீகள் தாழ்ந்தவர்கள் என்னும் கொள்கையன்று. இக்காலத்தில் தம்மைத்தாமே இரக்ஷித்துக்கொள்ளும் தற்காப்பு (Self-defence) க்குரிய கல்வி முறைகளைத் தெரிந்துக் கொள்ளுதல் அவசியமாய் விட்டது. பெருமை பொருந்திய ஜான்சி (Jhansi) தேசத்து இராணியினுடைய பராக்கிரமச் செய்கை எவ்வளவு சிறப்புடையது! இக்கால மாதரிடம் அன்னையின் அன்பும், வீரப்பெண்டிரின் உறுதியும் கலந்திருக்கவேண்டும். தற்காலத்தில் பெண்மணிகள், இந்தியதாயின் வீரப்புதல்விகளாகத் தேசச்சேவையில் ஈடுபட்டிருப்பது நமது நாட்டின் முற்போக்கைக்காட்டும் அறிகுறியாகும்.

கல்வி விஷயங்களுடன் தன்னலம் பாராட்டாதவரும், அஞ்சாத்திடமும், வீரமும், வலிமையும் கூடப்பெற்ற சங்கமித்தா, லீலா, அஹலியாபாய், மீராபாய், முதலிய அஞ்சாநெஞ்சமுடைய வீரத்தாய்கள் தற்காலத்து இந்தியாவுக்குத் தேவை. திடமான பிள்ளைகளைப் பெறுவதற்குப் பால்ய விவாகத்தைத் தடுக்கவேண்டும். பால்ய விவாகத்தினுல் பருவத்திற்கு முந்தி பிரஸவம் ஆகும் நிலைமையினுல் அநேக பெண் மக்கள் இறக்க நேரிடுகிறது. அவர்களுடைய சந்ததிகளும் பிராணியற்றவர்களாக இருப்பதால் நம் தேசத்தில் ஏழைகள் பெருகி வருகிருர்கள். தாய் தந்தையருடைய தேகக்கூறு சுகமாயும் திடமாயுமில்லாவிட்டால், திடமும், சுகமும், வாய்ந்த குழந்தைகள் எவ்வாறு பிறப்பார்கள்? நம்நாட்டில் அநேக இளம் விதவைகளின் துன்பகாட்சிக்குக் காரணம் இப்பால்ய விவாகமே, பால்ய விவாகத்தை தடுப்பதினுல் விதவைகளும் குறையும். பால்ய விவாகத்தை தடுப்பதுடன் கல்வி யளிக்கவேண்டும். இல்லாவிட்டால் அக்கிரமமும், கற்பழிவும் ஏற்படும்.

4. நித்திய பிரம்மசாரணிகள் அவசியகம்.

தற்காலத்தின் நிலைமையை நோக்குமிடத்து நம்முடைய பாரதத்தாயின் முன்னேற்றத்துக்காக பெண் மக்களில் சிலரை துறவு நெறியில் பற்று உண்டாக்குமாறு பயிற்சி செய்தல் அவசியமென காண்கிறது. அவர்களது மோக்ஷத்திற்கும், உலகினர் க்ஷேமத்திற்கும் துறவே முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டி, அவர்கள் வாழ்நாள் முழுதும் கன்னிகைகளாக இருந்து தொண்டுசெய்வதாக விரதம் கொள்ளவேண்டும்.

துறவு இன்றி எவரும் பிறருடைய தொண்டில் தன் இதய முழுவதையும் ஈடுபடுத்தமுடியாது. தங்களுடையதெனக் கூடிய எல்லாவற்றையும், உலகுக்காக தியாகம் செய்ய சித்தமாயிருப்பவர்கள்; உள்ளும் புறமும் உண்மை வடிவானவர்கள்; இத்தகைய புனிதவதிகள் தோன்றும்போது நமதுதாய் திருநாடு ஒவ்வொரு துறையிலும் பெருமை பெறும்.

ஆன்மத் தூய்மையின்று எழும் தீவிர உற்சாகங்கொண்டவர்கள், இறைவனிடம் அழியா நம்பிக்கைக் கொண்டவர்கள், பகவானது திருவடி ஸ்பரிசம் பெற்றவர்கள், ஏழைகளிடமும், தாழ்ந்தவர்களிடமும், கொண்ட அநுதாபத்தினுல் சிங்கத்தையொத்த தைரியமடைந்தவர்கள், இப்படிப்பட்ட ஸ்திரீ, புருஷர்கள், நூறாயிரம் பேர் வேண்டும்.

இவர்கள், மோக்ஷம், பரோபகாரம், தாழ்ந்தோரின் முன்னேற்றம், சமூக சமத்வம், என்னும் சுவிசேஷங்களைப் பிரசாரம் செய்துக்கொண்டு இந்நாட்டின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைவரைக்கும், ஆட்சிசெலுத்துவாராகில் அப்பொழுது நமது பாரதத்தாய் அதிக மகிமையுடன்தன் நித்திய சிம்மாசனத்தில் வீற்று மகிழ்ச்சி அடைவாள். அளவற்ற வலிவுடைய அத்தேவி விழித்தெழுந்துவிட்டாளென்பதை உறுதியாகநம்புங்கள். இந்தியா கண் விழித்து எழுந்திருக்க வேண்டுமென்று ஆண்டவன் கட்டளைபிறந்து விட்டது.

குரு சிஷ்ய வாதம்.

ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரால் மொழி பெயர்க்கப்பட்டது.

(இடம்—பேலூர் திருமடம்—காலம் 1901 ஆண்டு).

பெண் மக்களுக்கு மடம்.

இப்பொழுது பத்து மணி ஆய்விட்டது; ஸ்ரீ சுவாமி விவேகானந்தர் சந்தோஷத்தோடு பெண்களுக்காக அமைக்கப் போகின்ற திருமடத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். கங்கையின் கிழக்குக் கரையிலே மடம் ஸ்தாபிக்கப்படவேண்டு மென்றும் பரிசுத்த மாதாவாகிய ஸ்ரீ சாரதா தேவியார் அந்தத் திருமடத்துக்கு தலைமை வகிப்பாரென்றும், இந்தத் திருமடத்திலே ஆண்மக்களைப் பிரமசாரிகளாகவும், சாதுக்களாகவும் பயில் விப்பது போலவே, அந்தத் திருமடத்திலும், பெண்மக்களைப் பிரமசாரணிகளாகவும், சாத்துவிகளாகவும், பயில்விப்பார்கள் என்றும் சுவாமிஜி சொன்னார்.

சிஷ்யர்—சுவாமிகளே! நமது பாதகண்டத்திலே பழைய காலத்திலே பெண்களுக்கு மடாலயங்கள் ஏற்பட்டிருந்ததாகச் சரித்திரத்தில் சொல்லப்படவில்லையே? பௌத்தர் காலத்தில் தான் பெண்களுக்கென மடங்கள் ஏற்பட்டிருந்ததாக அறிகிறோம். ஆனால், காலகதியிலே அவற்றிலிருந்து அநேகதீமைகள் விளைந்தன. தேசம் முற்றிலும் துர்ப்பழக்கங்கள் பல பரவின.

சுவாமிஜி—வேதாந்த மார்க்கமானது, ஒரே ஆத்மன் எல்லா ஜீவர்களிடத்தும் வியாபித்திருக்கிறது—என்று முறையிடுகிறது. அப்படி இருந்தும், இந்த நாட்டிலே ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடு பாராட்டுவது எதனாலோ வென்று அறிய மெத்த கடினமாயிருக்கிறது. நீங்கள் பெண்கள் பால் எப்பொழுதும் குற்றம் கண்டு பிடிக்கிறீர்கள். ஆனால்,

அவர்களுடைய உயர்ச்சிக்காக என்ன செய்கிறீர்கள்? கடினமான விதிகளினால் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஸ்மிருதி முத லியவற்றை எழுதி ஆடவர் பெண்களை வெறும் இயந்திரங்களாக ஆக்கிவிட்டார்கள்! உலக மாதாவின் தோற்றமாக விளங்குகிற பெண்களை உயர்வடையச் செய்தாலன்றி நீங்கள் உயர்வடைவ தற்கு வேறு வழி இருக்கிறதென்று எண்ணவேண்டாம்.

சிஷ்யர்—பெண்கள் பந்தத்திற்கு ஏதுவாயிருக்கிறார்கள். மனிதரைச் சிக்கச்செய்யும் வலையாயிருக்கிறார்கள். தங்க ளுடைய மாயையால் ஆடவர்களுடைய ஞான வைராக்கியத்தை மறைத்து விடுகிறார்கள். இதனாலன்றோ ஞானத்தையும் பக்தி யையும் அடைவது அவர்களுக்கு மிகவும் அரியது என்று சாஸ் திரத்தை எழுதிய பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சுவாமிஜி—பெண்கள் ஞானத்தையும்பக்தியையும் அடைவ வற்குத் தகுதியற்றவர்கள் என்று எந்த சாஸ்திரத்திலே கண் டாய்? புரோகிதர்கள் வேதங்களை அத்தியாயனம் பண்ணுவதற்கு ஏனையஜாதி மக்கள் தகுதியற்றவர்களென்று ஒதுக்கித் தள்ளிய இந்த இழிவான காலத்தில் பெண்களுடைய உரிமையையும் நீக்கிவிட்டார்கள். ஆனால் வேத உபநிஷத் காலங்களிலே மைத் ரேயி, கார்க்கி, முதலிய மகத்துவமிக்க பெண்மணிகள் பிரமத் தைப்பற்றி வாதிக்கின்ற சாமர்த்தியத்திலே மகரிஷிகளுக்கு ஒப் பானவர்களாயிருந்தார்கள். வேதத்திலே வல்லவர்களாகிய ஆயி ரம் பிராமணர்கள் கூடியிருந்த மஹாசபையிலே கார்க்கி, பிரம வாதஞ்செய்யும்படி யாக்ஞவல்கியரை துணிவோடு அறை கூவி அழைத்தாள். அத்தகைய பெருந்தகைமை வாய்ந்த பெண் மணிகள் ஆத்ம ஞானத்திற்கு உரிமை பூண்டு விளங்கினார்கள். ஆதலினால் இக்காலத்தும் அந்த உரிமை ஏன் பெண்களுக்கு இருக்கக்கூடாது? ஒரு முறை நிகழ்ந்தது நிச்சியமாகவே மறுபடியும் நிகழும். சரித்திரநிகழ்ச்சி மீட்டும் நடக்கும் தகைமை யது. பெண்களுக்குத் தக்க மரியாதை கொடுக்கின்ற காரணத்தி

ஞல் எல்லாத்தேசத்து மக்களும் உயர் நிலை அடைந்தார்கள். பெண்களுக்கு மதிப்புக் கொடாத தேசமும், மக்களும் ஒரு பொழுதும் உயர்வை அடைந்ததில்லை. இனிமேல் அடையப் போவதுமில்லை. சக்தியின் உயிருள்ள வடிவங்களாகிய பெண்களுக்கு மதிப்புக் கொடுக்காத முக்கியமான காரணத்தினுலே உங்களது ஜாதியார் மிகவும் இழிவடைந்தார்கள். "எவ்விடத்தில் பெண்கள் மதிக்கப்படவில்லையோ, அவ்விடத்தில் எல்லா கருமங்களும் முயற்சிகளும் வீண் போகின்றன," என்று மனு சொல்லுகிருர். எந்தக் குடும்பத்தில் அல்லது நாட்டில் பெண்களுக்கு மதிப்பில்லையோ, எங்கே அவர்கள் மனத்துயரத்தோடு வாழ்கிருர்களோ, அங்கு மக்கள் உயர்வு அடைவதற்கு வழியில்லையாகும். ஆதலினுலே முன்னும் அவர்களை உயர்த்தவேண்டும். அவர்களுக்கென உயர்ந்த சாதனங்களோடு கூடிய திருமடத்தை ஏற்படுத்த வேண்டும்.

சீஷ்யர்—தேவரீர் மேலை நாட்டிலிருந்து திரும்பி வந்த நாட்களில் நட்சத்திர மண்டபத்தில் செய்த பிரசங்கத்திலே தந்திரங்களை மிகவும் குற்றமாகப் பேசினீர்கள். இப்பொழுது தந்திரங்களில் சொல்லியிருக்கிற முறைப்படி பெண்களுக்கு வழிபாடு செய்வதை ஆதரித்துப் பேசுகிறீர்கள்; அதனுல் முன்னுக்குப் பின் முறண்படுகிறது.

சுவாமிஜி—தந்திரங்களிலுள்ள இழிந்த வாமாசார முறைகளை இழித்துப் பேசினேன். ஆனுல் தந்திரங்கள் கூறுகின்ற உலக மாதாவினுடைய வழிப்பாட்டு முறைகளையாவது உண்மையான வாமாசார முறைகளையாவது நான் குற்றமாகக் கூறவில்லை. தெய்வீக முறையாக பெண்களுக்கு வழிபாடு இயற்ற வேண்டுமென்பதே தந்திரங்களின் கருத்து. புத்த சமயம் பாழடைந்த காலத்து வாமாசாரம் மிகவும் இழிந்து போயிற்று; அத்தகைய இழிவே இன்னும் நிலைபெற்றிருக்கிறது. இப்பொழுதும் இந்தியாவிலுள்ள தந்திர சாஸ்திரங்கள் அத்தகைய எண்

ணங்களை உடையவைகளாக இருக்கின்றன. இழிவான அச்சத்தக்க சாதனங்களை நான் வெறுத்துக் கூறினேன். இப்பொழுதும் அப்படியே. உலக மாதாவின் உயிர் தாங்கிய வடிவங்களான பெண்களை வழிபடுவதை நான் ஒருபொழுதும் தடுத்துக் கூறவில்லை. அவர்களுடைய வெளித்தோற்றமானது ஆடவர்களுடைய புலன்களைக் கவர்ந்து அவர்களை வெறிபிடித்தவர்களாக்கி விடுகின்றது. அகத்தோற்றங்களாகிய ஞானம், பக்தி, விவேகம், வைராக்கியம், என்னுமிவை மானிடனை முற்றறிவுடையவனுக்கித் தப்பின்றி வேண்டிய இஷ்ட சித்திகளையும், தந்து பிரமத்தையும் அறியப்பண்ணுகின்றன.

"சைஷா பிரஸன்ஞ வரதா ந்ருணாம் பவதி முக்தையே"

(அவள் உவந்து செய்யும் அநுக்கிரஹமே, மானிடன் மோக்ஷத்தை யடைவதற்குக் காரணமாகின்றது). வழிபாட்டினுலும், பணிவினுலும், உலக மாதாவினுடைய அநுகிரஹத்தைப் பெற்ருலன்றி அவளுடைய கட்டைக்கடந்து மோக்ஷத்தையடைவது பிரம விஷ்ணுக்களுக்கும், இயலாததாகும். தம்முள்ளேயிருக்கின்ற பிரமத்தைப் பிரத்தியட்சமாக்கும் நிமித்தம், இந்தக் கிரக தேவதைகள் வழிபடும் பொருட்டுப் பெண்களுக்கென ஒரு மடாலயத்தை நான் ஸ்தாபிக்கிறேன்.

சிஷ்யர்—ஆனல் இந்நாட்டில் இக்காலத்தில் கல்வி தேர்ச்சியடைந்தவர்களும் புனிதவதிகளுமாகிய கார்க்கி, கானு, லீலாவதி போன்ற, மாது சிரோன்மணிகளை எவ்வாறு பெறுவீர்கள்?

சுவாமிஜி—இந்நாட்டில் அப்பேர்ப்பட்ட மாது சிரோன்மணிகள் இல்லையென்று நீ நினைக்கிருயா? இக்காலத்திலும் கூட இப்புண்ணிய பூமியில், சீதா, சாவித்திரி முதலியவர்கள் வாழ்ந்த இந்த க்ஷேத்திரத்தில், அப்படிப்பட்ட நன்னடத்தை, தொண்டு விருப்பம், அன்பு, தயாளம், திருப்தி, பதிபக்தி, ஆகிய குணங்கள் நிரம்பப்பெற்ற பெண்களைக் காண்பது போல் உலகில் வேறெந்த நாட்டிலும், காண்பதரிது.

மேனாட்டில் உள்ள ஸ்திரீகள், ஸ்திரீகளென்றே எனக்குத் தோன்றவில்லை. அவர்கள் புருஷர்களைப் போலவே, வாழ்வது எனக்குத் தோன்றிற்று! ஏனெனில் வண்டிகளை ஓட்டுவதிலும், உத்தியோக சாலையில் உழைப்பதும், பாடசாலையில் கல்வி பயிற்றுவதும், மற்ற தொழில் முறைகளில் பயில்வதும், அவர்கள் தொழில்களாக இருக்கின்றன.

இந்தத் தேசத்தில் தான், ஸ்திரீகளுடைய அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு, முதலிய உத்தம குணங்களே நேத்திரானந்தத்தையளிக்கின்றன. அப்படிப்பட்ட உத்தம குணங்கள் நிரம்பப் பெற்றவர்களை முன்னேற்றத்துக்கு நீங்கள் கொண்டுவராமல் இருப்பது என்ன பரிதாபம்! அவர்களுக்குக் கல்வியின் அறிவு ஒளியை புகட்டாமல் விட்டீர்கள்! அவர்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்பித்திருந்தால் அவர்கள் உலகத்திலுள்ள ஸ்திரீகளுக்கெல்லாம் நாயகம் போல் விளங்குவார்கள்.

சிஷ்யர்—இது நல்லெண்ணந்தான். ஆனால் அந்த மடத்தில் இருக்கத்தக்க பெண்கள் எங்கிருந்து வரப்போகின்றார்கள்? குடும்ப வாழ்க்கையிலே இப்பொழுது கடினமான கட்டுப்பாடுகளிருக்கின்றன. யார் தமது வீட்டுப்பெண்களை மடத்திலே சேரும்படி அனுப்பப் போகின்றனர்?

சுவாமிஜி—ஏன் அப்படி? இப்பொழுதுதானும், ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய சிஷ்யர்கள் பலர் இருக்கின்றனர். ஸ்ரீராம கிருஷ்ணருடைய பக்தர்களது புத்திரிகளும், மனைவிகளும், முதலிலே சேருவார்கள். பரிசுத்த அன்னையார் அதற்கு நடு நாயகமாக எழுந்தருளியிருப்பார். அத்தகைய திருமடத்தின் பயனைப் பக்தர்கள் எளிதாக அறிந்து கொள்வார்கள். அவர்களுடைய முன்மாதிரியைப் பின்பற்றி எத்தனையோ இல்லறத்தார் இந்த நன் முயற்சிக்கு உதவிபுரிவார்.

சிஷ்யர்—ஸ்ரீ ராம கிருஷ்ணருடைய பக்தர்கள் நிச்சயமாக உதவி புரிவார்கள். ஆனால் பொது ஜனங்கள் இந்த முயற்சிக்கு உதவுவார்களென்று நான் எண்ணவில்லை.

சுவாமிஜி—இவ்வுலகத்திலே, தன்னலமறுப்பின்றி எந்த பெரிய காரியமும் நிறைவேற்றப்படவில்லை. ஆலம் விதையினுடைய சிறிய முளையைக் கண்டோம். அது காலகதியிலே பெரிய மரமாக வளர்ந்து விடுமென்பதை அறிவார்களா? இப்பொழுது இவ்வழியாக மடத்தை ஆரம்பிப்பேன். பிறகு இரண்டொரு சந்ததி கழிந்த பிறகு இந்த நாட்டு மக்கள் மடத்தினுடைய பயனை உள்ளவாறு உணர்வார்கள். எனது சிஷ்யைகள் அதற்காகத் தங்களது உயிரையும் கொடுக்கச் சித்தமாயிருப்பார்கள். அச்சத்தையும், கோழைத்தனத்தையும, விட்டெறிந்து விட்டு இந்த உயர்ந்த கொள்கையை எல்லாருடைய முன்னிலையிலும், வைத்து நீங்கள் அனைவரும் இந்த நன் முயற்சிக்கு உதவி புரிவீர்களாக! காலகதியிலே நாடு முற்றிலும், அது ஞான ஒளியைத்தந்து விளங்குவதை நீங்கள் காண்பீர்கள்.

சிஷ்யர்—சுவாமிகளே! பெண்களுக்கு ஏற்படுத்தப்போகிற இந்தத் திருமடத்தின் அமைப்பைப்பற்றிய எல்லா விஷயங்களையும், தேவரீர் எனக்குச் சொல்லி அருள்வீர்களாக.

சுவாமிஜி—கங்கையின் மற்ற கரையிலே ஒரு பெரிய நிலம் வாங்கவேண்டும். அங்கு கட்டப்படுகிற திருமடத்திலே விவாகமாகாத இளங்குமரிகளும் பிரமசாரணிகளாகிய விதவைகளும், வசிக்கலாம். இல்வாழ்க்கையிலுள்ள பெண்களிலும் பக்தி நிறைந்த பெண்கள் ஒரோர் காலத்தில் இங்கு வந்து வசிக்க அநுமதி அளிக்கப்படலாம். ஆடவர்களுக்கும், இந்த மடத்திற்கும், ஒரு சம்பந்தமும் இருக்கப்படாது. ஆடவர் திருமடத்திலுள்ள சாதுக்களில் முதியோர் தூரத்திலிருந்து இந்த மடத்துக்காரியங்களை நடத்துவார். பெண்களுக்குரிய இந்த மடத்தினோடு

ஒரு பெண் பாடசாலை அமைக்கப்பட்டிருக்கும். அங்கே, சாஸ்திரங்களும், இலக்கண இலக்கியங்களும், சம்ஸ்கிருதமும், சிறிது ஆங்கில மொழியும் படிப்பிக்க வேண்டும். தையல், சமயல் வீட்டுப் பணிக்கு வேண்டிய முறைகள், குழந்தைகளைப் பரிபாலிக்கும்முறை, இவை முதலிய விஷயங்களும், கற்பிக்கப்படும். ஜபம், ஆராதனை, தியானம், முதலியவை இங்கும் பயிற்றப்படுகிற கல்வியில் அவசியமான அம்சமாக இருக்கவேண்டும். இல்வாழ்க்கையையும் குடும்ப பந்தங்களை விட்டு விட்டு இங்கே நிலையாக இருப்பவர்களுக்கு இந்த மடத்திலிருந்து உணவும் உடையும் கொடுக்கப்படும். அங்ஙனம் செய்ய முடியாதவர்கள் தினந்தோறும் வந்து போகிற மாணவிகளாக இங்கே கல்விகற்க அநுமதி பெறுவார்கள். அவர்கள் தானும் ஒரோர் காலங்களிலே மடத்துக்குத் தலைமை வகிக்குமவர்களது உத்திரவு பெற்று மடத்திலே வசிக்கலாம். அங்ஙனம வசிக்கும்போது அவர்களும் மடத்தாரால் போஷிக்கப்படுவார்கள். வயது முதிர்ந்த பிரமசாரணிகள் மாணவிகளைப் பிரமசரியத்திலே பயிற்றுகின்ற கடமையை ஏற்றுக்கொள்ளுவார்கள். இந்த மடத்திலே ஐந்தாறு வருஷம் பயிற்சி அடைந்த பின்பு சிறுமிகளுடைய பாதுகாப்பாளர் அவர்களுக்கு விவாகம் செய்து முடிக்கலாம். யோகத்திற்கும், சமய சாதனைக்கும் அவர்கள் தகுதியுள்ளவர்களாகக் காணப்பட்டால், அவர்களுடைய பாதுகாப்பாளருடைய உத்திரவோடு அவர்களுக்கு உரிய முறையிலே தீக்ஷைசெய்து மடத்தில் வசிக்கும்படி செய்யலாம். இத்தகைய பிரமசாரணிகள் காலக்கிரமத்திலே இத்திருமடத்தின் போதகாசிரியர்களாகவும், பிரசங்கிகளாகவும், வருவார்கள். கிராமங்களிலும், நகரங்களிலும், நிலயங்களை ஸ்தாபித்துப் பெண் கல்வியைப் பரப்புவதற்கு முயலுவார்கள். அத்தகைய நல்லொழுக்கம்வாய்ந்த பிரசாரகர்களாலே உண்மைப்பெண் கல்வி தேசமெங்கும் பரவும். மாணவிகள் இந்தத் திருமடத்தோடு சேர்ந்திருக்கும் காலத்தில் திருமடத்து ஆதாரக் கோள்கையாகிய பிரமசரியத்தைத் தவராது

அநுஷ்டிக்க வேண்டும். தெய்விகவாழ்க்கையும் தியாகமும, ஐம்புலன் அடக்கமும், இந்தத் திருமடத்திலுள்ள மாணவிகள் கைக்கொண்டு ஒழுக வேண்டிய கொள்கைகளாகும். சேவை அவர்களுடைய சீவியத்தின் விரதமாகும். அத்தகைய உயர்ந்த கொள்கையோடு அவர்கள் வாழும்பொழுது யாவர்தான் அவர்களிடத்து மதிப்பும், நம்பிக்கையும் இல்லாதிருக்கப் போகின்றார்கள்? இந்த நாட்டுப் பெண் மக்களுடைய சீவியம் அந்த மாதிரியாக அமையப்பெற்றால்தான் சீதா, சாவித்திரி, கார்க்கிபோன்ற, பெருந்தகமையுடையோர் மறுபடியும் இங்கு அவதரிப்பார்கள். தேசாசாரங்களும் அவற்றால் ஏற்பட்ட கட்டுப்பாடுகளும் இந்த நாட்டுப் பெண் மக்களை எவ்வளவு உயிரற்றனவும் வலியிழந்தனவுமான பிராணிகளாக மாற்றிவிட்டன, என்பதை மேற்கு நாடுகளில் யாத்திரை செய்தாயானால் நீ உணர்ந்து கொள்ளுவாய். பெண்களினுடைய பரிதவிக்கத்தக்க நிலைக்கு நீங்களே உத்திரவாதிகள். அவர்களை மறுபடியும் உயர்த்துகின்ற பொறுப்பு உங்களுடையதே. ஆதலினால் முயன்று வேலை செய்யுங்கள் என்று நான் சொல்லுகிறேன். வேதத்தைப்போன்ற, சிலசமயசாஸ்திர நூல்களை மனப்பாடம் பண்ணுவதனால் வருகின்ற பயனென்ன?

சிஷ்யர்—இந்தத் திருமடத்திலே பயின்ற சிறுமிகள் பின்பு விவாகம் செய்து கொள்ளலாமென்றால், அவர்களுக்குள்ளே உயர்ந்த கொள்கைகளோடு வாழ்பவர்களைக் கண்டுபிடித்தல் எங்ஙனம் கூடும்? இந்தத் திருமடத்திலே கல்வி பயின்றவர்கள் விவாகம் செய்யாமலே இருந்துவிட வேண்டுமென்னும் ஒரு விதியை ஏற்படுத்தினால், அது நன்றாகாதா?

சுவாமிஜி—எடுத்தவுடனே அவ்வாறு செய்ய இயலுமா? அவர்களுக்குக் கல்வி அறிவுறுத்திப் பின்பு அவர்கள் இச்சைப்படி விட்டுவிட வேண்டும். அவர்கள் எந்த வழி நல்லதென்று காண்கிறார்களோ, அந்த வழியிலே நிற்கட்டும். விவாகம் செய்து உலக வாழ்க்கையிலே புகுந்த பின்பு தங்களுடைய

நாயகர்களுக்கு உயர்ந்த கொள்கைகளை உண்டாக்குவார்கள். வீரப்புதல்வர்களுக்குத் தாய்மார்களாவார்கள். சிறுமியருக்குப் பதினைந்து வயது நிரம்புவதற்கு முன் மாணவிகளுடைய பாது காப்பாளர்கள் அவர்களை விவாகம் செய்து கொடுப்பதைப்பற்றி நினைத்தல் கூடாதென ஒரு விதி ஏற்படுத்தவேண்டும்.

சிஷ்யர்—சுவாமிகளே! அப்படியாயின் இந்தச் சிறுமியர்களுக்கு ஜனசமூகத்திலே மதிப்பு இருக்கமாட்டாது. அவர்களை மணம் செய்துகொள்ள யாரும் விரும்பமாட்டார்கள்.

சுவாமிஜி—என்? அவர்களை விவாகம் செய்துக்கொள்ள விரும்பாதிருக்கப் போகின்றார்கள்? ஜன சமூகத்தினுடைய மனப்போக்கை நீ இன்னும் முற்றாக உணர்ந்து கொள்ளவில்லை. கல்விப் பயிற்சியில் தேர்ந்த பெண்களுக்கு மணமகன் இல்லை என்ற குறைவு ஒருபொழுதும் ஏற்படமாட்டாது. பால்ய விவாகத்தைப்பற்றி புகழ்கின்ற வாக்கியங்களை ஜனசமூகம் இப்பொழுதும் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. இனிமேலும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. இப்பொழுதாகிலும் உனக்குத் தெரியவில்லையா?

சிஷ்யர்—ஆனால் ஆரம்பத்திலே உக்கிரமான விவாதம் நிச்சயமாக உண்டாகும்.

சுவாமிஜி—ஆகட்டும்; அதில் அஞ்சவேண்டுவது என்னஇருக்கிறது? உண்மையாற்றலோடு ஆரம்பிக்கப்பட்ட நன்முயற்சிக்குத்தடை ஏற்படுமாயின் அது ஆரம்பித்தவர்களுடைய மனவலியை இன்னும் அதிகப்படுத்தும். தடையில்லாது ஏற்படுகிற மார்க்கம் மக்களை உயிரற்ற வழிகளிலே செலுத்திவிடும். முயன்று கருமம்புரிவதே, உயிர்வாழ்க்கைக்கு அறிகுறி.

சிஷ்யர்—ஆம்.

சுவாமிஜி—பரம்பிரமத்தின் மேலாகிய உண்மையிலே ஆண் பெண் என்ற வித்தியாசமில்லை. விவகாரநிலையிலேதான் இந்த வித்தியாசங்களை காணுகிறோம். மனம் எவ்வளவுக்கு எவ்வளவு உண்ணோக்குகிறதோ, அவ்வளவுக்கு அவ்வளவு பேதபுத்தியானது மறைந்துவிடும். முடிவில் எவ்விடத்தும் ஒரே இயல்பாயும் வேறுபாடற்றும் விளங்குகின்ற பிரமத்திலே மனமானது முற்றிலும் லயித்துப்போமாயின், இவன் ஆண் இவள் பெண் என்னும் வேறுபாடான எண்ணங்களே இருக்கமாட்டா. ஸ்ரீராமகிருஷ்ணருடைய சீவியத்திலே நாங்கள் இதை நேரிலே கண்டோம். ஆகையால் ஆண் பெண்களுக்கிடையே வெளித்தோற்றத்தில் வேறுபாடிருந்தாலும் உண்மையிலே ஒருவகை வேறுபாடுமில்லை. ஆதலினால் ஓர் ஆண்மகன் பிரமஞானியாயிருந்தால் ஒருபெண்ணும் ஏன் அத்தகைய ஞானத்தை அடையக்கூடாது? ஆதலினாலே பெண்களுக்குள்ளே ஒருவராவது பிரமஞானத்தை அடைவார்களானால் அங்ஙனம் அடைந்தவர்களுடைய விளக்கத்தினாலே ஆயிரம் பெண்கள் உண்மையை நாடுவதில் ஊக்கமுடையவராவார்கள். அதனால் நாட்டுக்கும் ஜனசமூகத்திற்கும் பெரிய நன்மை உண்டாகும். அது உனக்குப் புலப்படுகிறதா?

சீஷ்யர்—சுவாமிகளே! தேவரீருடைய போதனை இன்று என் கண்ணை திறந்துவிட்டது.

சுவாமிஜி—இன்னும் முற்றும் திறக்கப்படவில்லை. சர்வத்தையும் பிரகாசிக்கச்செய்யும் ஆத்மாவின் உண்மையை நீ உணர்வாயாயின், ஆண் பெண் என்னும் வேறுபாடான எண்ணம் உள்ளத்தினின்று அகன்று போகப்பெற்றுப் பெண்மக்களை பிரமத்தின் தோற்றமாக நீ காண்பாய். எந்தஜாதியில் பிறந்தாராயினும்சரி, எந்த மதிப்பினை உடையவராயினும் சரி, பெண்மக்கள் ஒவ்வொருவரையும், உலகமாதாவின் அம்சமாக ஸ்ரீராமகிருஷ்ணர் கொண்டதை நாங்கள் கண்டிருக்கின்றோம். இதனை நான்

கண்டிருந்ததினால்தான் அவ்வண்ணம் நீங்களும் செய்யவேண்டுமென்று நான் உங்களைக் கேட்டுகொள்ளுகிறேன். பெண்கள் உயர்த்தப்பட்டால் அவர்களுடைய மக்கள் உயர்ந்த செயல்களைச்செய்து தேசத்தினுடைய பெயரை மகிமைப் படுத்துவார்கள். அப்பொழுதுதான் நல்லொழுக்கமும், ஞானமும், சக்தியும், பக்தியும் நாட்டிலே உண்டாகும்.

சிஷ்யர்—ஆனால் இக்காலத்தில் பெண் கல்வியினாலே நேர் விரோதமான பயன் உண்டாகக் காண்கின்றோமே. அற்ப கல்வியைக்கற்றுவிட்டு மேலைத்தேசத்து வாழ்க்கை முறைகளைப் பின்பற்றுகிறார்கள். தியாகபுத்தி, ஐம்புலனடக்கம், தவம், பிரமசரியம், முதலாகிய பிரமஞானத்திற்கு ஏதுவாகிய நற்குணங்களில் அவர்கள் சிறிதளவாகிலும் முன்னேறுகிறார்களென்று தெளிவாகவில்லை.

சுவாமி ஜீ—ஆரம்பத்திலே, சில பிழைகள் தவிர்க்கமுடியாது நேரும். தேசத்திலே ஒரு புது எண்ணத்தைப் போதிக்கும் பொழுது பலர் அதன் உண்மையை கிரகித்துக்கொள்ள முடியாமல் பிழைபட நடப்பதுண்டு. ஜனசமுகங்களின் நன்மையைக் கடைப்பிடிப்பதே, செய்யவேண்டிய கருமமாகும். இப்பொழுது தேசத்திலே உள்ள சிறிதளவு பெண் கல்வியை வளர்ப்பதற்கு முன் வந்தவர்கள் சந்தேகமில்லாமல் அகன்ற சிந்தை உடையவர்களென்றே சொல்ல வேண்டும். சமயானுஷ்டானத்தை ஆதாரமாகக் கொள்ளாத கல்வி முறையிலே குறைவுகள் நேரிடுமென்பது உண்மையே. ஆதலால் சமயத்தையே நடுவாகிய இலக்காகக் கொண்டு பெண் கல்வியைப் பரப்பவேண்டும். மற்ற பயிற்சிகளை யெல்லாம் சமயப் பயிற்சிக்குப் சார்பாகவே அடையவேண்டும். சமயப்பயிற்சி, நல்லொழுக்கப் பயிற்சி, பிரமசரியவிரதம் காத்தல், என்னுமிவற்றைச் செவ்வனே கவனிக்கவேண்டும். இதுவரையும் இந்தியாவிலே நடந்து வருகிற பெண் கல்வி முறைகள் சமய நெறியை இரண்டாவது

விசாரமாக்கிக் கொண்டிருக்கின்றனை; ஆதலினுலே நீ சொன்ன குறைகள் ஏற்பட்டுவிட்டன. ஆனுல் பெண்கள் மேல் குறை கூறக்கூடாது. பெண் கல்வியை ஆரம்பித்த சீர் திருத்தக் காரர்கள் பிரமசரியமில்லாதவர்கள். ஆதலினுல் தவருனமுறையைக் கையாண்டு விட்டார்கள். எந்த நற்கருமத்தையும் செய்பவர்கள் தாங்கள் விரும்பிய கருமத்தைத் தொடங்கு முன் அடக்கத்தோடு கூடியசாதனைகளினுலே, ஆத்ம ஞானத்தை அடைய வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் செய்யும் தொழிலிலே பிழைகள் ஏற்பட்டு விடும்.

சிஷ்யர்—ஆம். கல்விகற்ற பெண்களில் எத்தனையோ பேர் நவீன வேடிக்கையான கதைப் புத்தகங்களைப் வாசித்து வீண் காலங்கழிக்கிருர்கள். கிழக்கு வங்காளத்திலோவென்ருல், கல்விகற்ற பெண்கள் தங்களது சுய மதாநுஷ்டானத்தைக் கைவிடுவதில்லை. இந்தப் பக்கங்களில் அப்படி உண்டா?

சுவாமிஜி—ஒவ்வோரு நாட்டிலும் மக்களிடையே நன்மையான பக்கமுமுண்டு. தீமையான பக்கமுமுண்டு. நம்முடைய ஜீவியத்திலே நன் முயற்சிகளைச் செய்து பிறருக்கு நன் முன் மாதிரியாக இருக்கவேண்டும். குறை கூறுவதினுல் ஒரு நன் முயற்சியும் அநுகூலப்படுவதில்லை. அது மனிதர் மனத்தில் வெறுப்பை உண்டாக்கும். எவனும் தான் விரும்பினதைச் சொல்லட்டும், நீ அவருக்கு மாறுத்தரம் கூறிக்கொண்டு நில் லாதே. மாயரூபமாகிய இந்த உலகத்திலே நீ எந்த முயற்சியை எடுத்தாலும் அதில் சில குறைகள் இருப்பது இயல்பு:— "சர்வா ரம்பாஹி தோஷேணு தூமே நாக்னிரிவா வ்ரதா" நெருப்பை புகை மூடியிருப்பதுபோல் எல்லா முயற்சிகளையும் குறைகள் மூடியிருக்கின்றன. எந்த நெருப்பிலும் புகை சிறிது சேர்ந் திருக்கும். ஆனுல் அதற்காக நீ சும்மா விருப்பதா? உன்னுல் இயன்றவரை நன்முயற்சிகளைச் செய்.

சிஷ்யர்—நன் முயற்சி என்றால் என்ன?

சுவாமிஜி—எது பிரமத்தினுடைய விளக்கத்திற்கு உதவு கின்றதோ, அது நன் முயற்சி. நேராகவில்லாவிட்டால் ஒரு சாராகவாவது ஆத்ம விளக்கத்திற்கு உதவும்படி எந்த முயற் சியையும் செய்யலாம். ஆனால் ருஷிகளினால் ஏற்படுத்தப்பட்ட வழியைப் பின்பற்றி நடந்தால் ஆத்ம விளக்கம் விரைவில் வந்தெய்தும். ஆனால் சாஸ்திரங்களில் பிழையென எழுதிக் காட்டிய கருமங்களைச் செய்வதினால் பந்தமேற்படும். அத்தகைய மயக்கத்திற்கு ஏதுவாகிய பந்தம் பல ஜீவியங்களிலும் அகலுவதில்லை. எக்காலத்திலும் எத்தேசத்திலும் முடிவிலே ஜீவர்கள் பந்த நிவிர்த்தி அடைவார்கள். ஏனெனில் ஆத்ம விளக்கமே ஜீவனுடைய உண்மையாகிய தன்மை. தன்னுடைய சொந்த தன்மையை விடுவது யாருக்காவது இயல முடியுமா? நீ ஆயிரவருடகாலம் உன்னுடைய நிழலோடு சண்டையிட்டாலும் அது உன்னைவிட்டு ஓடிப்போகாது. உன்னுடன் கூடவேயிருக்கும்.

சிஷ்யர்—ஆனால் சுவாமிகளே! சங்கரர் கூறுகிறபடி கருமமானது ஞானத்திற்கு எதிரிடையாயிற்றே. கருமத்தையும் ஞானத்தையும் ஒன்று கூட்டுவதை அவர் பலவாறாக கண்டிக்கிறாரே. அப்படியானால் கருமம் ஞானத்திற்கு எப்படி உதவியாகும்?

சுவாமிஜி—சங்கரர் அப்படிச் சொல்லிய பின்னர் கருமமானது சித்தசுத்திக்குக் கருவியாகுமென்றும், ஆதலினால் ஞானத்திற்கு ஒருசார்பாக உதவுகிறதென்றும் கூறியிருக்கிறார். ஆனால்பாரமார்த்திக ஞானத்திலே ஒருவகை கருமத்தொடர்பும் இருத்தல் கூடாதென்னு முடிபை நான் கண்டிக்கவில்லை. மனிதன் வியவகார நிலையிலேயிருந்து கருமம், கருத்தா, கருமபலன் என்னுமிவற்றை அறிந்திருக்கும்பொழுது, ஏதாவது ஒரு தொழிலைச்செய்யாது அவனால் சும்மாவிருக்க முடியாது. கருமமானது

மனிதனுடைய இயற்கையோடு ஒன்றுபட்டிருக்கும் பொழுது ஆத்ம ஞானத்தை வெளிப்படுத்துவதற்கு உதவியாகிய கருமங்களை நீ என் செய்யக்கூடாது? பாரமார்த்திக நிலையிலே எல்லாக் கருமங்களும் அஞ்ஞானத்தின் காரியமென்று கூறுவது உண்மையேயாயினும் வியவகார நிலையிலே கருமம் மிகவும் பயனைத்தருவது. நீ ஆத்மஞானத்தை அடைந்துவிட்டால், நீ கருமம் செய்வதும் செய்யாதிருப்பதும் உன்னுடைய இஷ்டப்படி நடப்பனவாம். அந்த நிலையிலே உலகத்துச் சீவர்களுக்கு நன்மை தரத்தக்க கருமங்களையே நீ செய்வாய். பிரம ஞானம் பெற்ற பின்பு நீ சுவாசிப்பதும் கூட ஜீவர்களுடைய நன்மைக்கேயாகும். அதன் பின்பு நீ நினைத்துச்சூழ்ந்து கருமம் செய்ய வேண்டியதில்லை. அறிந்து கொண்டாயா?

சிஷ்யர்—வேதாந்த நிலையிலிருந்து கருமத்தையும் ஞானத்தையும் சமரசப்படுத்திக் கூறும் இந்த முடிவு மிகவும் அழகியது. இத்தருணத்திலே இராப்போஜனத்திற்கு மணி அடித்தது. பிரசாதம் எடுக்கப் போகுமுன்னர் சிஷ்யர் கைகளைக் கூப்பி வணக்கத்தோடு நின்று சுவாமிகளே! "இந்த சீவியத்திலேயே அடியேன் பிரமஞானத்தை அடையும்படி கடாக்ஷித்தருளவேண்டும்" என்றார். சுவாமிஜி சிஷ்யருடைய சிரத்திலே தமது கரத்தை வைத்து "மகனே! அஞ்சவேண்டாம். நீ உலகத்திலுள்ள சாதாரண மனிதரைப் போன்றவனல்ல. இல்வாழ்பவனுமல்ல முற்றிலும் சந்நியாசியுமல்ல, ஒரு புதுமாதிரியாயிருக்கிறாய்" என்றார்.

ஓம் தத் ஸத்.